
# ஓர்மம்



**வேல் அமுதன்**

# ஓர்மம்

சிறுகதைத் தொகுப்பு

## வேல் அமுதன்

வளப்புலம் ஒழுங்கை, மாயெழு, குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

இன்றைய தொடர்பு முகவரி

8/3/3 மெற்றோ மாடிமனை, 55ஆவது ஒழுங்கை, கொழும்பு-06.

தொலைபேசி 599488 தொலை நகல் 074-514 396 மின்னஞ்சல் amuthan@sltnet.lk

# AURMUM

A Collection of short stories

by Vel Amuthan

| | | |
|---|---|---|
| First Edition | : | 14. 04. 2002 |
| Copyright | : | Author |
| Cover Concept | | |
| & Type set by | : | Mrs. Muhunthan Pirabajini |
| Pages | : | xxiv + 120 = 144 |
| Size | : | 1/8 |
| Paper | : | 80 GSM Bank Paper |
| Type | : | 11 Point |
| Binding | : | 300 GSM Art Board; Sectional Binding |
| Copies | : | 1000 |
| Printed at | : | Unie Arts (Pvt) Ltd., Colombo 13. |
| Published by | : | Author |
| | | Mayelu, Vallappulam Lane, |
| | | Kurumpasiddy, Tellippalai. |
| Price | : | Rs. 200/- |

Present contact Address:
8/3/3 Metro Apartment, 55th Lane,
Colombo - 06
Tel : 599488 Telefax : 074 - 514396
e-mail : amuthan@sltnet.lk

# சமர்ப்பணம் ....

இசை வாத்தியம், நடனம், சங்கீதம், பண்ணிசை, பஜனை, சமயச் சொற்பொழிவுகள், புராணப் படிப்பு, காவடி, தாளக் காவடி, பறவைக் காவடி, கரகம், கும்மி, வசந்தன், கோலாட்டம், பொம்மலாட்டம், பொய்க்காலட்டம் ஒப்பனை, நாட்டுக் கூத்து, நாடகம், நாவன்மை, சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, விமர்சனம், சிற்பம், சித்திரம், புகைப்படம், புளொக் வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு, செய்திப் பத்திரிகை, அறிவிப்புக் கலை, அரங்க அமைப்பு, திரைப்படம் அரும்பொருள் - தொல்பொருள் சேகரித்தல், வரலாற்றுப் பதிவுகள் ஆவணப்படுத்தல் -

முதலிய பல்வேறு கலைகள் வேர் விட்டுத் தழைத்தோங்கிய கலைப் பூமி - கவின்மிகு கிராமம் எம்மூர் குரும்பசிட்டி.

எம் குரும்பசிட்டி அன்பு மாதாவின் பாதார விந்தங்களில் **இந்நூல் சமர்ப்பணம்** !

# சமர்ப்பணம் ....

[illegible]

[illegible]

[illegible]

# உள்ளே. . .


| | | |
|---|---|---|
| என்னுரை | - | i |
| அணிந்துரை | - | x |
| மானுடம் சாவதில்லை | - | 1 |
| ஆத்ம சுகம் | - | 9 |
| காகித ஓடம் | - | 19 |
| உள்ளொளி | - | 31 |
| நற்சிந்தனை | - | 43 |
| திருவிளையாடல் | - | 55 |
| ஓர்மம் | - | 65 |
| கலை உள்ளம் | - | 79 |
| பிறந்தநாள் பரிசு | - | 91 |
| ஒட்டுண்ணி | - | 105 |


இக்கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே; இவை எவரையும், எவற்றையும் எவ்வகையிலும் குறிப்பிடுவன அல்ல!

# என்னுரை

நிகழ்வுகளின் பாதிப்பு ஏற்படுத்தும் மனக் காயங்கள் அநேகமாக காலத்தால் தேற்றம் பெறுகின்றன. இருப்பினும், சில சமயங்களில் சிலவற்றின் பாதிப்பு மன மேல் மட்டத்தை ஊடறுத்து, அதன் ஆழ் நிலையை அடைந்து, மனப்போக்கின் பாதையையும், பருமனையும், வேகத்தையும் புரட்சிகரமாக மாற்றி, சம்பந்தப்பட்டவரைப் புதியவராக மாற்றியமைக்கும் இயல்பு கொண்டதுமாக அமைந்தும் விடுகின்றது.

இந்தகைய புரட்சிகர மனமாற்றத்திற்கு ஆளாவோா் அநேகர். அவர்களுள் யானும் ஒருவன்.

□ □ □

**வேல் அமுதன்**

அப்போது எனது வயது பத்து என நினைவு. 1948ஆம் ஆண்டாக இருக்கலாம். அதாவது, எனது பாலப் பருவம் அது.

குரும்பசிட்டி கிழக்கில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னை முத்துமாரி அம்மன் ஆலய முன்றில் இருந்து ஒரு பாத யாத்திரை தொண்டமானாறு செல்வச்சந்நிதி தேர்த் திருவிழா மஹோற்சவத்துக்குக் காலை ஐந்து மணிக்குப் புறப்படுகின்றது.

வழியில் எம்முடன் இணைந்து கொண்டவர் உட்பட எம் கோஷ்டியில் சுமார் ஐம்பது பேர். வழி, தெருவெல்லாம் சிவபுராணப் பாராயண பஜனையோடு பக்திப் பரவசமாகச் சென்று கொண்டிருக்கின்றோம். பண்ணிசைப் பாடகர் ஒருவர் சிவபுராண ஓரடியினை மனமொன்றி

வளப்புலம் ஒழுங்கை,
மாயெழு, குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
05. 03. 2002

சுவையாக இசைக்க, அவ்வடியினை மீள உற்சாகத்தோடும், உரக்கவும் பாடியபடி யாம் சென்று கொண்டிருக்கின்றோம்.

ஈழகேசரி பொன்னையா வீதி, பலாலி வீதி, வசாவிளான் சந்தி எனப் பல இடங்களைக் கடந்து, யாம் இப்போது பண்டத்தரிப்பு-அச்சுவேலி வீதியில் ஒட்டகப்புலச் சம்பந்தர் வைத்தியசாலையைக் கடந்து, மேலும் கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

வழியில் ஓர் ‘தண்ணீர்ப் பந்தல்’. எமது கோஷ்டி ஒழுங்கை உடைத்து முதன் முதலில் முண்டியடித்துக் கொண்டு தாக சாந்திக்குப் பந்தலுக்கு ஓடிச் சென்றவன் யான்.

பந்தலின் வலது கை ஓரம் கிடுகு ‘ப’ வடிவ அடைப்புக்களில் வைக்கப்பட்டிருந்த பெரிய வாங்கின் மேல் கிடாரங்களிலும், அண்டாக்களிலும் ஊறுகாய்த் தண்ணீர், சர்க்கரைத் தண்ணீர், தேசிக்காய்த் தண்ணீர், மோர் முதலிய தாக சாந்தி நீராகாரங்கள் இருந்தன.

சர்க்கரைத் தண்ணீருக்குப் பொறுப்பாக இருந்த பெரியவரிடம் “ஐயா, சக்கரைத் தண்ணி” என்றேன். அவர் “தம்பி!... உள்ளேயோ, வெளியேயோ,” என வினவினார். பெரியவரின் பேச்சின் தாற்பரியம் அந்நேரம் எனக்கு விளங்கவில்லை! ஏதாவது சொல்லி எப்படியாவது சர்க்கரைத் தண்ணீரைப் பெற்றால் போதும் என்ற தவிப்பில், அந்நேரம் வாயில் வந்த ‘வெளி’ என்ற சொல்லைத் தவறுதலாகச் சொன்னேன்.

எனக்குச் சர்க்கரைத் தண்ணீர் யானை மார்க் சோடா வெற்றுப் போத்தலில் வார்த்து ஏனோ தானோ எனத் தரப்பட்டது. என்னைத் தொடர்ந்து வந்தவர்கள் வயதானவர்கள் - விடய விளக்கமுடையவர்கள். அவர்கள் “உள்ளே” என பெரியவருக்குச் சொல்லிக் கொள்ள, அவர்களுக்கான நீராகாரம் தகர மூக்குப் பேணிகளில் மிகப் பக்குவமாக வழங்கப்பட்டது.

‘உள்ளே’, ‘வெளியே’ என்பன சாதாரண சொற்கள் அல்ல; பரிபாஷை. அவை சமூக ஒடுக்குமுறையின் வெளிப்பாடு என்பதை பின்னேதான் யான் நன்றாக விளங்கி, அன்றைய சமூக அமைப்பின் சிறுமை கண்டு, சீற்றம் கொண்டேன்.

என் வாழ்வில் ‘சர்க்கரைப்பந்தல் நிகழ்வு’ உதிரியான ஒரே ஒரு நிகழ்வு அல்ல; பிஞ்சு மனதில் நெஞ்சைப்பிளந்த அந்நிகழ்வைத் தொடர்ந்து நிகழ்ந்த வேறும் சில சமூகக் கொடுமையான நிகழ்வுகள் என் சீற்றத்தைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தன.

சமூக அமைப்பில் பாரிய பழுது உண்டு; அதற்கு உடன் பரிகாரம் தேவை; அப்பரிகாரமும் இலேசான ஒன்றல்ல; இருந்தும், என்னால் முடிந்தளவு சமூக சீர்திருத்தத்திற்கான பணி ஆற்ற வேண்டும் என்ற வேகம் பெற வைத்தவை அக்கால அக்கொடூர நிகழ்வுகள்தான்!

யான் கட்சி அரசியல் விடயங்களில் தலையிடுவது இல்லை. எனவே, சமூக சீர்திருத்தத்திற்கான அரசியற் கலப்பற்ற வழிமுறைகளைத் தேடலானேன்.

□ □ □

சமூக சீர்திருத்தத்திற்கான உந்து விசையை வழங்கவல்லது கலை இலக்கிய அமைப்புக்கள் என்பதை உணர்ந்து கலை இலக்கிய அமைப்புக்களைத் தோற்றுவித்து, கணிசமான சேவை ஆற்றியுள்ளேன் என்பதை மிக அடக்கத்தோடு குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். எனது உழைப்பில் உருவாகி நற்பணியாற்றிய கலை இலக்கிய அமைப்புக்கள் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- சங்கப்பலகை [நூலகம்]
- இலங்கை அறிவு இயக்கம் [அறிவகம்]
- தமிழ் கதைஞர் வட்டம் [தகவம்]
- வள்ளுவர் மாமன்றம்
- வேல் வெளியீட்டகம் [வேகம்]
- மதி கலைஞர் வட்டம் [மகவம்]

மேற்தரப்பட்ட கலை இலக்கிய அமைப்புக்களுள் கால நெருக்கடியின் விளைவாக 'மகவம்' மாத்திரமே எனது வழிகாட்டலில் இன்றும் மட்டான வேகத்தில் சேவையாற்றி வருகின்றது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

யான் சிறந்த அரங்க அமைப்பாளன் எனச் சான்றோரால் பெரிதும் வியந்து பாராட்டப்பட்டவன் என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொன்றாகும்.

□ □ □

'நற்சிந்தனைகள்' விதைக்கப்பட்டால், சமூக சீர்திருத்தம் முளைவிடும் என அறிந்து, எம் குடும்ப வைபவம் மங்களமோ அமங்களமோ எதுவாயினும் அனைத்திலும் 'சிந்தனை அரங்கம்' எனும் அம்சத்தையும் இணைத்து வெற்றிகரமாக நடத்தி வருகின்றேன்.

இந்நேரம் ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது...

யான் அன்று ஒரு வகையில் அநாதை. அநாதரவான எனக்கு அன்றைய ஒரே ஒரு பற்றுக்கோடு என் அன்பு அன்னை திருமதி வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்கள் மாத்திரமே. அத்தோடு, எனக்கு இளமையில் வறுமை. எனக்கு நேர்ந்த அத்துர்ப்பாக்கிய நிலை இன்னொருவருக்கு நேரக்கூடாது என்பதும் எனது நேர்த்தி.

நாம் குரும்பசிட்டி மாயெழுவில் இருந்து புலம் பெயர்ந்து 1987 ஆம் ஆண்டு ஊரெழு கிழக்கில் குடியிருந்த வேளை என் ஒரேயொரு பற்றுக்கோட்டையும் யான் இழந்து விட்டேன்.

அன்னையின் ஈமக்கிரியையை 'தமிழ் ஈமக்கிரியையாக' - அதாவது, வழமையான ஈமக்கிரியை விதிகளை முற்று முழுதாக மாற்றி, பிராமணத்துவத்திற்கும் வர்ணாச்சிரமத்திற்கும் இடம் கொடாது வள்ளுவ வழியில், எளிமையாக நடத்தினேன்.

அந்தியேட்டி அன்று 'தமிழில் ஈமக்கடன்' என்ற மகுடத்திலான சிந்தனை அரங்கத்தை அமைத்து, யாழ் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர், திரு. அண்ணா இராஜேந்திரன் முதலிய அறிஞர்களையும் உரை நிகழ்த்தச் செய்து புரட்சிகரமான மனமாற்றத்திற்கு வழிவகுத்தேன்.

□ □ □

எனக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள் இரண்டு...

ஒன்று. யான் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டமை.

குரும்பசிட்டி வித்தியாசமான கலைத்துறைகளில் ஈடுபாடுடைய வித்தியாசமான கலைஞர்களைக் கொண்ட வித்தியாசமான ஊர்.

குரும்பசிட்டியின் ஒரே ஒரு பலம் வாய்ந்த சமூக நிறுவனமாக அந்நாளில் திகழ்ந்த சன்மார்க்க சபையின் சன்மார்க்க இளைஞர் சங்க 'சன்மார்க்க தீபம்' பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்து நன்றாகப் புடம் போடப்பட்டேன். எம்மூர் பிரபல இலக்கிய விமர்சகர் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்களின் வழிகாட்டல் எனக்குக் கிடைத்தது என்றால் கேட்கவும் வேண்டுமா?...

மற்றது. யான் நீண்ட காலம் தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியில் பயின்றமை.

தமிழ்த் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட நாவலர் பெருமானின் நன்முயற்சிகளை விரும்பி முன்னெடுத்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் அயரா உழைப்பில் உருப்பெற்ற கல்வி நிலையம்தான் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் அடியொட்டி அன்றும் இன்றும் செயற்படும் மகாஜனக் கல்லூரியில் அமரர் தெ.து. ஜெயரத்தினம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் யான் கல்வி பயின்றேன்.

வித்துவான் நா. சிவபாதசுந்தரம், கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, எழுத்தாளர் த. சண்முகசுந்தரம் [தசம்] முதலியோரிடம் மகாஜனவில் தமிழ் பயின்றவன் யான்.

கல்லூரிக் காலத்தில் 'வெண்ணிலா' எனும் வகுப்புக் கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தேன். தமிழ் மன்றப் பத்திரிகை ஆசிரியராகவும் இருந்தேன். எம் பத்திரிகை ஆக்கத்திற்கு அளவையூர்க் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை ஆசிரியர் பொறுப்பாக இருந்ததால், யான் பிரகாசிக்க முடிந்தது.

□ □ □

ஆக்க இலக்கியத் துறையைப் பொறுத்தவரை, மகாஜனவின் ஆசிரியரும், எழுத்தாளருமான த. சண்முகசுந்தரம் [தசம்] அவர்களே என்னை ஆட்கொண்ட 'ஞானகுரு' ஆவர். ஆசிரியர் சண்முகசுந்தரத்தின் வழிகாட்டல் அவரிடம் யான் கற்ற காலம் முதல் அவர் சிவனடி சேர்ந்த காலம் வரை எனக்குக் கிடைத்தமையை யான் எனக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

ஆசிரியர் சண்முகசுந்தரம் அவர்களை முதன் முதலில் அவரின் இல்லத்தில் யான் சந்தித்தமை இன்னொரு சுவாரஸ்யமான கதை...

நான் மகாஜனவில் படித்த காலம் அது. 1954-ஆம் ஆண்டு என ஞாபகம்.

வகுப்பு நேரம்.

சண்முகசுந்தரம் மாஸ்டர் எமது வகுப்புக்கு அக்கறையாக 'குடியியல்' பாடம் கற்பித்துக் கொண்டு இருக்கின்றார்.

ஏனோ தெரியாது. கட்டுப்பாட்டு எல்லையை மீறி எனது ஆர்வம் அந்நாளில் யான் எழுதிக் கொண்டிருந்த 'சூழ்ச்சி வலை' என்ற நாவல்மீது சென்றுவிட்டது. ஆசிரியர் காணமுடியாத விதத்தில் அப்பியாசக் கொப்பியால் கையெழுத்துப் பிரதியை மறைத்த வண்ணம் நாவலை யான் எழுத ஆரம்பித்து விட்டேன். ஆனால், யான் ஒளித்ததை ஆசிரியர் எப்படியோ அவதானித்து விட்டார்! மாணவரின் ஒழுங்கீனத்தை மன்னிக்கும் சுபாவம் சண்முகசுந்தரம் ஆசிரியருக்கு கிஞ்சித்தும் இல்லை. சீற்றம் உற்று சீறும் வேங்கையாய் என்னை நோக்கி மிக வேகமாக வந்தார். எனது உடம்பு நடுக்கம் எடுத்தது; வியர்வை கொட்டியது; தேகம் பதம் பார்க்கப் படப்போகிறது என அஞ்சினேன்.

"என்ன அது? என்ன எழுதுகிறாய்?" என்ற கோப அதட்டலுடன் என்னிடம் இருந்த கடதாசிக் கத்தையைப் பிடுங்கி எடுத்தார். ஒரு சிலவற்றை வாசித்தவர், என்ன ஆச்சரியம்!... படிப்படியாகத் தணியும் ஆத்திரத்தோடு "நாளைக்கு என்னை எங்கடை வீட்டில வந்து சந்தி" என்று சொல்லிவிட்டு மீண்டும் குடியியல் பாடம் கற்பித்தலைத் தொடர்ந்தார்.

அன்றைய இரவு எனக்கு நித்திரை இல்லை. அடுத்தநாள் ஆசிரியரை சந்திக்கும் வரை, குலை நடுக்கமும் என்னை விட்டு முற்றாகப் போகவில்லை. புறம்போக்காக அவரின் வீட்டில் ஏச்சுப் பேச்சு விழுமோ, அடி விழுமோ என்று அஞ்சிய எனக்கு, அதிர்ச்சி காத்திருந்தது அங்கே!...

"நான் உன்ரை நாவலைத் திருத்தித் தாறன்", என வாக்களித்த ஆசிரியர், தனக்கு லீவு கிடைக்கும் வேளை எல்லாம் என்னை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கிழக்கு வீதியில் அமைந்த அவரின் வீட்டிற்கு வரச்செய்து நாவலைத் திருத்தித் தந்தார்; எழுதல் நுட்பத்தையும் பயிற்றுவித்தார்.

□ □ □

யான் எழுதி கையெழுத்துப் பிரதியாக எனது இல்லத்தில் [இல. 67 கிரான்பாஸ் றோட், கொழும்பு- 14] பாதுகாப்பாக இருந்த இலக்கியக் கருவூலங்கள் அநேகம். அவற்றுள் மூன்று நாவல்கள் உட்பட நூற்றுக் கணக்கானவை 1983 ஆடிக் கலவரத்துள் [25-07-1983] காடையர்களால் வீட்டு சாமான்களோடு சாமான்களாக வாரி அள்ளி வீட்டு முன்வீதி மத்தியில் கொட்டி- குவித்து- கொளுத்தி என் கண் முன்னாலேயே சாம்பராக்கப்பட்டன. கைவசம் என்னிடம் மிஞ்சி இருப்பவை ஒரு சில மாத்திரம்தான்!

எனக்கு நேர்ந்த அவ்வகையான இழப்பு எந்த ஒரு எழுத்தாளனுக்கும், எஞ்ஞான்றும் நிகழக் கூடாது என்பது எனது பலத்த பிரார்த்தனை.

□ □ □

யான் சின்ன வயதிலிருந்து சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், நாவல்கள் முதலிய கலை இலக்கிய வடிவங்களை எழுதி வருகின்றேன்.

1983ஆம் ஆண்டு ஆடிக் கலவரத்தில் கொழும்பில் பாதிக்கப்பட்டு, மீளத் தலைநகருக்கு 1995ஆம் ஆண்டு வந்ததைத் தொடர்ந்து, முதல் ஈராண்டுகள் எனக்கு வாய்ப்பாக இருந்தன. இந்த ஈராண்டுகளில் யான் அதிகப்படியாகச் சிறுகதைகள் எழுதினேன். இந்தக் காலத்தில் எழுதி, இலங்கைத் தேசிய பத்திரிகைகளில் வெளியான சிறுகதைகளுள் பத்தை மாத்திரம் பிரசுரமான நாளொழுங்குப் பிரகாரம் தெரிந்தெடுத்து சில திருத்தங்களோடு ஓர்மம் சிறுகதைத் தொகுதியாக இன்று வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது சிறுகதைகளைத் தங்களது பத்திரிகைகளில் பிரசுரித்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த சஞ்சீவி, வீரகேசரி, தினத்தந்தி, தினகரன், தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தினருக்கு யான் கடமைப்பட்டவன். அவர்களுக்கு எனது இருதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

எழுதி வெளிவந்த சிறுகதைகளைத் தொகுத்து நூலாக்கும்படி ஊக்குவித்தவர்கள் என் பேரன்புக்குரிய இலக்கிய நண்பர்கள் மாயெழு சட்டத்தரணி மு. வே. மகாதேவன், ஊரெழு செ. சத்திதரன் முதலியவர்கள். அழகாகக் கணனியில் அச்சமைப்பு செய்து தந்தவர் திருமதி முகுந்தன் பிரபாஜினி. சிறிதும் சிரமத்தைப் பாராது, சரவைத்தாளை ஒப்பு நோக்கி உதவியவர் எழுத்தாளர், சைவப் புலவர் அநு. வை. நாகராஜன். நூலுக்கு கனகாத்திரமான அணிந்துரை எழுதித் தந்தவர்கள் 'தினக்குரல்' பிரதம ஆசிரியர் ஆ. சிவநேசச்செல்வன் அவர்களும், முதுபெரும் எழுத்தாளர் திரு. செங்கை ஆழியான் அவர்களும். 'அறிமுகக் குறிப்பு' எழுதித் தந்தவர் கவிஞர் மாவை வரோதயன். நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்தவர்கள் கொழும்பு யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தினர். எனக்குப் பக்கத்துணையாக நின்று பல்வேறு உதவிகள் செய்து என்னை ஆதரித்தோர் ஊரெழு ச. சண்முகநாதன், குரும்பசிட்டி வி. ஜெகதீஸன், வி. ச. சுப்பிரமணியம் முதலிய ஆத்ம நண்பர்கள். இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்த என்னுரையை எழுதும் இந்நேரம் உதவி செய்த மற்றைய நண்பர்கள் சிலரைக் குறிப்பிடத் தவறி இருக்கலாம். அப்படி இருப்பின், அவர்கள் என்னைப் பொறுத்தருளி, என்றும் போல் இனியும் உதவ முன்வர வேண்டும் எனவும் அன்பாக வேண்டுகின்றேன்.

எந்நிலையிலும் எனக்கு மேலான ஆதரவு தருபவர்கள் எனது வாசக அன்பர்கள். அவர்கள் தொடர்ந்தும் ஆதரவு நல்க வேண்டும். குறிப்பாக எனது ஆக்கம் பற்றிய கருத்துக்களை 8/3/3 மெற்றோ மாடிமனை, 55வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06 என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி உதவுமாறு தயவாக வேண்டுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

# அணிந்துரை

*நூலாசிரியர் பற்றி...*

மாயெழு, குரும்பசிட்டியைச் சொந்த ஊராகக் கொண்ட வேலுப்பிள்ளை அமுதலிங்கம் எனும் இயற் பெயர் கொண்ட நண்பர் வேல் அமுதனை அவர் தெல்லிப்பளை, மகாஜனக் கல்லூரியில் படித்த காலத்தில் இருந்து இன்றுவரை பல்லாண்டு காலமாக நான் நன்கறிவேன்.

வேல் அமுதன் மகாஜனவில் படிக்கும் காலத்தில் 'தமிழ் மன்றம்' நிகழ்வுகளில் பங்குபற்றிப் பேசியவர்; பேச்சுப் போட்டி களில் கலந்து விருதுகள் பெற்றவர்; வட மாகாணப் பாடசாலை மாணவர் மத்தியில் [NPTA] நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பங்கு பற்றிக் கல்லூரிக்குப் புகழ் சேர்த்தவர்; பாடசாலை 'மகாஜனன்' சஞ்சிகையில் கதைகள் எழுதியவர்; வகுப்பு 'வெண்ணிலா' பத்திரிகையின் ஆசிரியராக இருந்து சிறப்பாக நடத்தியவர்; நாடகங்களில் நடித்தவர் கல்லூரி இல்லங்களிடை நடந்த நாடகப் போட்டியில் 'லோட்டன்' இல்லம் தயாரித்து மேடையேற்றிய கவிஞர் செ. கதிரேசர்பிள்ளையின் நாடகத்தில் முக்கிய பாகம் எடுத்து நடித்து பாராட்டுப் பெற்றவர்; எஸ். எஸ். ஸி. வகுப்பில் தமிழ் இலக்கிய பாடத்திற்கு அதிகூடிய புள்ளிகளைப் பெற்றமைக்கு 'கல்லூரி சிறப்பு' பரிசினைத் தட்டிக்கொண்டவர்;

**ஆ. சிவநேசச்செல்வன்** *M. A., M. Sc.,*
*பிரதம ஆசிரியர்*
*'தினக்குரல்'*

68, எலி ஹவுஸ் றோட்
கொழும்பு 15.
09. 02. 2002

அதிபர் ஆண்டு அறிக்கையில் இவரின் கலை, இலக்கிய, சமூகப் பொதுப்பணி ஈடுபாடு போற்றிக் குறிப்பிடப்பட்டு இவர் வியந்து உரைக்கப்பட்டவர்.

வேல் அமுதன் துணிவும், திடசித்தமும், விடாமுயற்சியும், 'பட்டறிவும்' நிரம்பப் பெற்றவர்.

கல்லூரிக் காலம் தொட்டு இன்றுவரை எனக்கு இவர் இப்படித்தான் காட்சி தருகின்றார்.

இலக்கிய உலகில் மட்டுமல்லாது தனிமனித வாழ்க்கையிலும் பல்வேறு சாதனைகள் புரிந்து வருபவர் வேல் அமுதன். இவர் ஈழத்துத் தமிழ் கூறும் நல்லுலகில் தனிமனித நிறுவனமாக இயங்கி ஆற்றிய பணிகள் பசுமையானவை; ஒவ்வொரு சம்பவமும் இலக்கிய நெஞ்சங்களின் மனதிலே ஆழமாய்ப் பதிந்து உள்ளன.

ஈழத்துத் தமிழறிஞர்கள் மட்டுமல்ல, தமிழகத்திலிருந்தும், தமிழ் கூறும் நல்லுலகு எங்கணும் இருந்தும் வந்து யாழ்ப்பாண மண்ணில் கால் பதித்த இலக்கிய மேதைகளும், அறிஞர்களும், கலைஞர்களும், சமயப் பெரியார்களும் குரும்பசிட்டி சன்மார்க்க சபை என விழுது விட்டு, நிழல் பரப்பி ஆறுதல் தந்த ஆலமர நிழலின் செழுமையை உணர்ந்து மனநிறைவோடு சென்றனர். வேல் அமுதனின் இலக்கிய மூச்சும், ஆர்வமும், நிரம்பிய கொள்கைப் பிடிப்புடன் எழுச்சியும் பெறுவதற்கு உரிய மூலவிசையாக அமைந்தது இச்சன்மார்க்க சபையே என்பது எனது துணிவு.

வேல் அமுதனின் இலக்கிய ஆர்வம் மாணவப் பருவத்திலிருந்து வளர்வதற்கு அவர் கல்வி பயின்ற மகாஜனக் கல்லூரியும் உந்து சக்தியாக விளங்கியுள்ளது. பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையின் இலட்சிய பூமியாக எழுச்சி பெற்ற மகாஜனக் கல்லூரி அவர் புதல்வராகிய தெ. து. ஜெயரத்தினம் அவர்களின் வழிகாட்டலில் 'வாணியின் வீடாக' எழுச்சி பெற்றது. மகாஜனக் கல்லூரியில்

உயிர்பெற்றெழுந்த இலக்கியச் சூழலிலே வாழையடி வாழையாக ஈழத்து இலக்கிய உலகிற்கு அணிசெய்யும் பல ஆக்க இலக்கியக்காரர்கள் உருவாகி வந்துள்ளனர்.

அ. செ. மு., அ. ந. க., மஹாகவி எனக் கனக செந்திநாதனால் இனங்காணப்பட்ட மகாஜனா அளித்த மும்மணிகள், ஈழகேசரிப் பண்ணையில் வேரூன்றி வளர்ந்தவர்கள். கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, த. சண்முகசுந்தரம், புலவர் ம. பார்வதிநாதசிவம், சோமகாந்தன், கோகிலா மகேந்திரன், நாகலிங்கம் சண்முகலிங்கன் என்று நீளும் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டிய இன்னொருவர் வேல் அமுதன் அவர்கள்.

இவர் மாணவ பருவத்திலே இலக்கிய உலக பிரவேசத்திற்கு வழிகாட்டியாகவும், ஆதர்சமாகவும் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, புலவர் நா. சிவபாதசுந்தரம், த. சண்முகசுந்தரம், கனக செந்தில்நாதன் முதலியோர் விளங்கியமை இவரை ஒரு பண்பட்ட எழுத்தாளராக மாற்றியுள்ளது. செழுமை வாய்ந்த இலக்கிய நடை கைவருவதற்கு உரமூட்டியவர் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை.

நாடகங்களை எழுதுதல், தயாரித்தல், சமூக நற்பணிகளில் ஈடுபடுதல், இலக்கியப் படைப்புக்களுக்கு அப்பால் இலக்கிய இயக்கங்களை அமைத்து நடத்த வேண்டும் என்ற உணர்வுக்கும் பின்னணியாக திரு. த. சண்முகசுந்தரம் அவர்கள் செயற்பட்டார். இலங்கை அறிவு இயக்கம் [அறிவகம்], தமிழ்க் கலைஞர் வட்டம் [தகவம்], வள்ளுவர் மாமன்றம், மதி கலைஞர் வட்டம் [மகவம்] ஆகிய சமூக இலக்கிய இயக்கங்களை வேல் அமுதன் நிறுவி, நண்பர்களின் உதவியோடு நாடளாவிய நிலையில் நடாத்திச் சாதனை படைத்தமை பாராட்டப்பட வேண்டியது.

எண்பத்து மூன்றில் இந்த நாட்டில் வெளிப்பட்ட இனவாதப் பிரளயத்தின் மத்தியில் வேல் அமுதன் 'அனைத்தையும்' இழந்து தனியாளாகிப் போனாலும் வழமையான ஆர்வத்திலிருந்து விடுபடாமல், தனது பணிகளை முன்புபோல தொடர முற்பட்டார். 'மதி அக்கடமி' எனும்

கல்வி நிறுவனத்தைத் தான் பிறந்த குரும்பசிட்டி, மாயெழுவில் நிறுவி, அதனைத் தொடர்ந்து அதன் கிளையை ஊரெழுவில் அமைத்து, அவற்றின் அதிபராகத் தன்னடக்கத்துடன் பணியாற்றத் தொடங்கிய வேல் அமுதனின் இலக்கியப் பணிகள், மீண்டும் தொடரும் மிடுக்கோடு ஆரம்பமாகின. இலக்கிய உணர்வும், சமூகப் பணியும், ஆக்க இலக்கியத் தேடலும் வேல் அமுதனின் நரம்பு நாளங்களில் எல்லாம் ஊறியிருந்தமையை ஆடிக் கலவரத்தால் உசுப்பவோ, அழிக்கவோ முடியவில்லை.

கட்டுடைத்துப் பிரவாகிக்கும் இலக்கிய உணர்வைக் கொண்டவர் வேல் அமுதன் என்பது உண்மை.

ஓர்மம் என்ற இந்தச் சிறுகதைத் தொகுதியில் அடங்கியுள்ள கதைகள் யாவும் தொண்ணூறுகளில் இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் எழுதியவை. இந்தக் கதைகளின் மூலமாக வாழ்க்கை ஓட்டத்தின் ஏற்றத் தாழ்வுகள் முதல், சமூக அமைப்பில் காணப்படும் பாரிய பழுதுகளை எல்லாம் தொட்டுக் காட்ட முற்பட்டுள்ளார். இந்தச் சிறுகதைகள் அனைத்தும் சமூக சீர்திருத்தப் பணியை உள்ளடக்கமாகக் கொண்டு எழுதப்பட்டவை. சமூக சீர்திருத்தத்திற்கான உந்துவிசையை இலக்கிய ஆக்கங்கள் மூலம் உருவாக்க முடியும் என்பதற்குத் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரும் வேல் அமுதன் ஓர்மம் சிறுகதைத் தொகுப்பு மூலம் வெற்றி கண்டுள்ளார். மேலும், வேல் அமுதனின் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் பட்டுத்தெறிக்கும் நாசூக்கான நறுக்குத் தெறிக்கும் தூய்மையான எண்ணங்களின் வெளிப்பாடுகளாக இக்கதைகள் அமைந்துள்ளன. முதுகு சொறியும் பழக்கமில்லாத நல்ல இதயம்; தகுதியறிந்து ஆற்றிய கருமங்கள் அறிவும் உணர்வும் கலந்த சாதனைகளாகியுள்ளமைக்கு இவருடைய இவ்வாக்கங்கள் சாட்சியாக அமைகின்றன.

வேல் அமுதனின் கலை, இலக்கிய, சமூகத் தொண்டு தொடர - சிறக்க என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

# அணிந்துரை

*நூலைப் பற்றி....*

நண்பர் வேல் அமுதனின் 'ஓர்மம்' என்ற இச்சிறுகதைத் தொகுதிக்கு ஓர் அணிந்துரையெழுத நேர்ந்தமை உண்மையில் எனக்கு மன நிறைவைத் தருகின்றது. மன நிறைவிற்கான காரணங்கள் இரண்டுள்ளன. ஒன்று வே. அமுதலிங்கம் என்ற தனிமனிதனின் இலக்கிய இயக்கம்; இரண்டு வேல் அமுதன் என்ற படைப்பாளியின் இலக்கியப் பங்களிப்பு.

வேல் அமுதன் குறித்துத் தனியொரு நூல் எழுதுமளவிற்கு அவர் பற்றிய இலக்கியத் தகவல்களுள்ளன.

1938ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆந் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தின் இலக்கிய மணம் கமழும் குரும்பசிட்டியில் பிறந்த அமுதலிங்கத்தின் இலக்கிய ஆர்வத்திற்கான பின்னணி அந்த மண்ணில் அவர் விழுந்தபோதே ஏற்பட்ட பந்தம் எனக் கருதுகின்றேன். குரும்பசிட்டியில் அவர் பிறக்கும்போதே, அந்த மண்ணில் கலை இலக்கிய ஜம்பவான்கள், ஈழகேசரி நா. பொன்னையா, இரசிகமணி கனகசெந்திநாதன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை முதலானவர்கள் அந்த மண்ணின் புகழையும் பெருமையையும் உலகறியச் செய்திருந்தனர். கோயில்களும், தோட்டங்களும்,

**கலாநிதி க. குணராசா**
**[செங்கை ஆழியான்]**

**75/10A,** பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
**10.02.2002**

தொழிற்சாலைகளும், பனங்கூடல்களும் இணைந்து அழகு செய்த குரும்பசிட்டிக் கிராமத்தின் ஆத்மாவை அங்கு வாழ்ந்த கலை இலக்கியப் பெருமக்கள் தமிழுலகு அறிய வைத்தார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில் அழகும், வளமும், அமைதியும், மகிழ்வும் ஒருங்கே தவழ்ந்த கிராமம் குரும்பசிட்டி. அதற்கு நிகர் அதுவேதான். அந்த மண்ணில் பிறந்த வேல் அமுதன் இலக்கியவாதியாக மலர்வதற்கு உவந்த சூழல் இயல்பாகவே அக்கிராமத்தில் விளங்கியது. பொன் பரமானந்தா வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற வேல் அமுதன் தன் உயர் கல்வியை மகாஜனக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். மகாஜனக் கல்லூரியின் புகழ் பூத்த ஆசிரியர்களான கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, திரு. த. சண்முகசுந்தரம், வித்துவான் நா. சிவபாதசுந்தரம், திரு. சி. நாகலிங்கம் போன்றோர் அவருக்குக் கலைச் சூழலைப் புரிய வைத்தனர். வேல் அமுதன் படைப்பாளியாகவும் இலக்கிய ஆர்வலராயும் உருவாக்கப்பட்ட கலைஞர். குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் இலக்கியச் சூழலை நன்கு பயன்படுத்திக் கொண்டு வளர்ந்தவர் வேல் அமுதன். இளம் வயதிலேயே 'சன்மார்க்க தீபம்' 'வெண்ணிலா' எனக் கையெழுத்துச் சஞ்சிகைகளை நடாத்திப் பலரின் பாராட்டினைப் பெற்றுக் கொண்டவர்.

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் எழுது வினைஞராகக் கடமையாற்றிய கால வேளையில் சில இலக்கிய அமைப்புகளை நண்பர்களோடு சேர்ந்து உருவாக்கினார். இலங்கை அறிவு இயக்கம் [அறிவகம்], தமிழ் கலைஞர் வட்டம் [தகவம்], வள்ளுவர் மாமன்றம், மதி கலைஞர் வட்டம் [மகவம்] என்பன வேல் அமுதனின் இலக்கிய நிறுவனங்களாம். இவற்றின் மூலம் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு அவர் தொண்டாற்றியுள்ளார். குறிப்பாகத் தகவம் என்ற அமைப்பின் மூலம், திரு. வ. இராசையாவின் துணையுடன் தமிழில் வெளிவந்த சிறந்த சிறுகதைகளை அடையாளம் கண்டு, அவற்றின்

படைப்பாளிகளைப் பாராட்டி, பரிசு வழங்கி, உந்து சக்தியாக விளங்கியுள்ளார். தகவம் ஆற்றிய இலக்கியப் பணி மிகப் பெரியதாகும். தமது சிறுகதைக்குத் தகவத்தின் முத்திரை கிட்டாதா என அங்கீகாரம் வேண்டிப் படைப்பாளிகள் அன்று ஏங்கி இருந்தனர். மகவம் என்ற அமைப்பின் மூலம் கலைஞர்களை இனங்கண்டு கௌரவிக்கும் பணியை இன்று செய்து வருகின்றார்.

வேலுப்பிள்ளை அமுதலிங்கம் சிறுகதை உலகிற்குப் புதியவரல்லர். அமுதன், வேல் அமுதன், வேல் அமிர்தன், வேல் அமுதலிங்கம், திருமாறன் எனப் பல புனைப் பெயர்களுள் மறைந்து நின்று நல்ல பல சிறுகதைகளைப் படைத்துத் தந்தவர். 1954களில் சிறுகதை உலகில் பிரவேசித்த வேல்அமுதன் இதுவரை முப்பத்தைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகளை ஈழத்தின் பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் படைத்தளித்துள்ளார். 1976ல் 'அறுவடை' என்ற நாடகத் தொகுதியையும், 1977ல் 'வைகறை' என்ற சிறுகதைத் தொகுதியையும், 1978ல் 'மாரீசம்' என்ற சிறுகதைத் தொகுதியையும், 1979ல் 'வாழும் வழி' என்ற நாடகத் தொகுதியையும் 'வேல் வெளியீடு' எனும் தன் பதிப்பகத்தின் ஊடாக வெளியிட்டுள்ளார். மாரீசம் என்ற சிறுகதைத் தொகுதி 1978ஆம் ஆண்டிற்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைச் சுவீகரித்துக் கொண்ட சிறப்பினை உடையது. எனவே சிறுகதை கலைக்கு வேல் அமுதன் புதியவரல்லர். ஏற்கனவே, சுய தரிசனம், கருநாகம் ஆகிய தரமான சிறுகதைகள் மூலம் ஈழத்துச் சிறுகதை உலகிற்கு அணி சேர்த்தவர்.

'ஓர்மம்' வேல் அமுதனின் மூன்றாவது சிறுகதைத் தொகுதியாகும். பத்து சிறுகதைகளின் தொகுப்பு இது. வேல் அமுதனின் சுய அனர்த்தங்களும், துயர வடுக்களும் அவரது சிறுகதைகளில் அழுத்தமாகப் பதிந்துள்ளன. 1983 ஆடிக் கலவரத்தில் தலைநகரில் ஏற்பட்ட வகுப்புவாத இனவேட்டைக்குத் தப்பி குரும்பசிட்டி மண்ணிற்கு ஓடிவந்த வேல் அமுதன், 1986ல் மீண்டும் குரும்பசிட்டியைக் கைவிட்டு ஊரெழுவுக்கு இடம் பெயர நேர்ந்தது.

1990களில் குரும்பசிட்டிக் கிராமமே முற்று முழுதாகத் தாம் வாழ்ந்த மண்ணைத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு, வீடு, மனை, தோட்டம், துரவு அனைத்துச் சொத்துக்களையும் பறிகொடுத்து எழில் கொஞ்சிய கிராமத்தை காடு மண்ட மாறவிட்டு, அகதிகளாக வெளியேறியது. இன்னும் அக்கிராம மக்களுக்கு விடியவில்லை. அந்த மாறாத துயரத்தின் சுவடுகளை வேல் அமுதனின் சிறுகதைகளில் அவதானிக்க முடிகின்றது. ஓர்மம் என்ற இத்தொகுதியில் உள்ள முதலாவது சிறுகதை 'மானுடம் சாவதில்லை' அதனையே பேசுகின்றது. "பொதிச்சுமைகளை விடப் பொல்லாத மனச்சுமை வலுவாக அமுக்குகிறது. மனம் வலிக்கிறது. ஒரு தடவையா அகதி?... இது மூன்றாவது தடவையல்லவா.!" மானுடம் சாவதில்லைச் சிறுகதையை வாசிக்கும் போது இதயம் கதறி அழுகின்றது; மானிடசோகம் ஒவ்வொருவரிலும் விரவிக்கிடக்கிறது; மனதைக் கனக்க வைக்கும் நல்லதொரு படைப்பு.

'காகிதஓடம்' இத்தொகுதியிலுள்ள மிகச் சிறப்பான ஒரு சிறுகதை என்பேன். பொறுப்பற்ற ஒரு மகனால் ஏமாந்து போகும் ஒரு தாயினதும் சகோதரிகளினதும் துயரக் கதை. அக்காமாரைக் கரை சேர்க்காது தன் சுயநல வாழ்வை ஆரம்பிக்கும் தம்பியை வெகு அற்புதமாகக் காகித ஓடத்தில் வேல் அமுதன் சித்திரித்துள்ளார். இதனை ஒவ்வொரு பெற்றோரும் படிக்க வேண்டும். இக்கதை சுட்டும் எச்சரிக்கையைப் புரிந்து செயற்பட வேண்டும். 'திருவிளையாடல்' என்ற சிறுகதை பரீட்சைத் திணைக்களத்தில் நிகழும் மோசடியொன்றினைத் தத்துவமாகச் சித்திரிக்கின்றது; செய்த பாவத்திற்குத் தெய்வத்தையும் துணை சேர்க்கும் பரிதாபநிலையை இக்கதை விபரிக்கின்றது. வெளிநாட்டு மாப்பிள்ளைகளின் திருகு தாளங்களை 'ஓர்மம்' என்ற

சிறுகதை மிகத் தெளிவாகச் சித்திரிக்கின்றது. தான் ஏமாந்து போனாலும், தன் சுயகால்களில் விழாமல் நிற்கமுடியும் என நிருபிக்கும் ஒரு புரட்சிப் பெண்ணை இச்சிறுகதையில் சந்திக்கின்றோம்; வகை மாதிரிக்கதை. கலைஞனின் உள்ளத்தின் மாண்பைக் 'கலைஞனின் உள்ளம்' சிறுகதையாலும், பெரிய மனிதரின் பச்சோந்தித் தனத்தைப் 'பிறந்தநாள் பரிசி'லும் காணமுடிகிறது. பிறந்தநாள் பரிசு, இத்தொகுதியிலுள்ள இன்னொரு சிறப்பான சிறுகதையாகும். சமூகச் சீரழிவுகளை இத் தொகுதியிலுள்ள சிறுகதைகள் சுட்டிக்காட்டுகின்றன.

வேல் அமுதன் தனது மனதில் காயங்களை ஏற்படுத்திய சம்பவங்களைச் சிறுகதைகளாக இறக்கி வைத்துள்ளார்; அதனால் அவை யதார்த்த பூர்வமான சிறுகதைகளாக மிளிர்கின்றன. வாசகனைச் சலிப்படையவோ, களைப்படையவோ வைக்காத எளிமையான உரைநடையில் தன் சிறுகதைகளை நகர்த்திச் செல்கிறார்; தான் கூறவிரும்பும் சமூகச் செய்தியை வாசகனை உய்த்துணரவிடாது, நேரடியாகவே அனுபவிக்க வைப்பது வேல் அமுதனின் படைப்பு முறை. அதனால், கருத்துவளம் தொனிக்கின்ற அளவிற்குக் கலைவளம் மேலோங்கவில்லையோவென்ற ஆதங்கம் ஏற்படக்கூடும். எனினும், வாசித்து முடிந்ததும் உணர்ச்சி நிலையொன்று எஞ்சுமாயின் அது படைப்பின் வெற்றியே. வேல் அமுதனின் சிறுகதைகள் அப்படியான உணர்வு நிலையை ஏற்படுத்தும் பாங்கின.

ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு வேல் அமுதனின் 'ஓர்மம்' தொகுதி நிறைவைச் சேர்க்கும்.

வாழ்த்துக்கள்!

# மானுடம் சாவதில்லை

நடந்த களையோ, சுமந்த களையோ மாத்திரமன்று எமக்கு. நாம் சுமார் ஆறு மைல்களுக்கு மேல் நடந்தும் விட்டோம்தான்! தோளில் ஒரு சுமையும், கையில் இன்னொரு சுமையுமாக சுமக்க முடியாத சுமைகளோடு இன்னமும் நாம் நடந்துகொண்டு இருக்கின்றோம்.

என்னுடன் எனது அன்பு மனைவியும், அருமை மகளும் வருகிறார்கள். இவர்களுக்கு எங்கு புகலிடம் தேடப்போகின்றேன். ஆர் எமக்கு அபயம் அளிப்பார்கள்? என்ன செய்வது? எங்கு போவது?... என்றெல்லாம் தெரியாது சுமைகளோடு தொடர்ந்து போய்க்கொண்டு இருக்கின்றோம்.

பொதிச் சுமைகளை விட பொல்லாத மனச் சுமை வலுவாக அமுக்குகின்றது; மனம் வலிக்கிறது. ஒரு தடவையா அகதி?... இது மூன்றாவது தடவை அல்லவா!.. 1983இல் கொழும்பு, கொட்டாஞ்சேனையில் பல இலட்ச இழப்பு; என் கண்முன்னாலேயே மிகக் கஷ்டப்பட்டுத் தேடிய கலை இலக்கிய களஞ்சியச் செல்வத்தின் எரிப்பு. 1987 முற்பகுதியில் என் சொந்த ஊரான குரும்பசிட்டி மாயெழுவில் மீண்டுமொரு அழிப்பு; சகாயநிதி மூலதனத்தில் தோற்றுவித்த 'மதி

அக்கடமி' கல்வி நிலையத்தை விட்டு ஓட்டம்; இன்று ஊரெழுவில்!.. வீட்டைப் பூட்டியும் பூட்டாததுமாக உடுத்த ஊத்தைப் பழைய சாரத்துடன் கைக்கு அகப்பட்ட ஒரு சில பொருட்களை மாத்திரம் சூட்கேசுகளுக்குள் திணித்தபடி மீண்டும் அகதியாகி ஓட்டமும் நடையுமாக விரைந்துகொண்டு இருக்கின்றோம்!

திரும்பி உயிருடன் வரமுடியுமா? திரும்பி வரும்போது வீடு அதே நிலையில் வீடாக இருக்குமா? வீட்டில் வைத்த பொருள் பண்டம் விட்டு வந்த மாதிரி கிடக்குமா? கஷ்டப்பட்டு இளைத்து இளைத்து தேடிய ஒரு சில தேடலும் உருப்படியாகக் கிடைக்குமா?.. நினைக்க முடியவில்லை; நினைக்க மனம் வலி வலியென வலிக்கின்றதே!

ஊழித்தாண்டவத்தின் ஆரம்பமோ? பிரளயத்தின் தொடக்கமோ?!.. எங்கும் பயம் - எங்கும் பயங்கரம் - எங்கும் பீதி!

ஹெலியின் ஆரவாரம் - ஷெல்லின் அகோரம் - துப்பாக்கி வேட்டுக்களின் அமளி.

ஆம்! ஒரு அகோர யுத்தம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது!. அதன் கோர வடிவத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது; தூரிகையால் தீட்ட முடியாது; நவீன புகைப்படக் கருவி உள்ளும் அதனை அடக்க முடியாது.

எங்கும் அகதி வெள்ளம் - பென்னம் பெரிய அலை அலையாக பெருக்கெடுத்தபடி. குழந்தைகள், வயோதிபர், கர்ப்பிணிகள், நோயாளிகள் - இப்படி, ஆயிரம் ஆயிரமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் அள்ளுப்பட்டு - தள்ளப்பட்டு - அல்லற்பட்டு...

அப்பப்பா! எதைச்சொல்லுவது? எப்படிச் சொல்லுவது? எவருக்குச் சொல்லுவது?..

வாழையடி வாழையாக நிலமும் புலமுமாக, வசதியும் வளமுமாக வாழ்ந்து வந்த பூர்வீகக் குடிமக்கள் சொத்துப்பத்துக்களை இழந்து, வீடு வாசல்களைப் பிரிந்து, கண்ணீரும் கம்பலையுமாக குறி தவறிய கணைகளாய் கால் கொண்டு செல்லும் தேசம் வரை போய்க் கொண்டே இருக்கின்றனரே!

வழியெல்லாம் புழுதி - புகை மண்டலம் - சுடர் விட்டெரியும் தீப்பிழம்புகள் - அதிர்வெடிச் சத்தம் - கெந்தக துர்நாற்றம் - அழிவுக்கோலங்கள் - அலங்கோலங்கள் - அல்லோல கல்லோலங்கள்!. தகர்ந்த இல்லங்கள் - சரிந்த கட்டடங்கள் - தீப்பற்றி எரியும் குடிசைகள்! இன்னமும் என்னென்னவோ!...

எமக்கு நேர் முன்னாக சுமார் நூறு யார்களுக்கப்பால் ஒரு பென்னம் பெரிய ஷெல் வீழ்ந்து வெடிக்கின்றது; சிதறிப் பறக்கிறது. நாம் அந்த பெரிய அரசமர மறைவில் ஒதுங்கியதால் தப்பிப் பிழைத்தோம். இல்லாவிட்டால், இந்நேரம் சின்னாபின்னமாகி, சிதறுதேங்காயாய் அங்கமங்கமாய் சிதற அடிக்கப்பட்டுச் செத்திருப்போம்.

இப்படி, ஒரு ஷெல்லா? ஒரு நூறா? ஓர் ஆயிரமா? ஆயிரக்கணக்காக அடுத்தடுத்து... அப்பப்பா! என்ன பயங்கரம்? என்ன கொடுமை?..

இந்த ஷெல்கள் வேறு விதம் - வேறு ரகம். பயங்கர ஓசையோடு வெடித்து - வீறிட்டு - விசையாக முன்சென்று, மீண்டும் ஒரு தடவை பயங்கரச் சத்தத்துடன் வெடித்து பின் அதே வேகத்தில் முன் சென்று இலக்கினைத் தவிடுபொடி ஆக்குகின்றன. இப்படியாக ஷெல் தாக்குதலை நான் நேரில் கண்டது இன்றுதான் முதல் தடவை.

ஏன் இந்தப் பயங்கரச் ஷெல் தாக்கல்?.. அமைதி காக்கவென வந்த இந்திய அமைதிப் படையினர் ஏன் அழிப்புப் படையினராகி விட்டனர்? இந்தியா எமது தாய் நாடு என்றல்லவா நாம் படிப்பிக்கப்பட்டோம்... தாய் சேயை அணைப்பதா? படை கொண்டு அழிப்பதா?..

ஒன்றும் தெரியவில்லை எனக்கு; ஒன்றும் விளங்கவில்லை எனக்கு!.. நான் சாதாரணன்; அரசியற் பக்கம் தலைவைத்துப் படுப்பவனும் அல்ல. சமரின் உட் சூத்திரம் எனக்கு எப்படி விளங்கும்?..

இராஜ வீதி இன்று இராஜ வீதியேதான்! வரலாற்றுப் பெருமைமிக்க இப்பழம் நெடும் வீதியில் பல்லாயிரக் கணக்கான வாகனங்கள் அகதிகளை அடைந்தபடி பறக்கின்றன. சைக்கிள் - மோட்டோர் கார்கள் - வான்கள் - ட்ரக்ரர்கள் - லொறிகள்...

பழம் நெடும் வீதி நிரம்ப பல்லாயிரக் கணக்கான அகதிகள். இரத்தக் காயங்களோடு சிலர். அழுதழுது நீர் சொரியும் கண்களோடு பலர்.

எமக்குப் பின்னே என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த நிறை மாதக் கர்ப்பிணி, அறிவு சோர்ந்து அயர்ச்சியுற்று மயங்கி விழுந்துவிட்டாள்! அவளின் கைக்குழந்தை மண்டை அடிபட எறிபட்டுக் காயம். ஜனவெள்ளம் திரளுகிறது. மருத்துவ சேவையினரால் முதலுதவி, கைமருந்து வழங்கப்படுகிறது.

ஐயையோ! சைக்கிள் ஹான்டிலில் சிறு குழந்தையையும், பாரில் மனைவியையும் கரியரில் தாயையும் சுமந்து வந்த ‘சுமைதாங்கி’ பலன்ஸ் இழந்து விழுந்து விட்டானே! குழந்தை வீதியோரம், மனைவி ஹான்டிலில் கொழுவியபடி, தாய் சைக்கிள் கிடக்கும் இடத்தில் இருந்து பல யார் தூரத்தில் உருண்டு புரண்டபடி. இப்படி ஒரு அவலத்தை இதற்கு முன் நாம் கண்டதில்லை! என்ன கொடுமை! என்ன அவஸ்தை!..

அங்கே மக்கள் வெள்ளம் திரளுகிறது; அவசர சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

நாம் எங்கே போகின்றோம்???...

நாம் எங்கே போவது? நாம் அனாதரவாளர்கள். உற்றார், உறவினர் என இந்தப் பகுதியில் எமக்கு ஆர் இருக்கிறார்கள்?... இருந்தும், நடக்கின்றோம், நடந்துகொண்டே இருக்கின்றோம். மரண பயத்தில் இருந்து விடுபட - கால் கொண்டு செல்லும் நெடும் தூர தேசத்திற்கு!..

இந்த மக்கள் எங்கே போகின்றார்கள்? இவர்களுக்கு எங்கே பாதுகாப்பு உண்டு?...

"அச்சுவேலி, புத்தூர், மட்டுவில், சாவகச்சேரிப் பகுதிகளில் பிரச்சனை இல்லை. அங்கே போனால் ஆறுதல்"
- இப்படிக் கதை அடிபடுகிறது.
"என்னப்பா செய்வது? தமிழனின் தலைவிதி இது. சொந்த நாட்டில் அகதி நிலை - அவலநிலை - வீட்டையே விட்டு ஓடும் நிலை".

"ஓட்டமா?... அண்ணை நாங்க பட்டபாடு... தோட்டத்துள் விழுந்து - முள்ளுக்கம்பி வேலியிக்காலை பூந்து - இங்கை பாருங்கோ! முதுகெங்கும் புண் - இரத்தக் கறை - வலி - எரிவு. அட கடவுளே!, பட்டபாடு போதுமெண்டால் போதும்!"

"எங்கடை அப்பு நாலடி வேலி பாய்ந்திருக்கிறார் அண்ணை. நம்ப முடியுமா? அவன்கள் வளவுக்குள் வந்ததுக்குப் பிறகுதானே அவர் ஓட்டம். ஓட முடியுமா? எப்படியோ ஓடினார் - நாய் ஓட்டம் தான்!"

"கோதாரி வருவான்கள் கண்ட நின்றபடி சுடுகிறாங்கள். சீக்கியர், கூர்க்கா என பல சாதிக்காரங்கள். எங்கடை பாஷையும் விளங்குது இல்லை. இந்த அப்பாவி மக்களைச் சுட்டு விழுத்துவதா? இந்த அநியாயம் எப்ப ஒழியுமோ?.."

"எல்லாம் எங்களாலை வந்த வினை அண்ணை. எங்களுக்குள்ளை ஒற்றுமை உண்டோ?.. முப்பத்திரண்டு பிரிவு. இது போதாது. இன்னும் எங்களுக்கு வேணும் அண்ணை."

இப்படி, அந்த அவலத்துக்குள்ளும் கலந்துரையாடி - கருத்துப் பரிமாறி மக்கள் அங்கலாய்க்கின்றனர். இவர்களின் உரையாடல்களுக்குக் காது கொடுக்க அமைதி ஏது? ஆறுதல் ஏது?..

எனது பிரச்சனை இது மட்டுமல்ல; எனது உடலிலும், மனத்திலும் மாத்திரம் தான் சுமைகளும் அல்ல; சுவாசத்திலும் கோளாறு உண்டு.

எனக்கு இழுப்பு - அஸ்மா நோய்!

வழமையாய் பொக்கற்றுள் பத்திரமாக இருக்கும் பிறிற்னிசோலின் (Prednisoline) அஸ்மா மாத்திரைகளை அவசரத்தில் இன்று வெளிக்கிட்டதால் எடுத்துவர முற்று முழுதாக மறந்தும் விட்டேன். மாத்திரை டப்பியை மறந்தது எப்படி என்பது எனக்கே புரியவில்லை. மருந்தை மாத்திரமா மறந்தேன்?... ஏதோ கெட்ட காலம்! பழைய ஸ்ரைலான றலி சைக்கிளையுமல்லவா அடியோடு மறந்துவிட்டேன். சைக்கிளும் கையுமாக தொழில் அலுவலாக அலைந்து திரியும் நான் சைக்கிளைப் பூட்டிப்போட்டு வரவும் மறந்து விட்டேன். இனி எனது சைக்கிள் எனக்குக் கிடைக்குமா?....

தோட்டங்களுக்கூடாக ஊரெழு - நீர்வேலி றோட்டில் ஏறிய நாம், காசிப்பிள்ளை கடைச்சந்தியைக் கடந்து, குறுக்குப் பாதையால் ராஜ வீதிக்கு வந்து, சிறுப்பிட்டிச் சுடலைப் பகுதியைத் தாண்டி, கூட்டுறவுக் கடையையும் தாண்டி... மேலே செல்ல முடியாமல் வலுவாக இளைத்து, தாண்டித் தாண்டி மெல்ல மெல்ல நத்தை வேகத்தில் நகருகின்றோம்.

ஐயோ, இப்போது அஸ்மா நோய் ஆரம்பித்து விட்டது!

பலமாக இரைச்சலோடு இழுப்பு ஆரம்பித்து விட்டது! இனி என்னால் நடக்க ஏலாது என எனது மனைவி, மகளிடம் கூறிய நான் வீதி ஓர மதகுக் குந்து மதிலில் குந்தி விட்டேன்...

மதகு மதிலில் குந்தியதுதான் எனக்குத் தெரியும். பிறகு கண் விழித்து எழும்பியது இரண்டு மணிக்கு.

இவ்வளவு நேரமாக நான் படுத்திருந்தது எங்கே?.. சிறுப்பிட்டி கமக்காரர் ஒருவரின் சாப்பாட்டு மேசைமேல். "எனக்கு என்ன நடந்தது, என்ன நடந்தது" என நான் என் மனைவியிடம் ஆவலோடு விசாரிக்கின்றேன்.

நான் அறிவு மயங்கி விழுந்ததாகவும், கமக்காரன் வீட்டுக்காரர் என்னைத் தூக்கிச் சென்று பரிகாரம் செய்ததாகவும் சொல்லப்பட்டது. கமக்காரனின் இரண்டாவது மகள் சித்த வைத்தியராம். அவர் அஸ்மா ஊசி ஏத்தி எனது இழுப்பை தணித்ததாகவும் சொல்லப்பட்டது.

சிறுப்பிட்டிக் கமக்காரன் வீடு திட்டமிட்டுக் கட்டப்பட்டதல்ல. தேவை ஏற்பட ஏற்பட விஸ்தரிக்கப்பட்ட வீடு அது. இன்று வீடு நிரம்ப அகதிகள். ஐம்பது பேரினைத் தாண்டிய எண்ணிக்கையினர். கமக்காரனும் எப்படியோ அனைவரையும், அனைத்தையும் சமாளித்து ஆறுதல் அடைகின்றார்.

பெருமனத்துடன் கமக்காரன் வந்தோரை வரவேற்று அன்போடு ஆதரிக்கின்றார். இந்த விந்தையை ஜீரணிக்க முடியாமல் நான் திக்குமுக்காடிக் கொண்டிருந்த வேளை,

> “தம்பி என்ன யோசனை? இது உங்கடை வீடு. நாங்கள் வேறு யாரும் அல்ல. உங்கடை வீட்டாரே நாங்கள் எண்டு நினையுங்கோ. இஞ்சை ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை”, என்று கமக்காரன் என்னை ஆறுதல் படுத்துகின்றார்.
>
> “தம்பி ஹொர்லிக்ஸ் தெம்புக்குக் குடியுங்கோ”

வீட்டுக்கார அம்மா எனக்குக் ஹொர்லிக்ஸ் கரைத்து வந்து அன்பாகக் குடிக்கத் தருகின்றார்.

எனக்கு ஹொர்லிக்ஸ் தந்தபின், நான் படுத்திருந்த அதே அறை மூலையில், தோள்மூட்டில் காயங்களோடு நோவலியின் அவஸ்தையால் முனங்கலோடு கிடக்கும் அவர்களின் மகனுக்கும் ஹொர்லிக்ஸ் கொடுக்கப்படுகிறது.

எனக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம்!!! சொந்த மகனைவிட விருந்தாளி முக்கியமா? ஆவலோடு.. “தம்பிக்கு என்ன?

ஏன் பத்துப் போட்டிருக்கு? என்ன நடந்தது?'' எனக் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு விசாரிக்கின்றேன். எனது கேள்விகளுக்கு கமக்காரன் பதில் சொல்கின்றார்.

"அவன் எனது இளைய மகன் தம்பி. நேற்று எங்கடை பசு மாட்டிலை பால் கறந்து கொண்டு இருக்கையில் தோட்டத்தில் விழுந்து வெடித்த ஷெல் ஒன்று பசுவின் குடலைக் கிழித்து அவனின் தோள்பட்டையைப் பதம் பார்த்து விட்டது... அதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டாம். அவனுக்குக் காயம்.; அவன் காயப்பட்டவன் என்று யோசிக்க வேண்டாம். எனக்கு கஸ்டம் என்றும் நினைக்க வேண்டாம். எனக்கு பிள்ளை குட்டியள் என்றும் யோசிக்க வேண்டாம். வீடு நிரம்ப அகதிகள், ஆட்கள் எனவும் யோசிக்கவும் வேண்டாம். வீட்டிலை இன்று நீங்க ஐம்பத்தொன்பதாவது ஆள் என்பது உண்மைதான்!. ஆனால், ஆபத்திலை உதவுதல் எங்கடை கடன். உங்களை எங்கள் அடியில் கொண்டு வந்தது எங்கடை செல்லச் சந்நிதியானின் பெருங்கருணைதான்.

நான் உங்கடை தகப்பன்போலை. பிரச்சனை தீரும்வரை ஒரு பயமும் இல்லாமல் உங்கடை வீடாக இதை நினைத்து நீங்கள் இங்கேயே தங்க வேணும்.''

எனப் பாசமிகுதியோடு எம்மை வேண்டிக் கொண்டு இருக்கையில்,

"தம்பி நீங்கள் இங்கேயே தங்க வேணும்.''

என அந்த வீட்டுக்கார அம்மாவும் விண்ணப்பிக்கின்றார்.

எனக்கு இந்தக் காருண்யம் பேரதிர்ச்சியைத் தருகிறது. இளைய மகனின் முனக்கம் - முணுமுணுப்பு தொடர்ச்சியாக கேட்டுக்கொண்டே இருக்கிறது. வாய் என்னை மறந்து தன்வாரியாக 'மானுடம் சாவதில்லை' என உச்சரிக்கின்றது.

**சஞ்சீவி 1989**

# ஆத்ம சுகம்

ஆசிரிய ஆலோசகர் இராசரத்தினம் கவலையோடும் களைப்போடும் வீடு வந்து சேருகின்றார்.

இப்போது இரவு. நேரம் ஆறு மணி. மழை இருட்டு. இன்று பொழுதுபடும் வேளையே இருட்டிவிட்டது.

அதிகாலை ஐந்து மணிக்கு நித்திரை விட்டெழுந்து, காலைக் கடன்களை நேரத்தோடு முடித்து, மருதடி விநாயகர் ஆலயத்துக்குப் போய், நேர்த்தியாகத் தொழுது, தனது பழைய றலி சைக்கிள் வண்டியில் மானிப்பாய் வீட்டிலிருந்து தொழிலுக்கு உற்சாகமாகப் புறப்பட்ட ஆசிரிய ஆலோசகர் இப்போதுதான் வீடு வந்து சேர முடிந்தது.

பிரயாணத் தொல்லை, தொழிற் சிரமங்கள், வேலைப்பளு ஆகியவற்றால் இயல்பாக ஏற்படும் உடற் களைப்பு ஆசிரிய ஆலோசகருக்கு மனச்சோர்வை என்றும் ஏற்படுத்தியதில்லை! தொழிலில் அவருக்கு இருக்கும் இயற்கை ஆர்வம், சமூகப் பற்று, கல்வி வளர்ச்சி அக்கறை முதலியவை அவரை அயராது உழைக்க வைக்கும் உந்து சக்திகள் ஆகிவிட்டன.

ஆனால்,

இன்று அவர் பார்வையிடச் சென்ற அந்தப் பாடசாலையில் நடந்த நிகழ்வு ஒன்று ஆசிரிய ஆலோசகரின் மனதைப் பெரிதும் புண்ணாக்கி விட்டது. வகுப்பறை ஒன்றினுள் சடுதியாகச் சென்று மாணவரின் தமிழ் இலக்கிய அறிவைச் சோதித்துப் பார்த்தபோது, அவர் அதிர்ச்சி அடைந்தார்! அதற்கான காரணத்தை அந்த வகுப்பின் பாடப் பொறுப்பாசிரியரிடம் வினாவியபோது, அந்த பொறுப்பாசிரியரின் பொறுப்பற்ற பேச்சு ஆசிரிய ஆலோசகரின் ஆத்திரத்தை கொழுந்து விட்டெரியச் செய்தது.

> "உதுகளுக்குப் படிப்பு ஏறாது சேர்! படிப்புக்கும் உதுகளுக்கும் வெகுதூரம். - மலைக்கும் மடுவுக்கும் போலை. முழுமோடுகள்!... எழுத வாசிக்கத் தெரியாத சக்கட்டைகளை எப்பிடிச் சேர் படிப்பிப்பது?... அக்கறையே இல்லாததுகளுக்குப் படிப்பிக்க ஏலுமே?... எங்களாலை ஏலாது சேர்! ஏலுமெண்டா நீங்கள் ஒருக்கா படிப்பிச்சுப் பாருங்கோ?!.."

எறிந்து பேசிய இந்தக் கொடும் வார்த்தைகளை இரை மீட்க மீட்க ஆலோசகரின் கோபம் நெய் உண்ட நெருப்பாய் சுவாலை விட்டு எரிந்தது!

ஆசிரிய ஆலோசகர் வீடு வந்து சேர்ந்தும் சுவாலை தணியவில்லை; தமிழ் ஆசிரியரைச் சபித்துக் கொண்டே இருந்தார்.

> "பொறுக்கிப் பயல்!.... பேருக்குப் பல்கலைக்கழகப் பட்டதாரி. பட்டப் படிப்புக்கும் உவனுக்கும் ஒரு தொடர்பும் இல்லை! கெட்டித்தனமாக தன்ரை மக்களை ரவுண் பெரிய பாடசாலைக்கு அனுப்பிவிட்டு ஊர் மக்களின் - ஏழைப் பிள்ளைகளின் எதிர்காலத்தை நாசம் செய்கிறான். படுபாவிப்பயல்!..."

"மாமா- மாமா- மா...மா!..."

எங்கிருந்தோ இந்த இதமான குரல் கேட்டது. இந்த அன்புக் குரல் ஒரு சின்னஞ்சிறு குழந்தைக்கு உரியது. இது ஆலோசகரின் தங்கை மதிவதனாவின் மகன் கண்ணனுடையதுதான்!

மாமா வருவதை மோப்பம் பிடித்தறிந்த அக்குழந்தை ஓடோடி வந்து ஆலோசகரின் றவுசரைப் பிடித்து இழுத்து, உலுப்பி, அன்பொழுக மீண்டும் மீண்டும் "மாமா", "மாமா" என ஆசையோடு கூப்பிட்டது.

ஆலோசகர் அக்குழந்தையை வாரி எடுத்தார்; நெஞ்சோடு இறுகச் சாத்தினார்; உச்சியை ஆசையோடு தடவினார்; கன்னத்தைக் கிள்ளினார்; பதிலுக்குக் "கண்ணா", "கண்ணா", எனப் பாசத்தோடு அழைத்தபடி தலைக்கு மேல் உயரத் தூக்கி, மீண்டும் முத்தமிட்டுக் கீழே இறக்கினார். குழந்தையின் மலர்க்கை வருடல் ஆசிரிய ஆலோசகருக்குச் சொர்க்கத்தினை அனுபவிக்க வைத்தது.

குழந்தையின் பாசத்திற்கு ஆட்பட்ட ஆசிரிய ஆலோசகர் கவலையை அடியோடு மறந்தார்; களைப்பை மறந்தார்; தன்னையும் மறந்தார். அணங்கை அணைத்தால் இன்பம்; கரும்பைத் தின்றால் இன்பம்; குழந்தையை நினைத்தாலே இன்பமல்லவா?... இன்ப மயக்கத்தில் ஒரு சில நிமிட வேளை சிலையாகிவிட்டார்.

பின் மீளக் குழந்தையை ஒற்றைக் கையால் தூக்கி இறுக அணைத்தபடியும் மற்றக் கையால் இதுவரை நிறுத்தி வைத்திருந்த சைக்கிளை அவதானமாக உருட்டியபடியுமாக வீட்டின் பின்புறக் கொட்டகைக்குள் சைக்கிளை விட்டுப் பூட்டுவதற்கென நுழைந்தார்.

குழந்தை தன்னைப் பலாத்காரமாக மாமாவின் கையிலிருந்து விடுத்துக் கொண்டது. விறுக்கு விறுக்கென சமையலறைக்குள் ஓடோடிச் சென்றது.

சமையல் வேலையில் மூழ்கியிருந்த தனது தாயின் முந்தானையை எட்டிப் பிடித்து இழுத்து, "மாமா, மாமா! ரீ, ரீ!.." எனச் சத்தமிட்டது.

வேலையில் மனம் ஒன்றிய நிலையிலிருந்து விடுபட்ட மதிவதனா அப்போதுதான் தமையன் வீடு வந்து சேர்ந்ததை அறிந்தார்; அவசர அவசரமாகத் தேநீரைத் தயார்செய்துகொண்டு ஆசிரிய ஆலோசகரின் பிரத்தியேக அறையுள் பிரவேசித்தார்.

மதிவதனா அவ்வறையுள் நுழையமுன், முற்கூட்டியே அவ்வறையுள் நுழைந்துவிட்ட குழந்தை "மாமா... ரீ!" எனச் சத்தமிட்டது; மீள அக்குழந்தை துடித்து விழுந்துகட்டி ஓடியது; சமையலறையுள் இருந்த கடலைவடை ஒன்றினை எடுத்து வந்து, துண்டு துண்டாக்கி மாமாவின் வாயுள் ஆசையோடு மெல்ல மெல்ல ஒவ்வொரு துண்டாகத் தீத்தியது. அன்று சாப்பிட்ட அந்த வடை இதற்கு முன் பல்வேறு சந்தர்ப்பங்களில் சாப்பிட்ட வடைகளை விடச் சுவையாக இருந்தது அந்த ஆசிரிய ஆலோசகருக்கு.

நேற்றைய தினம் இதே நேரம் இன்னொரு நிகழ்வு நடந்தது. குழந்தை திருட்டுத்தனமாக ஆசிரியரின் அறையுள் நுழைந்து 'சூ'ச் செய்தது. நேரமெடுத்து அழகாகத் தட்டுகளில் அடுக்கி, பாதுகாப்பாக வைத்திருந்த புத்தகங்களை இழுத்துக் கொட்டி அழுக்காக்கியதால் குழந்தை அடி வாங்கியது. இச்சோக நினைவுகள் ஆலோசகரின் மனத்திரையில் அலைமோதின.

ஆனால், குழந்தைக்கோ கடந்த நாள் ஏற்பட்ட கசப்பு அனுபவம் அதன் மனதில் இல்லை. குழந்தையும் தெய்வமும் வணக்கத்திற்கு உரியன அல்லவா?... அது ஆலோசகரின் மனதை நெகிழ வைக்கும் அலுவல்களில் ஈடுபட்டு மேலும் மேலும் உற்சாகமூட்டியது...

குழந்தை இப்பொழுது ஒரு புது விளையாட்டு விளையாடிக் காட்டி, சிரிக்க வைத்தது. மாமாவைத் தொடுவதும். தொடும்வேளை "மாமா" என அழைப்பதும், பின் வட்ட வடிவமாக ஓடுவதுமாக இருந்தது...

இப்படி, கடந்த இரண்டாண்டு காலத்திற்கு மேலாக அக்குழந்தையோடு நெருங்கிப் பழக நேர்ந்தமையால் ஆசிரியர் மிகப் பெறுமதி வாய்ந்த புதுவகை அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

தங்கையின் குழந்தை எவ்வளவு ஆறுதலை அளிக்கிறது?... தனக்கும் ஒரு சில குழந்தைச் செல்வங்கள் இருந்துவிட்டால்!... தனக்கும் இதயபூர்வமாக நேசிக்கும் ஒரு வாழ்க்கைத் துணைநலம் கிடைத்துவிட்டால்!...

மனக் கடலில் சிந்தனை அலைகள் அலைமோதின!...

இவை நடக்கக்கூடிய காரியங்களா?... வீண் கற்பனைகளா?... வெறும் ஆகாசக் கோட்டைகளா?...

என்றுமே தனிக்கட்டையாக வாழ்வோம் என விரதம் பூண்டவர் முதன்மை ஆசிரியர். அந்த மன இறுக்கம் தளராத நிலையில் இல்லறத்தைப் பொறுத்தவரை ஒட்டியும் ஒட்டாமலுமாக ஓடும் புளியம்பழமும் போல வாழ்ந்து வருகின்றார்.

தந்தை தாயை இளம் வயதிலேயே இழந்த இரண்டு அநாதைச் சகோதரிகளுக்குத் தாய்க்குத் தாயாக - தந்தைக்குத் தந்தையாக - தமையனுக்குத் தமையனாகக் கண்ணிமை கண்ணைக் காப்பது போல சகோதரிகளைக் காத்து வந்தவர் ஆசிரிய ஆலோசகர். இரண்டு சகோதரிகளையும் கௌரவமான இடங்களில் வாழ்க்கைப்பட வைத்த இன்றைய நிலையில், இளைய சகோதரி மதிவதனாவுடன் வாழ்ந்து வரும் ஆசிரியருக்கு இன்று வயது நாற்பத்தைந்து.

நாற்பத்தைந்து வரை தூய பிரம்மச்சரியம் கடைப்பிடித்தவருக்கு இனி இல்லற வாழ்க்கையா?!...

'வேண்டவே வேண்டாம்' என மன வைராக்கியத்தோடு தன் விரத்த்தைக் குலையவிடாது தூய்மை காத்து வாழ்ந்துவரும்

உத்தமருக்குக் கண்ணனின் குறுக்கீடு சில வேளைகளில் மனச் சஞ்சலங்களை ஏற்படுத்தாமலும் இல்லை! சில கற்பனைகளுக்குத் தூபமிடாமலும் இல்லை! சில வேளைகளில் கற்பனைகள் சிறகடித்துத் தூரப் பறக்கத்தான் செய்கின்றன!...

ஆசிரிய ஆலோசகர் தனக்கே உரிய சில ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிப்பவர்...

இது அவரின் குளிக்கும் நேரம்.

குளியலறைக்குள் புகுந்து, கதவைப் பூட்டி தனது உடம்பைச் சுத்தம் செய்தார். அகமும் புறமும் அழகாக இருக்க வேண்டும் என்பது அவரின் கொள்கை.

இப்போது ஆசிரியரின் மனம் திரும்ப வேகமாகப் பாடசாலைகளை வலம் வந்துகொண்டு இருந்தது.

இன்று சந்தித்த மரக்கட்டை போன்ற சில ஆசிரியர்களை எப்படி உளி கொண்டு செதுக்குவது என ஆழமாகச் சிந்தித்தார். அதேநேரம் உதாரண புருஷர்களை எப்படி வெற்றிகரமாக வழிகாட்டிகளாகப் பயன்படுத்தலாம் எனவும் நீண்ட நேரமாகச் சிந்தித்தார். இந்நேரம் 'படார்', 'படார்' எனக் குளியலறைக் கதவினை அடிக்கும் ஓசையும், "மாமா", "மாமா!" எனக் கூக்குரல் இடும் சத்தமும், அவரின் சிந்தனை ஓட்டத்தைக் குழப்பி விட்டன.

குளியலறையிலிருந்து வெளியேறிய ஆசிரியர் அக்குழந்தையை வாரி எடுத்து, தோள்மேல் சாத்தியபடி தனது அறைக்குச் சென்றார்.

தண்ணீரில் நனைந்த அவரின் தேகத்தில் குழந்தையின் சூடான தேகம் ஒட்டிக் கொண்டதால், ஒரு புதுச்சுகம் ஏற்பட்டது. அந்த மெய் தீண்டற் சுகத்தை அவர் சுவைத்துச் சுவைத்துத் திளைத்தார்.

சுவாமி அறைக்கு குழந்தையும் தானுமாகச் சென்ற ஆசிரியர் கடவுளைத் தொழுது, குழந்தைக்கும் தனக்கும் விபூதி தரித்து; குழந்தையை அதன் தாயிடம் அனுப்பி விட்டு அடுத்தநாள் தொழிலுக்கான முன்வேலைகளை அக்கறையோடு கவனித்தார். இந்நேரம் வெளி விறாந்தையில் பேசும் குரல்கள் கேட்கின்றன. ஒன்று தங்கை மதிவதனாவுடையது. மற்றவை யாரோ வயதான இருவருடையவை.

அவை யாராக இருக்கும்?!...

உரையாடல் இப்போது மன்றாட்டமாக மாறுகின்றது.

"தங்கச்சி! சேரோடை ஒருக்கா கதைக்க விடுங்கோ! அவர் மாட்டன் என்டா நாங்க நாண்டுகொண்டு நிக்க மாட்டம்."

"கதைக்க விடுகிறதிலை ஒண்டுமில்லப் பாருங்கோ. அவர் உதுக்குச் சம்மதிக்க மாட்டார். அது நல்லாகத் தெரிந்த விடயம். அவர் கொள்கைவாதி; பிடிவாதக்காரர்"

"எதுக்கும் ஒருக்கா கூப்பிடுங்கோ தங்கச்சி! சும்மா கதைச்சுப் பாப்பம்"

"அவர் என்னைத்தான் பேசுவார். நீங்க கதைச்சுப்போட்டு போய்விடுவீங்க. பேச்சு வாங்குவது நான்மட்டும்தான்."

"கோவிக்காமல்... தங்கச்சி.... எங்களுக்காக!.."

"உப்பிடிக் கூப்பிட்டுக் கதைத்து எத்தினைமுறை ஏச்சுப்பேச்சு வாங்கிக் கட்டிவிட்டன்."

"தயவு செய்து தங்கச்சி... மன்றாட்டமாகக் கேட்கிறம்..."

“யா...ர...து...? என்ன வேணுமாம்?” - சற்று அதிகாரத் தோரணை.

அதனைத் தொடர்ந்து ஆசிரியர் வெளியே வந்தார்.

“சேர்! உங்களோட ஒரு தனிப்பட்ட விசயம் கதைக்கலாமே?”

“அப்படியென்ன... சொல்லுங்கோ!”

“ஒரு சம்பந்தம்!...”

“சம்பந்தம்!?... ஆருக்கு?..”

“உங்களுக்குத் தான் சேர்!”

“எங்கே!?... ஆர் அந்தப் பெண் விளக்கமாகச் சொல்லுங்கோ.”

ஒரு பட்டதாரி ஆசிரியையின் விபரங்கள் வர்ணிக்கப்படுகின்றன.

ஆசிரியை நன்றாகத் தெரிந்த ஒருவர். அந்த ஆசிரியை மீது நல்ல அபிப்பிராயம் ஆசிரிய ஆலோசகருக்கு நிரம்ப உண்டு. அவர் தன்னைப்போன்ற ஒரு இலட்சியவாதி என்பதும் ஆசிரிய ஆலோசகருக்கு நன்றாகத் தெரிந்த விடயம்.

ஒரு நாள் நினைவு அவரின் மனத்திரையில் மின்னியது...

அன்றைய நாள்...

அந்தப் பாடசாலையில் ஒரேயொரு வகுப்பு மாத்திரம் மிகவும் கட்டுப்பாடாக நடைபெறுகின்றது. அந்த வகுப்புக்கு முன்னே செல்லும் நடைபாதையால் நடந்துகொண்டிருந்த ஆசிரிய ஆலோசகர் அந்த வித்தியாசமான கற்பித்தலைக் கூர்ந்து அவதானித்தார்.

தமிழ் இலக்கிய பாடம் அது. ஆசிரியை கதாபாத்திரங்களாக மாறி மாறி உணர்ச்சியோடு பாடத்தைக் கற்பிக்கின்றார். அது வெறும் இலக்கியப்பாடம் என்ற நிலை மாறி ஒரு காப்பியமே நிசமாக சுருள் விரிந்து உருண்டோடுவது போன்று இருந்தது. ஆசிரியை பாடவேண்டிய இடத்தில் பாடி, ஆடவேண்டிய இடத்தில் ஆடி, உணர்ச்சி பொங்கப் பேசவேண்டிய இடத்தில் பேசி பாடத்தை நகைச்சுவையோடும் விறுவிறுப்போடும் நடத்திச் செல்கின்ற பாணி மிக அழகாக இருந்தது. இதே பகுதியைப் பிள்ளைகளைக் கொண்டு வெறுமையாக வாசிக்கச் செய்து சாட்டுக்கு விளங்கியதா என வினாவி ‘சப்’ என கற்பித்தலைச்செய்யும் பல ஆசிரியர்களைச் சந்திப்பவர் ஆசிரிய ஆலோசகர். இந்தக் கூலிப் பட்டாளத்தோடு ரீச்சரை ஒப்பிடும்போது அவர் ஒரு கண்கண்ட தெய்வம்!

ஆசிரியை பலமாகப் பாராட்டப்பட வேண்டியவர்! பாராட்டுகிறார் -

“ரீச்சர் பாராட்டுக்கள்!; மிகத் திறமையாகக் கற்பிக்கின்றீர்கள்!; கிளாஸ் கொன்றோல் மிகத் திறம். வகுப்பை இவ்வளவு திறமாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியும் என்பதை இன்றைக்குத்தான் அறிய முடிந்தது.”

“சேர்! அது எனக்குப் பாராட்டாக அமையுது.”

“ஆம் ரீச்சர், அது உண்மை. பாராட்டேதான்! நவீன நாடக பாணிதான் உங்கடை வெற்றிக்குக் காரணம் எண்டு நினைக்கிறன்.”

“சேர்! நான் கண்டு பிடித்த உண்மை இது! கற்பித்தலைப் பொறுத்தவரை பிள்ளைகளை நெஞ்சார நேசித்தல் முக்கியம். நான் பிள்ளைகளை நேசிக்கிறன்;

அவர்களோடு மனம் விட்டுப் பழகுகிறன். பரஸ்பர அன்பு கற்பித்தலுக்கு இயல்பாகவே வழி சமைக்கிறது. பிள்ளைகளைக் கவரும் விதத்தில் படிப்பிக்கிறன்..."

'பிள்ளைகளை நெஞ்சார நேசிக்கிறன். அவர்களோடு மனம் விட்டுப் பழகுகிறன்!' என்ற வசனங்கள் ஆலோசகரின் மனத்தில் திரும்பத் திரும்ப அலை மோதின. ரீச்சர் ஒரு இலட்சியவாதி. அவருடன் சேர்ந்து தனது ஆத்மார்த்த அலுவல்களுக்கும் நிறைவு கண்டு, ஆத்ம சுகமும் அனுபவிக்கலாம் என்ற ஆசைகள் பிறந்தன!.

"இந்த சம்பந்தப் பேச்சு சம்பந்தப்பட்ட ரீச்சருக்கும் தெரியுமா?"
-ஆசிரிய ஆலோசகர் வினாவுகின்றார்.

"ஓம் சேர்! தாய், தகப்பன், ரீச்சர், சகோதரம் எல்லாருக்கும் தெரியும். எல்லாருக்கும் பூரண சம்மதம்."

"எனக்கும் பூரண சம்மதம் எண்டு சொல்லுங்கோ."

சகோதரி மதிவதனாவுக்குப் பெரும் அதிர்ச்சியாகவும், அதேவேளை பேரானந்தமாகவும், சீரணிக்க முடியாத ஒன்றாகவும் இருந்தது. நீண்ட கால நேர்த்தி பலித்தது போன்ற ஓர் இன்ப உணர்வின் விளைவாக அவளின் கண்கள் பனித்தன; ஓரிரு கண்ணீர்த் துளிகளும் வடிந்தன.

வீரகேசரி 13-08-1995

# காகித ஓடம்




வெள்ளவத்தை
12.09.94.

**நெ**ஞ்சம் நிறைந்த அம்மாவுக்கு,

அன்பு வணக்கம்.

சோதனைப் பெறுபேறு வந்ததம்மா. நான் CIMA சோதனை பாஸ். காகிதம் வந்த கையோடு இக் கடிதத்தை அவசர அவசரமாக எழுதுகிறேன். Result Sheet ஐ வாசித்து முடியமுன் அம்மாவின் முகம் என்ரை மனத்திரையிலை விழுந்தது. எனது கடிதத்தை அம்மா வாசிக்கும் போது ஆனந்தக் கண்ணீர் வடிப்பதை, அம்மா ஆறுதல் பெருமூச்சு விடுவதை மனத்தில் காணக்கூடியதாக இருந்தது.

இளம் வயசில் அப்பாவைப் பறிகொடுத்த அம்மா எம்மை வளர்த்தெடுக்க பட்டபாடு... அப்பப்பா! நீங்கள் ஒரு மெழுகுவர்த்தியேதான்! உங்களை எரித்து நீங்கள் எமக்கு ஒளியூட்டியுள்ளீர்கள்!

ஆயக்கடவை விநாயகரின் சக்தி அபாரம்! சந்தேகமே இல்லை! நீங்கள் அடிக்கடி சொல்லுவது போல் ஆயக்கடவையான் அருளாலே தான் எல்லாம் நல்லபடி நடந்து முடிந்தது. அம்மா நீங்கள் வைத்த நேர்த்தியைச் செய்யுங்கோ. ஆயக்கடவையான் திருநீறும் கொஞ்சம் அனுப்பி வையுங்கோ.

இன்னொரு முக்கிய செய்தி அம்மா. பெறுபேறு வந்த கையோடு ஒரு வேலைக்கும் Apply பண்ணி இருக்கிறேன். Accountant Post Vacancy அது. அதிகமாகச் சரி வரலாம் என நம்புகிறேன். முடிவு தெரிந்ததும் அறிவிக்கின்றேன்.

என்ரை அடுத்த முக்கிய வேலை என்னை நம்பி இருக்கும் அக்காமாரைக் கரை சேர்ப்பது. படித்து உத்தியோகம் பார்க்கும் நல்ல பெடியங்களாகப் பார்க்கிறேன். இதுவரை தரகர்மார் சிலரையும் கண்டு கதைத்தும் இருக்கிறேன்.

வெளிநாட்டுப் பெடியன் என்டால் ஏராளம் கைவசம் இருக்கு. அவங்கள் என்றால் நன்றாக விசாரிக்க வேணும். உள்ளூரில் இருக்கும் நல்ல பெடியங்களைப் பிடிக்க பொறுத்துத்தான் இருக்க வேண்டும். எதுக்கும் பார்ப்போம். பொறுத்தார் புவியாள்வார்.

கமலா அக்காவுக்கும், விமலா அக்காவுக்கும் என்ரை அன்பைத் தெரிவிக்கவும். அம்மாவுக்கு ஆசை முத்தங்கள்! நன்றி அம்மா.

என்றும் தங்கள் அருமை மகன் -

ஆ. தனபாலன்.

## 2

வெள்ளவத்தை
30.09.94.

ஆருயிர் அம்மாவுக்கு,

வணக்கம் பலகோடி.

பெரும்பாலும் 12.09.94 திகதியிட்டு நான் எழுதியனுப்பிய கடிதம் கிடைத்திருக்காது என நினைக்கின்றேன். தமிழ்ப் பிரதேசத்துக்கான கடிதச் சேவை நத்தை வேகத்தில் நகர்வதால் கடிதங்கள் ஊர்ந்து வர நாள் எடுக்கும்.

நான் முன்பு எழுதியதுபோல் குறிப்பிட்ட தொழில் கிடைத்து விட்டது அம்மா. நான் இப்போது Chief Accountant. சந்தோசம்தானே? நாளை 01.10.94 முதல் வேலைக்குப் போய் வருவேன். அம்மா இந்த முறை கொஞ்சம் கூடுதலாகக் காசு அனுப்பிவிடுங்கோ. புதிய இடத்துக்குப் போக இருப்பதால் மேலதிக செலவுகள் கொஞ்சம் ஏற்படும்தானே. குறைந்தது 6,000/- ரூபா அனுப்பி விடுங்கோ அம்மா. அக்காமாரின் அலுவல் ஒன்றும் சரிவரவில்லை. இரண்டொரு இடங்களில் சொல்லியிருக்கிறேன். எனக்கு மனதுக்குப் பிடித்து, குறிப்பும் பொருந்தினால் எழுதி அறிவிப்பேன். அம்மாவின் கடிதத்தையும் காசையும் எதிர்பார்க்கும் -

உங்கள் அன்பு மகன்,
ஆ. தனபாலன்.

3

புன்னாலைக்கட்டுவன்.
10.10.94.

பாசமிகு தம்பி தனபாலனுக்கு,

அன்பு வணக்கம்.

நீ 12.09.94, 30.09.94 திகதியிட்டு எழுதிய கடிதங்கள் கிடைத்தன. தம்பி நீ எழுதியது போல் உன்ரை கடிதங்களை வாசிக்க வாசிக்க கண் கலங்கி கண்ணீர் வடிந்தது. விமோசனம் கிடைத்த புளுகமடா. ஆனந்தக் கண்ணீர் வராமலா விடும்? தம்பி இப்ப உன் அப்பா இருந்திருந்தால், அவர் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பார் என எண்ணிப் பார்க்கிறேன். தம்பி நீ பிறந்தபோது மனிசன் துள்ளிக் குதித்தாரடா. என்ரை மகன் டொக்டராவான், இன்சினியராவான் என்று ஆசையோடை அலட்டித் திரிந்தாரடா. தம்பி நீ தவம் கிடந்து பிறந்த அருமைக் குழந்தையடா. மூத்ததுகள் பெண் குட்டிகள். ஆசைக்கு ஒரு பெடியன் வேண்டுமென ஆயக்கடவையானுக்கு நேர்த்தி வைத்து உன்னைப் பெற்றோமடா.

அப்பா ஆசைப்பட்ட வேலை கிடைக்காவிட்டாலும், அப்பா ஆசைப்பட்ட வேலைபோல பெரிய வேலை கிடைத்துள்ளது. நீயொரு பெரிய எக்கவுண்டன். இனி எங்களுக்கு என்ன குறை? அப்பா பாடசாலை அதிபர். அம்மா தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர். மகன் சீவ் எக்கவுண்டன். பெண் பிள்ளைகள் ட்றெயின்ட் ரீச்சேர்ஸ். இனி வேற என்ன வேணும்? இரண்டு நல்ல மருமக்களும்

கிடைத்துவிட்டால்... அது உன்ரை கடமை தம்பி. எப்படியும் இரண்டு படித்த மாப்பிள்ளைகளாக கொண்டுவந்து சேர்த்துவிடு தம்பி கேட்டபடி காசு இத்துடன் அனுப்பி இருக்கு. தம்பி 6,000/- ரூபாய் கேட்டாய். நான் 7,500/- ரூபாய் அனுப்பியுள்ளேன். இத்துடன் உள்ள துண்டை கொழும்பு மணியம் முதலாளியிடம் கொடுத்தால், காசை அவர் உடனே தருவார்.

ஆயக்கடவையானுக்குப் பெரிய அபிஷேகம் செய்வித்தேன். ஆயிரத்தெட்டு சங்கு வைத்து மேளமும் பிடித்து சுவாமியும் வீதியுலா வந்தது. விபூதியைக் கடிதத்துடன் வைத்துள்ளேன். உன்ரை தொழில் எப்படித் தம்பி? ஓப்பீஸ் எப்படித் தம்பி? அக்காமாற்றை அலுவல்களைக் கொஞ்சமும் மறந்து போகாதை. அன்பு வணக்கத்துடன், தம்பியின் தபாலை எதிர்பார்க்கும் உனது அன்பு அம்மா,

ஆ. செல்லம்மா.

4

வெள்ளவத்தை

21.10.94.

அன்புக்கினிய அம்மாவுக்கு,

மிக்க வணக்கம்.

அம்மாவின் 10.10.94 திகதியிட்ட கடிதமும் காசு 7,500/- ரூபாயும் கிடைத்தன. நன்றி அம்மா. நான் வேலை செய்வது ஒரு வெளிநாட்டு வெள்ளைக்காரன் இன்ஜினியரிங் கம்பனியில். பெரியவருக்கு

என்னை நன்றாகப் பிடித்துப்போச்சு. B.Sc., CIMA எக்கவுண்டன் என்பதால் என்னை சீவ் எக்கவுண்டன் ஆக்கியிருக்கினம். எனக்குப் பெரிய அழகான அறை. ரெலிபோன், கொம்யூற்றர் எல்லாம் இருக்கு. மாதச் சம்பளம் 12,000/- ரூபாய். ஆனால், ஒரே ஒரு பெரிய குறை அம்மா. என்னிடம் மட்டும் சொந்தமாகக் கார் இல்லை. என்ரை சபோர்டினேர்ஸ் எல்லோரும் ஸ்ரைலான கார்களில் வந்து இறங்குகினம். எனக்கு பெரிய வெட்கமாக இருக்கு. பெரியவரோடை இதைப்பற்றிக் கதைத்தேன். பெரிய லோன் ஒன்று தருகிறாராம். நானும் கொஞ்சம் காசு போடவேணும். நல்ல அம்மா அல்லே! ஒரு ஒன்றரை இலட்சம் ரூபா அனுப்புகிறீர்களா? அம்மா மகனின் மரியாதையை நினைத்து எப்படியென்றாலும் மாறிக்கீறி காசை அனுப்பி விடுங்கோ. பெரியவர் ஓம் என்ற கையோடை சூட்டோடை சூடாக காரியத்தை முடித்துவிட வேணும். கிடைக்கும் வாய்ப்பு வசதியை நழுவவிடக் கூடாதம்மா. தயவுசெய்து உதவி பண்ணிக் காசைக் கெதியாக அனுப்பிவிடுங்கோ. அம்மாவின் உதவியை உயிர் உள்ளவரைக்கும் அம்மாவின் மகன் மறக்க மாட்டான்.

அம்மா கந்தோரில் நாங்கள் உடையார் அடிகொடி என்பது விளங்க வேணும். நான் எடுப்பாக போய் வந்தால் தான் சபோடினேற் தாமாக - சுயமாக மரியாதை பண்ணுவாங்க. இந்தக் காலத்தில் சப்போடினேற்றைக் கட்டுப்படுத்த ஏலாதம்மா. ஸ்ரேற்றஸ்சையும் [Status] மெயின்ரேயின் பண்ண வேணும். இன்னும் இடிபட்டு, நெரிஞ்சு பஸ்ஸில் போய்வர ஏலுமோ அம்மா? அம்மா பிளீஸ் காசை அனுப்பி வையுங்கோ. அடுத்த தபாலில் காத்திருப்பேன்.

அம்மாவின் அன்புக்கும் அக்கறைக்கும் முன்கூட்டி நன்றிகள் உரித்தாகுக -

உங்கள் ஆசைமகன்,
ஆ. தனபாலன்.

## 5

புன்னாலைக்கட்டுவன்.
21-11-94.

அன்பு மகனுக்கு,

வணக்கம்.

உங்கடை 21.10.94 திகதியிட்ட கடிதம் வாசித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். பெற்ற போது பெற்ற இன்பத்தை விட எனக்கு மகன் படித்து நல்ல நிலையில் இருக்கிறான் என்ற நற்செய்தி பேரானந்தத்தைத் தந்தது. தம்பிக்கு இத்தோடு இரண்டு இலட்சம் ரூபா அனுப்பி வைக்கிறேன். மணியம் முதலாளியிடம் துண்டைக் குடுங்கோ. காசை அவர் தருவார். நான் முதலாளி வீட்டிலே இத்தொகையை குடுத்திட்டேன். தம்பி வாங்கும் காரை இலட்சணமான காராக வாங்கு. உங்கடை அப்பா உடையார் அடிகொடி. நடப்பாக இருந்த அடிகொடி. உடையார் குதிரை வண்டியிலேதான் போய் வருவார். எங்கடை அந்தஸ்தை இறங்க விட முடியாது. அடுத்த முக்கிய விடயம். என்ரை பெண் பிள்ளைகளின்ரை எதிர்கால வாழ்க்கை. தம்பி முதலில் மூத்த அக்கார்ளின் விசயத்தை முடிப்பம். அவளுக்கு வயசு 38. கமலா

கரை சேர்ந்த பிறகு விமலா அக்காவுக்கு தேடுவம். மூத்தவளுக்கு ஜேர்மனியில் இருக்கும் பெடியன் ஒன்றுக்கு ஒரு பார்ட்டி கேட்டவை. அவை நாங்க சம்பந்தம் வைக்கக் கூடிய இடமுமல்ல. நாங்கள் ஓம் சொல்லவில்லை. வேறை பிற நாட்டு நடப்புகளை நினைக்க அருவருப்பாக இருக்கடா.

தம்பி அக்காவின்ரை கலியாண அலுவல் ஏதோ ஒரு முடிவு இனி வேணும். இன்னும் இன்னும் பிற்போட முடியுமோ?... நான் உன்ரை பதிலை ஆவலோடு எதிர்பார்க்கிறேன். மிக்க நன்றி, காசு கிடைத்ததுக்கு உடன் பதில் போடு.

உனது அன்பான அம்மா,

ஆ. செல்லம்மா.

6

வெள்ளவத்தை
20.12.94

அன்புக்கினிய அம்மாவுக்கு,

வணக்கம்.

அம்மாவுக்கு ஒரு சந்தோசமான செய்தி. அம்மாவின் பிள்ளை ஒரு அழகிய லேற்றர்ஸ்ற் ரொயோற்றா [Latest Toyota] வாங்கி உள்ளான். அம்மா அனுப்பிய காசோடு இரண்டொரு

நண்பர்களிடமும் கொஞ்சம் மாறி, கம்பனி லோனையும் எடுத்து நல்ல எடுப்பான காராக எடுத்துள்ளேன்.

அம்மாவுக்கு இன்னுமொரு மங்களகரமான செய்தி. ஒரு தங்கமான பிள்ளை. நல்ல சோக்கான வடிவு. உருக்கி வார்த்த தங்கம் மாதிரி. அத்தோடு தங்கமான குணம். அம்மா பார்த்தால், தெய்வ அம்சம் நிரம்பிய பிள்ளை என்று வலுவாகச் சந்தோசப்படுவியள். திடீரெனப் பதிவுத் திருமணம் செய்ய வேண்டி வந்து விட்டது!.. அது அம்மா கோவியாதையுங்கோ!.. உங்களை நான் கேட்டுச் செய்யவில்லை என நினைத்து. நான் அவசரப்பட்டுவிட்டேன். ஒரு பெரிய பிழையை விட்டு கையும் மெய்யுமாகப் பிடிபட்டு எங்கடை மானத்தைக் காப்பாற்ற மரியாதைக்காக உடன் நோட்டீஸ் போட்டு திடீர் பதிவுத் திருமணம் செய்து விட்டேன். இந்தப் பிள்ளை வேறு யாரும் இல்லை. நான் இருக்கும் வீட்டுக்காரரின் மகள். ஆனால் ஒன்று; அவை எங்கடை ஆட்கள் இல்லை. வேதக்காரர். நான் செய்தது பிழை என்றால், மன்னித்து விடுங்கோ அம்மா. கல்யாணத்தை 8ம் திகதி [8.01.95] சேர்ச் [Church] கல்யாணமாக வைக்க யோசனை,

கட்டாயம் அக்காவவையும் அம்மாவும் வரவேண்டும். இன்னொரு விடயம் அம்மா. இப்ப நாங்கள் இருக்கிற வீடு மூத்த மகளுக்கு எழுதிக் கொடுத்தாச்சுது என அறிகிறேன். இனி எப்படியும் புறம்பாக இருக்கிறது தானே நல்லது. அம்மா கொஞ்சக் காசு அனுப்பினால், ஒரு வீட்டை வாங்கலாம். முடியாவிட்டால் இப்போதைக்கு வாடகைக்கு ஒரு வீட்டை எடுக்கலாம். முற்பணத்திற்கு குறைந்தது இலட்ச ரூபா தேவை. அம்மாவும் மருமகளோட்டை வந்து தங்கலாம்

தானே. கமலாக்காவுக்கும், விமலாக்காவுக்கும் சொல்லுங்கோ றான்ஸ்பர் [Transfer] எடுத்துக் கொண்டு கொழும்புக்கு வரச்சொல்லி. அம்மாவையும், அக்காமாரையும் என்ரை நற்காரியத்திற்கு காணும் ஆவலாக உள்ளேன். நன்றி அம்மா. உங்களை எதிர்பார்க்கும் உங்கள் அருமை மகன் -

ஆ. தனபாலன்

7

புன்னாலைக்கட்டுவன்.
8.1.95

பிள்ளைகள் பிரச்சனை என்று ஒன்றும் இல்லை! எல்லாம் பெற்றோர் பிரச்சனையே என்று என்றோ உளவியல் பாடத்தில் படித்த தத்துவம் இப்போது உண்மை எனப்படுகிறது.

எனக்கு நானே செருப்பால அடிக்க வேணும். நான் முழு விசரி. படித்த முட்டாள். பட்டதாரி ஆசிரியையாக இருந்தும் பிள்ளையைச் சரியாக கட்டுப்பாடாக வளர்க்கத் தெரியாத பைத்தியம். நான் உன்னை அளவுக்கு அதிகமாக செல்லம் தந்து கெடுத்துப் போட்டன். ஏன் இவ்வளவு காசு? எப்படிச் செலவளிக்கின்றாய் எண்டு இதுவரைக் கேட்டேனா? கட்டுப்படுத்தினேனா? மற்றப் பிழை கேட்கக் கேட்கக் காசை அள்ளித் தந்தது. காசை எப்படி எடுத்தேன், எப்படித்

தேடினேன் என இன்று வரை எழுதாதது இன்னுமொரு பிழை. எல்லாம் நான் விட்ட பிழையடா. எனக்கு பிள்ளை வளர்க்கத் தெரியாது. நான் ஒரு பேச்சியேதான்!

டேய்! நான் உனக்கு அனுப்பிய காருக்கான காசு என்ரை தாலிக்கொடி வித்த காசடா. என்ரை பிள்ளைகளின் கையில கழுத்தில இருந்த பவுண் நகை நட்டும் ஒன்றும் இல்லை. மானத்தைக் காக்க கிலுட்டு நகை போட்டிருக்கிறோம். மூன்று பேர் முக்கி முக்கி உழைச்சும் ஒரு சதம் மிச்சம் இல்லை. இன்னும் ஏராளம் கடன். உனக்கு எங்கடை கரைச்சல் தெரியப்படாது; தெரிந்தால், துக்கப்படுவாய்; படிப்புக் குழம்பிப் போகும் என்று நினைச்சு எங்கடை கஸ்ட நஷ்டங்களை நாங்கள் காட்டவில்லை. முற்றும் முழுதுமாக உண்மைகளைப் புதைத்துப் போட்டோம்.

நாங்கள் திரைபோட்டு மூடி மறைச்ச சோகக்கதையையும் கேள். வருமானம் காணாது. கையிலும் மடியிலும் காசு இல்லை என்பதால் நானும் என்ரை பிள்ளைகளும் எங்கடை தோட்டக் குத்தகையை நிற்பாட்டிப் போட்டு, அதனைத் தொடர்ந்து நாங்களே செய்து வந்தோம். நானும் பிள்ளைகளும் கூலிக்காரரைப்போலை களைப்பையும் பாராது, கொளுத்தும் கொடும் வெய்யிலையும் பாராது, நடுவெய்யிலுக்குள் நின்று உழைத்து வாறோம்.

எங்கடை தேசத்தில தோட்டம் செய்யக்கூடிய வேலையா? எப்பவும் குண்டு மாரியும், ஷெல்லடியும். இதுகளை உன்னைப்போல ஒருவனுக்கு எழுதிப்பலன் இல்லை. தகப்பன் இல்லாத இடத்தில்

தலைமகன் தான் முன்னின்று குடும்பத்தை நடத்த வேணும். நாங்கள் பக்க பலமாக இருக்க வேணும் என ஒதுங்கியது நான் விட்ட இன்னுமொரு பெரியபிழை. எங்கடை பழைய போக்காலை குடி முழுகிப்போச்சு. இப்ப இந்தச் செல்லம்மா விழித்துக்கொண்டாள்; அவள் துணிந்தும் விட்டாள்!

தகப்பன் இல்லாதவிடத்து அவளே தலைவி. அவள் தன் கடமைகளைச் சரிவர உணர்ந்து பிரச்சனைகளுக்குத் துணிச்சலாக முகம் கொடுத்து தன்ரை கடமைகளை அவள் முன்னின்று தானே சரிவரச் செய்வாள். 8.1.95 சேர்ச் கல்யாணம் தானே!.. நல்லது நீ கல்யாணம் கட்டு!.. தாயும் பொம்பளைப் பிள்ளைகளும், ஒரு ஆம்பிளைப் பிள்ளையின்ரை இழப்புக்கான ஈமக் கடன்களை திருவடிநிலைக்குப் போய் முழுமையாக நிறைவேற்றுவார்கள்.

ஒரு பொறுப்புணர்வற்ற மகனைப் பெற்ற பாவி,
ஆறுமுகம் செல்லம்மா

தினத்தந்தி 10-09-1995

# உள்ளொளி

நீறு பூத்த நெருப்பு. இதுதான் என்ரை உண்மையான நிலை. வெளியே நீறு. உள்ளே நெருப்பு.

நெற்றியில் குங்குமப் பொட்டு. உதட்டில் புன்முறுவல். கொண்டையில் பூக்கள். வெளிப்பார்வைக்கு சகல சம்பத்தும் நிறைந்த பொம்பிளை மாதிரி.

வெளியே என்னைப்பற்றி நல்லபிப்பிராயம். ஏன் எங்கடை பள்ளிக்கூடத்திலும் சக ஆசிரியர்மார் ஒரு குறையுமற்ற நிறைவான ஆசிரியை எண்டுதான் நினைக்கினம்.

பெயருக்கு வெளிநாட்டால் வந்த பெருமை வாய்ந்த மாப்பிள்ளை. ஆசைக்கு ஒரே ஒரு குழந்தை, அதுவும் ஆண் குழந்தை, பிறகு யார்தான் பெருமையாகப் பேசாயினம்? எங்கடை கலாசாரம் எண்டு நினைக்கிறன். பள்ளிக்கூட நற்காரியங்களுக்கு முன்னிண்டு செய்ய என்னையும் கேட்கினம்.

ஆனால், நெஞ்சுக்குள் நெருப்பு. கனல் விட்டு எரியும் பெருந் தீ. அது, என்னைப் பலமாகச் சூடுகுது. சுட்டுச் சுட்டு எரிக்குது. நான் மெல்ல மெல்ல உள்ளூரக் கருகிக் கொண்டே போகிறன்.

வெளியே வெறும் பூச்சு. அசல் நடிப்பு. இது எனக்கு மட்டும் தான் தெரியும்!

எனக்கு நடிக்கத் தெரியும். நல்லாகத் தெரியும். அப்பா பேர் பெற்ற நடிகர்தானே! நானும் அப்பாபோலை வலு அழகாக நடிக்கிறன். எனக்கு வேஷப் பொருத்தம் பிழை இல்லை!

நான் கண்நிறைந்த கண்ணாளனோடை வெள்ளை நிற புத்தம் புது சாலி வாகனத்தில் அதிகப்படி அவற்றை தோளிலை கைபோட்டபடி பாடசாலைக்குப் போறன். பின்னேரமும் சரிநேரத்திற்கு அவர் வந்து கேற்றடியில் நிற்பார். சேர்ந்து சிரித்தபடி வந்து போவம். ஆர்தான் நாங்க குதூகலக் குடும்பம் எண்டு நம்பாயினம்...?

அவர் ஆண் அழகன்... இரண்டாம் பேச்சுக்கே இடமில்லை!

மனிசன் குழந்தை போல வசீகரம். மனமும் குழந்தை போலைதான். மனத்தில் கள்ளம் கபடம் இல்லை. உடல் நிறம் சந்தனம். கட்டுமஸ்தான தேகம். கறுத்த சுருண்ட கேசம். ஆழமான அரும்பு மீசை. நல்ல உயரம். வழமையாக அதி நவீன ரவுசர், சேட். அவரிலை ஆர்தான் ஆசை கொள்ளாயினம்? நானும் உண்மையில் ஆசைப்பட்டுத்தான் கலியாணம் செய்தன். அந்த ஆசை நிராசை ஆகிவிட்டதே!

எனக்கு நல்லாகத் தெரியும். அழகானவர் கிடைத்து விட்டார் எண்டு எங்கடை ரீச்சர்மார் எல்லாருக்கும் வலு பொறாமை. அதுவும் வயது ஏறியும் இன்னமும் கன்னியாகவே இருக்கிறதுகளுக்கு...? அதுகள் பாவம் பாருங்கோ!

அவர் சந்தனம் என்றால் நான் நிறம் குறைவு. ஓம் பாருங்கோ! அவர் சந்தன நிறம். நான் எம் மண்ணுக்குரிய மாண்பான கருமை நிறம்.

ஆனால் பாருங்கோ! நான் நல்ல ஒல்லி. அளவான உயரம். என்ரை கூந்தல் எனக்குத் தனி அழகு. குலைச்சு விட்டால், முழங்காலுக்குக் கீழை இறங்கும்.

கறுப்பிலும் ஒரு அழகிருக்கும் பாருங்கோ. அந்த அழகுதான் என்ரை அழகு!

இனி அவர் என்ரை மச்சான். சொந்த இரத்தமுறை மச்சான். நைஜீரியாவிலை எட்டாண்டுகள் ஒரேயடியாக உழை உழை என உழைச்சு காசை அள்ளிக்கொண்டு வந்ததாக ஊரிலை கதை.

ஆக்கள் எனக்கு நேரேயும் சொல்லி இருக்கினம். எங்கடை சனங்கள் கொஞ்சம் மன எரிச்சலும்தான்! என்ரை அப்பா அம்மா ஆசிரியர்கள். நான் அவைக்கு ஒரே ஒரு செல்லப்பிள்ளை. உண்மையில் அப்பா அம்மாவின் அன்புக்கு குறைச்சலே இல்லை!

ஆனால் அவர்!... என்ரை துரதிர்ஷ்டம்!

ஒரே ஒரு ஆண்டு நெருக்கமாகப் பழகினார். நினைக்கவே சந்தோஷமாக இருக்குது. பிறகு ஏதோ சனியன் பிடித்ததுபோல மெல்ல மெல்ல ஒதுங்கிக் கொள்ளுகிறார்.

வயது வந்து வலு கட்டுப்பாடாக இருந்த எனக்கு என்னை விட்டு அவர் ஒதுங்குகிறது மனதுக்குள்ளை ஏதோ ஒரு மாதிரி இருக்குது பாருங்கோ! - சொல்லிக் கொள்ள வெட்கமாகக் கிடக்குது!

ஒரே ஒரு வருட சந்தோஷ வாழ்க்கையால் ஒரே ஒரு ஞாபகச் சின்னம். அடுத்த இரண்டு ஆண்டுகளும் ஒரே பாலைதான்!

இப்ப நான் அழுகிறன். தனிமையான நேரம் அழுகிறன். நல்லாக அழுகிறன் - கண்ணீரும் கம்பலையுமாக!...

ஆரம்பத்தில் சந்தோஷப்பட்ட அப்பா அம்மா பிறகு சந்தேகப்பட்டு, இப்ப உண்மை நிலையைக் கண்டு பிடித்து விட்டினம்; கவலைப்படுகினம்!

உவை கவலைப்பட்டு என்ன பலன் பாருங்கோ?... என்ரை இண்டைய நிலைமைக்கு உவையும்தான் பொறுப்பு! உவையின்ரை குத்தல் பேச்சு - வைதீகப் போக்கு சட்டாம்பிள்ளைத்தனம் அவரை இந்த நிலமைக்குத் தள்ளி இருக்கு!...

நானும் தெரிந்தோ தெரியாமலோ பிழை விட்டிருப்பன்! தொழில் தோஷம் பாருங்கோ! சிலவேளை நான் அறியாமல் சட்டாம்பிள்ளைத் தனமாக நடந்திருப்பன். ஆசிரியர்மாற்றை குணம் அதுதானே! அது அவற்றை மனதைப் புண்படுத்தியும் இருக்கும்!...

இப்ப என்ன செய்யலாம்? இவரை எப்படி உணர வைக்கலாம்?...

எப்படித் திருத்தலாம்?... எனக்கு ஒண்டுமாகத் தெரியவில்லை!...

மாமா மாமிக்கு தெரியும் பாருங்கோ! அவையளும் எங்களைப் போலை படிச்ச சனங்கள். இரண்டு பேரும் றெயில்வே டிப்பாட்மென்ட்டில் வேலை செய்தவை. மாமா றெயில்வே 'ஹெட்காட்'. மாமி 'றெயில்வே கிளறிக்கல் சேவன்ற்'. அவைகள் இவருக்கு சொல்லிச் சொல்லிப் பாத்து கேட்காததினால் கதைப்பதை அடியோடு விட்டிட்டினம். இவரைத் தங்கடை வீட்டை வரவேண்டாம் எண்டும் சொல்லிப் போட்டினம்.

இதுகள் வெளியே சொல்லக்கூடிய விஷயமா?... மனந்திறந்து பேசக்கூடிய விஷயமா?... மனத்துக்குள்ளை அடைத்து, அடைத்து மனம் வலுவாகக் கனக்குது பாருங்கோ..!

எப்படி விளங்க வைப்பது?
கறுப்பெண்டா என்ன பாருங்கோ?...

தாம்பத்திய சுகம் குறைஞ்சிடுமா? செக்ஸ்சுக்கு நிறம் துணையே ஒழிய, நிறம் தான் செக்ஸ் இல்லையே!

செக்ஸ் ஒரு வகை உணர்வு. அதுக்கும் நிறத்துக்கும் நேரடிச் சம்பந்தம் இல்லை! இதை நான் சொல்லி இருக்கிறேன். சில சிவத்தப் பெண்களைக் குறிப்பிட்டு, அவையின்ரை தாம்பத்திய வாழ்வு சீர்குலைந்து, விவாகரத்துக் கோரி, வழக்காடுவதைச் சுட்டிக்காட்டியும், இவர் நம்பினதாகத் தெரியவில்லையே!

முக்கிய பிரச்சனை அது. எனக்கு நல்லாகத் தெரியும். நான் படித்துப் பட்டம் பெற்று ஆசிரியர் தொழில் புரிவது சில சமயங்களில் சிலர் என்னை மட்டும் 'ரீச்சர்' எண்டு மதிப்பது நானும் பட்டதாரி எண்ட தடிப்போடு நடந்தும் இருப்பன். என்னவோ?... சில வேளைகளில் பழக்க தோஷம். நான் இவரோடு சட்டாம்பிள்ளைத்தனமாக நடந்து, மனதைப் புண்படுத்தி இருப்பன். என்ன எப்படியென்டாலும் நான் வேணுமெண்டு செய்யவில்லை! அதுவெண்டா உண்மையிலும் உண்மை!

இவர் படிக்காமல் வெறுமனையே O/L வரை படித்த கையோடு, இயற்கைக் கெட்டித்தனத்தைப் பயன்படுத்தி தான் மோட்டோ மெக்கனிக்காக வேலை பாத்ததை ஏதோ தரக் குறைவு எண்டு கணக்கிட்டுள்ளார் போலை கிடக்கு.

செய்யும் தொழிலில் என்ன ஏற்றத் தாழ்வு? ஒவ்வொரு வகைத் தொழிலும் அதனளவில் மதிப்பும் பெறுமதியும் மிக்க ஒண்டுதானே! காந்தி சொன்னது எங்கேயோ எப்பவோ வாசித்த ஞாபகம். 'Every work is a cog which plays an important role in the wheel of production'. மகாத்மாகாந்தி இந்தக் கருத்துப்படத்தான் சொன்னதாக ஞாபகம்.

இதுகளை உணரவைக்க ஒவ்வொரு வாய்ப்பான சந்தர்ப்பங்களையும், நல்லாக பயன்படுத்துகின்றன். என்ரை 'நித்திய ஓதல்' வேலை செய்யாமற் போகுமோ...?

இன்னொரு பிரச்சனை பாருங்கோ...! சம்பந்தப்படும் நானே எங்கடை நோயுக்கு வைத்தியம் செய்வதால் தப்பபிப்பிராயத்துக்கு வித்தாகிவிடும்தான்! என்ரை நல்ல நோக்கத்தை அவர் தப்பாக சட்டாம்பிள்ளைத்தனம் எண்டு கணக்கு முடிக்கிறாரோ, என்னவோ!...

உண்மையான நேரடிப் பிரச்சனைக்கு வாறன். ஆரம்பத்திலை இவர் குடிப்பது இல்லை. பிறகு மெல்ல, மெல்ல குடி. இதுகள் இவற்றை பழைய கூட்டாளிமாரால் ஏற்படுத்தப்பட்ட பழக்கமாகவும் இருக்கும். இப்ப நிறை வெறி. இராவிலை போத்தல் போத்தலாக வாத்துக் கட்டுகிறார். பிறகு மனுசன் விடியும் வரை விறகுக் கட்டை மாதிரித்தான்...

அப்ப புதிதாக கட்டின மனிசிபாடு?... ஆசையை அடக்கி அடக்கி கட்டிக் கட்டி கட்டுப்பாடாக இருந்த என்பாடு?...

இவருக்கு வீட்டு வேலை இல்லை! அப்பா, அம்மா பென்சனியேர்ஸ். விழுந்துகட்டி சங்கக் கடை போறதிலை இருந்து சமையல் வரை முழு வேலையையும் வலு கிளீனாகச் செய்து போடுவினம். தாமாக முன்வந்து செய்துபோட்டு பிறகு குத்தல் பேச்சு. 'நாங்கதான் சுமைகழுதைகளோ? நாங்கள் தான் பொதிமாடுகளோ?' எண்ட வித நக்கல்கள் தேவையில்லைப் பாருங்கோ! இந்த விசயத்திலை அப்பாவைவிட அம்மா ஒருபடி கூட. ஊத்தைப்பாஷை பேசுவதில் அம்மா விண்ணி.

பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுக்கவேணும் பாருங்கோ! வேலையில்லாதவரின் மூளை பிசாசுகளின் உறைவிடம் தானே?...

அப்பா, அம்மா இவரோடை கதை காரியத்தைக் குறைத்துப் போட்டினம்.

இவர் வெளிநாட்டு அந்நிய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுப் போனார். அதுதான் பிரச்சனை எண்டும் சொல்லிப் பார்த்தன். கேட்டினம் இல்லை. நீங்கதான் தேடித்தந்த உங்கடை மாப்பிள்ளை எண்டும் சொன்னேன். அதுக்கும் மசியவில்லை.

இன்னொரு சங்கதி பாருங்கோ. அப்பாதான் இந்த அரசடி ஆலய தர்மகர்த்தா. அதுதான் அப்பா அவையின்ரை பரம்பரைக் கோவில். தலைமுறை தலைமுறையாக அப்பாவின்ரை அடிகொடியினர்தான் கோயில் நிர்வாகம். ஏன் அந்தக் கோவிலுக்கு இராஜகோபுரம் கட்டுவிச்சு, புதுப்பொலிவு ஆக்குவித்தது, அப்பாவின்ர அப்பா - 'தாத்தா' சிங்கப்பூர் சிவசுப்பிரமணியம்தான்.

ஆனால், இந்த ஆண்டு மாத்திரம் தருமகர்த்தா வேலைக்கு அப்பா வலுக்கட்டாயமாக மாட்டேன் எண்டு போட்டார். கேட்டதற்கு குடும்பத்திலை ஆச்சாரம் கெட்டுப்போச்சு. ஆச்சாரம் இல்லாதவன், ஆலய நிருவாகத்திற்கு ஆசைப்படக்கூடாது எண்டு மறுத்திருக்கிறார்.

ஆள் கிடைக்காததாலை, இவரை மாப்பிளையாகத் தேர்ந்தெடுத்தது ஆச்சாரமோ பாருங்கோ? இவற்றை தொழில் குறைஞ்சதொன்று என்று நினைச்சு, கொஞ்சம் அப்படி இப்படி மனநோகக் குத்தலாகப் பேசுவது ஆச்சாரமோ பாருங்கோ?...

இந்த விதண்டாவாதங்களை விட்டு, சொன்னகதைக்கு வாறேன்...

அப்பா பாருங்கோ, எங்கடை குறிச்சியிலை நடப்பு நாணயமான பெரிய புள்ளி. மனிசன் கதை குறைவு. கதைத்தால் வாய்திறந்தால் யாரும் எதிர்க்கதை பேசாயினம்.

அப்பாவுக்கு இன்னொரு குணம் பாருங்கோ. கோவம் வந்தால் மௌனம் ஆகிவிடுவார். கடுங்கோபம் எண்டால், ஏசார்; பேசார்; சண்டைக்குப் போகார். ஆமைபோல வெளி அவையவங்களை அடக்கிக் கல்லாகிவிடுவார்.

இப்ப இவரோடை அப்பா கதை காரியமில்லை; மௌனம்!

எங்கடை கெட்ட காலம். இப்ப இப்ப இவர் கூடுதலாகக் குடிச்சிட்டு, குடிவெறியிலை கத்திறது; சாப்பாட்டு நேரம் கோவிக்கிறது; சண்டை போடுறது; சட்டி பானையை உடைக்கிறது.

அண்டு ஒரு மாதத்துக்கு முன்பு எண்டு ஞாபகம். இவர் குடிகாரரோடு சண்டை போட்டு மண்டை உடைபட்டு வீட்டை வந்த கையோடு மௌனமான அப்பா இன்றுவரை இறுகினாரே ஒழிய, இளகவில்லை. அம்மாவுக்கு ஆச்சாரம், அப்பாவின்ரை தருமகர்த்தா வேலை, குடும்ப நற்பேர் கெட்டது பெரிய கவலை. இவரைத் திருத்தித் தரும்படி அரசடியானுக்கு நேத்தி போட்டு விட்டு, அம்மாவும் இவரோடு கதைகாரியம் இல்லை.

இதுகளாலையோ, என்னவோ இவர் இப்ப என்னோடும் கதை குறைவு. ஒரு கதை இரண்டு கதைதான் பேசுவார். பிறகு இருவரும் மௌனம் தான்!

நிலமை இப்பிடியென்டால் சொந்த இளம் மனிசிக்கு எப்பிடி இருக்கும் பாருங்கோ!...

இவருக்கு ஒரே ஒரு ஆறுதல் எங்கடை சேரன்தான்!.. 'சேரன்' அதுதான் எங்கடை குஞ்சின்ரை பெயர் பாருங்கோ! அவன் அப்பாவோடை நல்லாகச் சேருவன். அவரும் அவனோட நல்ல வாரப்பாடு, இரண்டு பேரும் சேந்து விளையாடுவினம். செல்லம் கொட்டுவினம். சேரன் 'அப்பா, அப்பா' எண்டு கலைச்சுக் கொண்டு ஓடுவான். 'சேரன்! என்னைப் பிடி பாப்போம், பிடி பாப்போம'', எண்டு இவர் கலைபட்டு ஓடுவார். இரண்டு பேரும் ஓடுப்படுவினம். சிலவேளை இவர் சேரனைத்தூக்கி, கொஞ்சி, உயர எறிந்து விளையாட்டுக் காட்டுவார்; சேரனுக்கெண்டே முன் பெட்டி பூட்டிய புத்தம் புது

ஏசியா சைக்கிள் வாங்கி சேரனைக் கொண்டு ஊர் சுற்றுவார்; இடங்கள் காட்டுவார்; இனிப்புகள், விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் குடுப்பார். சும்மா சொல்லப்படாது தகப்பனும் மகனும் நல்ல ஒட்டுப் பாருங்கோ.

அப்பாவும், அம்மாவும் அவரை எனக்குப் பிடிக்காவிட்டால் விவாகரத்துக்கு விண்ணப்பிக்கச் சொல்லுகினம். அம்மாவுக்கு வீண் பவுசுதான் பெரிசு. எனக்கு இது வாழ்க்கை பாருங்கோ. அப்படி அவசரப்பட்டு பிரிகிறதுக்கு நான் சம்மதிக்கப் போறதில்லை! பொறுத்திருந்து பார்ப்பம். பொறுத்தார் புவி ஆள்வார்...

நீங்கள் என்ன சொல்லுறியள்? என்ரை பொறுமை நல்லதோ, இல்லையோ?..

இண்டைக்குத் தீபாவளி. போன வாரமே போத்தல் போத்தலாக கொண்டு வந்து அடுக்கத் தொடங்கி விட்டார்.

இண்டைக்கு கோழி விழும்; குடியும், கூத்தும், கும்மாளமுமாக இருக்கும்; இவற்றை புதுக்குடிகாரக் கூட்டாளிமாரும் வந்தாலும் வருவினம்...

அங்கை! என்ன சங்கதி புதினமாகக் கிடக்குது! விடிய வெள்ளணக் குளிக்கிறார். விடியவே குடிக்கிற மனிஷன், இண்டைக்கு குளிகுளியெனக் குளிக்குது.

சுவாமி அறைக்கையும் ஓடுது. எல்லாம் புதினமாகக் கிடக்குது!...

'உமா! இஞ்சைவா' - என்னைத்தான் கூப்பிடுது. அதுதான் என்ரை பேர் பாருங்கோ, அப்பா பொருத்தமாகத்தான் பெயர் வைத்திருக்கிறார். பார்வதிக்கு இன்னொரு பேர் உமாதானே!

'சேரனையும் கூட்டி வா உமா' - எண்டும் அன்பாகச் சொல்லுது. நானும் சேரனுமாகச் சுவாமி அறையிக்கை போறம்.

கற்பூரத்தைக் கொளுத்தி சிவன், பார்வதி திருவுருவப் படத்தினைக் கும்பிட்ட மனிஷன் ஏதோ உரு வந்தது போலை சேரனின் தலையைத் தொட்டு,

'உமா! நான் இன்டையிலிருந்து குடிக்க மாட்டன். உழைத்து வாழ்வன் இது, சிவ சத்தியம்!' - எண்டு சத்தியம் செய்யுது. நான் எதிர்பார்க்கவே இல்லை!?...

ரண்டு பேருமாக அரசடிப் பிள்ளையார் கோவிலுக்குப் போகிறம். மழை மெல்லத் தூறுது. தேவ ஆசீர்வாதம் பாருங்கோ!

கோவிலை வலம் வந்தம். கும்பிட்டம். இவர் அடி தேங்காயை ஓங்கி சிதற அடித்தார். தேங்காய் துண்டு துண்டாக - இல்லை!... நாங்கள் செய்த பாவங்கள் சிதறல்களாகப் பறக்குது!

நேராக வீட்டிற்கு வந்த இவர் அழகான பிள்ளையார் படம் ஒன்றை எங்கடை முன் கராஜ் கட்டிடத்துள் அழகாகத் தொங்கவிடுகிறார். அதுக்கு பூ சாத்துகிறார்; தொழுகிறார்; தான் இண்டு தொடக்கம் மோட்டார் சைக்கிள் திருத்தும் வேலை செய்யப் போறதாகச் சொல்லுகிறார்.

"என்ன திடீர் மாற்றம்..." - இப்பிடிக் கேட்டும் விட்டன்.

கிடைத்த பதிலைச் சீர்படுத்தி சீர்திருத்தத்திற்கான பதிலைக் கண்டு பிடிக்கிறன்...

முந்தநாளும் இவர் வெளியே குடிக்கப் போயிருக்கிறார். போன வழியிலை கொட்டு மழை. பக்கத்து வீடொண்டுள் இவர் ஒதுங்க அது காகம் இருக்க பனம் பழம் விழுந்தது போல வரப்பிரசாதமாக அமைஞ்சு போச்சு.

இவர் மழைக்கு ஒதுங்கிய வீட்டுக்காரர் கல்வியிலை கரை கண்ட சனங்கள் - அறிவாளிகள். அவை இவரை அன்பாக வரவழைத்து தேநீரும் கொடுத்து உள் விறாந்தையுள் இருக்க விட்டிருக்கினம்.

அந்த நேரம் விறாந்தையுள் சீரியசாக ஒழுக்கக் கேட்டின் விளைவுகளைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்த கல்விமான்களின் ஒரு பேச்சு இவற்றை மனத்தைக் அப்பிடியே கவ்விப் பிடித்திருக்கு. 'குடிகாரன் தன் பிள்ளைகளை ஒழுக்கசாலியாக எதிர்பார்க்க ஏலாது' - எண்டதுதான் அது. சேரனின் நல்ல எதிர்காலத்திற்காகத் தவம் கிடக்கும் மனிஷன் சேரனை நினைச்சு திருந்துவதற்கு மனத்தை வைராக்கியமாக்கி இருக்கு.

இன்னொரு சம்பவமும் நடந்திருக்குப் பாருங்கோ! இவர் திரும்பி வந்த வழியிலை ஒரு வீட்டிலை நல்ல குடி வெறியிலை ஒரு தகப்பனும் மகனும் நாய்ச்சண்டை போல சண்டை போட்டிருக்கினம்.

அந்த அசிங்கம், மனிஷனின் மன வைராக்கியத்தை மேலும் பலப்படுத்தி இருக்கு.

இண்டைக்குத் தீபாவளி - ஒளிவிழா! உண்மையான ஒளி இவருக்கு ஏற்பட்ட உள்ளொளிதானே!

**வீரகேசரி 22-10-1995**

# நற் சிந்தனை

கடந்த இரவு அப்பாடசாலையில் பரிசளிப்பு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இன்று பாடசாலைக்கு மாணவர் வரவு மிகக் குறைவு. ஒரு சில ஆசிரியர்களும் மாணவர்களும் மாத்திரமே பாடசாலைப் பொருள்களை ஒதுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தனர்.

முற்பகல் பத்து மணி. தேநீர் இடைவேளை இது.

வெற்றிப் பூரிப்பு உணர்வோடு தேநீரை அருந்திக்கொண்டு இருந்தார் பாடசாலை அதிபர். அதிபரின் அறையுள் நுழைகிறார் இளம் ஆசிரியர் இளங்கோ. அவரை அதிபர் அன்பாக வரவேற்று, அவருக்கு தேநீர் வழங்குகின்றார்.

அதிபரும் ஆசிரியர் இளங்கோவும் நடந்தேறிய பரிசளிப்பு விழா பற்றி கலந்துரையாடுகின்றனர்.

"விழா மிகவும் சிறப்பாக நடந்தது. பாராட்டி எல்லோரும் சொல்லுகினம். விழாவின் வெற்றிக்கு உழைத்த

உங்களுக்கு கடமைப்பட்டுள்ளோம். உங்களுக்கு திரும்பவும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.", எனக் கூறிய பாடசாலை அதிபர் இளங்கோவிற்கு நன்றி நவில்கின்றார்.

"நன்றி சேர். உங்கடை அதிபர் அறிக்கை நன்றாக இருந்தது. விழாப் பிரதம அதிதி - எமது உதவிக் கல்விப் பணிப்பாளரும் அதனை தனது சிறப்புரையில் குறிப்பிட்டும் இருந்தார். ஆனால்..."

'ஆனால்' எனப் பேச்சை நிறுத்திக்கொண்ட ஆசிரியரை அதிபர் தொடர்ந்து பேசும்படி கேட்டுக்கொண்டார்.

"ஆனால் ஒன்று!.."

"சொல்லுங்கோ!"

"பரிசளிப்பு விழாவின் வெற்றிக்கு உழைத்தவரைச் சரியான இடத்திலை இருட்டடிப்புச் செய்து போட்டியள். நாடகத்தைக் குறிப்பிடும் போது..."

"குறிப்பிடும்போது!.. தயங்காமல் சொல்லுங்கோ"

"நாடகத்தைக் குறிப்பிடும்போது, நாடகத்தின் வெற்றிக்குக் கடுமையாக உழைத்தவர் கந்தையா மாஸ்ரர் என்று நாடகத்துக்கு தொடர்பில்லாத ஒருவரைக் குறிப்பிட்டு இருந்தீர்கள்"

"அது சேர்"

"ஓம் சேர். விழாத் தொடர்பான அழைப்பிதழிலும் நாடக சிருஷ்டிகர்த்தாவை இருட்டடிப்புச் செய்து போட்டியள். 'பாடசாலை மாணவர் நடிக்கும் நாடகம்' என்று மட்டும்

வெறுமனே நாடகத்தை அறிமுகப் படுத்தி இருந்தீர்கள். இயக்குநர் இல்லாத நாடகமா இது?."

"சேர் சீனியர் ரீச்சர்சைப் பகைக்கக் கூடாது. ஸ்ராவ்வுக்குள்ளே பிளவை ஏற்படுத்தக் கூடாது. படிப்பிக்கும் ரீச்சர்சை நான் திருப்திப்படுத்த வேணும்தானே."

இக்குறிப்பு வாக்கு வாதத்திற்கு சூடேற்றி விடுகின்றது.

"அப்ப ஜூனியேர்சை உயிரோடை புதைக்கிறதா சேர்? சேர், இந்த நாடகத்திற்கு யார் பாடுபட்டது? உண்மையில் கந்தையா மாஸ்ரர் ஏதாவது செய்தாரா?.."

"சேர்"

"ஏன் சேர் தயங்குகிறீர்கள். இந்தப் பாடசாலையில் எவ்வளவு கால இடைவெளிக்குப் பிறகு 'ஆண்டுக்கு ஒரு பரிசளிப்பு விழா', 'அதில் ஒரு நல்ல நாடக அரங்கேற்றம்' என்ற நல்ல நடைமுறைக்கு உயிரூட்டியவர் யார்? "

"சேர் கொஞ்சம் பொறுங்கோ."

"சேர் நீங்கள் என்னை மன்னித்தருள வேணும்" - கலைஞரான இளங்கோ சூடான உணர்ச்சியால் கொதிப்படைந்து காணப்படுகின்றார். மீண்டும் இளங்கோ ஆசிரியர் தொடருகிறார்.

"திட்டமிட்டபடி பரிசளிப்பு விழா, நாடக அரங்கேற்றம் என்பனவற்றுக்கு உழைத்தவர் யார்? நாடகத்தின் பொறுப்பாசிரியர் என்ற உயர் ஸ்தானம் எனக்குத்

தரப்படாவிட்டாலும் தகுந்த ஸ்தானம் தந்திருக்கலாமே? இந்த நாடகத்தை முழு இரவு கண்முழித்து எழுதியவர் யார்? பாடல் ஆடல் வடிவங்களை வடிவமைத்தவர் யார்?"

"இளங்கோ கோபப்படுகிறீர்கள்?"

"நெஞ்சு கொதிக்குது சேர். சூடு சுரணை உள்ளவனுக்கு கொதிப்பு வரும்தானே சேர். ஓடி ஓடி உழைத்த உண்மை உழைப்பாளியை உதாசீனம் செய்யக்கூடாது சேர். அது பெரிய பாவம். நீங்கள் செய்தது ஒரு கலைஞனை உயிரோடு சமாதி கட்டியதற்கு சமன் சேர்."

"சேர், சேர் கொஞ்சம் பொறுங்கோ. கடுமையான வார்த்தைகளால்..."

"தாக்கி விட்டேனோ? என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதைப் புண்படுத்துவது எனது நோக்கம் அல்ல; பிழைகளைச் சுட்டிக் காட்டுவது மாத்திரமே எனது நோக்கம். நெஞ்சம் கொதிக்குது சேர். என் நிலைமையை நீங்களும் கொஞ்சம் யோசிக்க வேணும் சேர்" - ஆசிரியர் இளங்கோ மீண்டும் தொடருகின்றார்.

"சேர் நான் மன்றாட்டமாகக் கேட்கிறன். என்னைக் கொஞ்சம் பேச விடுங்கோ. மேலும் குறுக்கீடு செய்யாதீங்கோ சேர்."

"எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் இந்த நாடகத்தை உருவாக்கினன். சுய மரியாதைக்கு அஞ்சி இதுவரை ஒன்றையும் வாய்விட்டுச் சொல்லாததால் எல்லாம் இலேசாக - சுலபமாக - சோலிகளே இல்லாமல் நடந்தேறியது என்று கருதுகின்றீர்களா சேர்?

சொல்லுகிறன் என்று கோவிக்காதையுங்கோ சேர். எங்கடை ஆசிரியர் குழு தெனாலி இராமனின் குதிரை போன்ற ஒன்றுதான் சேர். அதற்கு தன்னாரவாரம். செயற்படும் சுயசக்தி; செயல்திறன் இல்லை. சும்மா ஒதுங்கி தாமுண்டு தம் வேலையுண்டு என்று நாடகத்துக்குப் பங்களிப்புச் செய்யாது இருந்த ஆசிரியர் குழுவையும் கந்தையா மாஸ்ரரையும் இழுத்துப் போட்டியள் சேர்.''

''அது சேர்...''

''நான் மன்றாட்டமாக மீண்டும் மீண்டும் கேட்கிறன் சேர். தயவு செய்து குறுக்கிட்டு என் பேச்சு ஆர்வத்தைக் குழப்பாதையுங்கோ. என்னைத் தொடர்ந்து பேச விடுங்கோ'' - இளங்கோ தொடருகின்றார்.

''இதுவரை சொல்ல நினைக்காத ஒன்றை நிர்ப்பந்தம் நெருக்குவதாலே இப்ப சொல்லுறன் சேர். நாடகத்தில் குறிப்பாக O/L பிள்ளைகள் நடிப்பதை அந்த வகுப்புக்கு தமிழ் கற்பிக்கும் கந்தையா மாஸ்ரர் விரும்பவில்லை. ஒத்திகையில் பிள்ளைகள் பங்குபற்றுவதைக் குழப்பிய கந்தையா மாஸ்ரர் O/L றிசல்ற் இம்முறை வீழ்ச்சி அடையும் என்ற கற்பனைக் கதையைக் கட்டவிழ்த்துவிட்டு பெரும் இடைஞ்சல் தந்திருந்தார்.

இவருக்கு 'நாடக நெறியாளர்' என்று அதிபர் அறிக்கையில் மகுடம் சூட்டி இருக்கிறியள். எந்த வித ஒத்தாசையும் தராத ஆசிரியர் குழுவுக்கு 'ஒத்துழைப்புத் தந்தவர்கள்' என விருது வழங்கியுள்ளீர்கள். உடல் உதவி தராவிட்டாலும், மானசீக உதவி செய்திருக்கலாம் அல்லவா?

இந்தக் காலத்தில் மாணவ இளம் நடிகர்களை தேடிப்பிடித்தல் மிகக் கஷ்டம் சேர். பாடல்களை எழுதுவித்தல், ஆடல் அபிநயங்களை அறிந்து கொள்ளுதல் அதைவிடக் கஷ்டம்?

பாடல்களுக்கு இசை அமைப்பிக்க எத்தனை தடவைகள் நடந்திருப்பேன் சேர்?...

அவன் ஒரு இசை அமைப்பாளன். அவன் சரியான தண்ணிச்சாமி சேர். அவன் படுத்திய பாடு வாய் திறந்து சொல்ல ஏலாது. அந்த இசை அமைப்பாளன் வீட்டில் தவம் கிடந்து பெற்ற அரும் இசை வடிவமைப்புக்கள்தான் நாடகத்துக்கு மெருகேற்றியவை. தனிய கர்நாடக சங்கீதத்துக்கும், பண்ணிசைப் பண்களுக்கும் மாத்திரம் பழக்கப்பட்ட மாணவர்களை நவீன நாடகப் பாணியில் பாட வைக்க முடியுமா சேர்? தனிய அபிநய அசைவுகளுக்கும், அடவுகளுக்கும் பழக்கப்பட்ட மாணவர்களை நாடகத்தில் நடிக்க வைக்க முடியுமா சேர்? கல்லில் நார் உரிக்கலாமா சேர்? எனக்கு நார் உரிக்க வேண்டி வந்தது; கரைச்சலையும் கஷ்டத்தையும் பாராது உரித்தேன்; நாடகத்தை நிறைவேற்றினேன்.

எப்படி நாடகத்தை நிறைவேற்றினேன் என்று நீங்கள் கேட்கக் கூடும். பாடசாலையில் நாடகப் பட்டறைகள் உங்கள் அனுமதியோடு ஏற்படுத்தினன். எழுத்துப் பிரதிகளில் இருந்து சில சுவாரஸ்யமான காட்சிகளைத் தெரிந்தெடுத்து, தலைசிறந்த கலைஞர்களை வரச்செய்து, அவர்களைக் கொண்டு அவற்றை நடிப்பித்துக் காண்பித்தன். நான் போட்ட இத் தூண்டிலில் மீன்கள் தானாக விழுந்தன; நாடகம் வெற்றி பெற்றது."

"நீங்கள் கஷ்டப்பட்டதை யார் சேர் மறுக்கினம்? உங்கடை உழைப்பால் தான் நாடகம் வெற்றி பெற்றது"

"நீங்கள் மறுக்கவில்லை; உங்கள் நெஞ்சு மறக்கவில்லை. அதனால், பெரிய பிரயோசனம் இல்லை! மிக முக்கியமான அதிபர் அச்சிட்டு வெளியிட்ட அறிக்கை ஆணித்தரமாக மறுக்கிறதே! பிரசுரம் அச்சொட்டாக உண்மையை மறைக்கிறதே. நான் நாடகத்தில் ஆத்மார்த்தமாக ஈடு பட்டதால் என்ரை தேகம் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை. ஆனால், என்ரை பேர்ஸ் பெரிதாகப் பாதிப்படைந்தது; எனக்கு செலவு ஏற்பட்டது. நான் ஆர் சேர்?.. ஒரு சாதாரண ஆசிரிய பயிலுநன்."

"அதுதான்"

"அதுதான் என்னை அசட்டை பண்ணி இருக்கிறியள். சேர் நான் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிப் பட்டப்படிப்பு படித்துக்கொண்டு இருக்கிறன். இது எனக்கு இறுதியாண்டு. இன்னும் ஒரு ஆண்டில் நான் பட்டதாரி ஆசிரியர் சேர். இதைவிட நான் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இப்பிடி நான் என்னைப் பற்றிக் குறிப்பிடுவது அநாகரிகம் என நினைப்பியள். சொல்லத் தேவையற்றதை சொல்ல தேவையில்லாத இடத்தில் சொல்லுவது தான் அநாகரிகம்.

சொன்ன கதைக்குத் திரும்பவும் வருகிறன்... பயிலுநர் ஆசிரியருக்கு சம்பளம் போதாது என்று சொல்லித்தான்

தெரிய வேண்டிய ஒன்றல்ல. பயிலுநருக்கு வழங்கப்படுவது கைச்செலவிற்கான ஒரு சிறு தொகைதான் சேர். பட்டறைகளுக்குப் பாடசாலை காசு தரவில்லை. நடிகர்களுக்கு தேநீர்ச் செலவும் என்னோடை. என்னுடைய குறைந்த சம்பளத்தில் கூடிய பகுதியை வெளிச் செலவுகளுக்கு எடுத்ததால் மன வருத்தத்தோடு சொல்ல வேண்டி இருக்கிறது. நான் எனது வீட்டாருக்குப் பாவம் செய்து விட்டன்.

எங்கள் குடும்பத்தில் நாங்கள் ஐந்து பேர் சேர். அப்பா ஒரு பென்சனியர். அவரைவிட குடும்பத்தில் உழைக்கும் ஒரே ஒரு நபர் நான் ஒருவன் தான். நான் பாடசாலையில் அடைபட்டுக் கிடக்காமல் ரியூட்டரிகளுக்குப் போய் மேலதிகமாக உழைத்து இருக்கலாம். அப்படி நான் செய்யவில்லை; அப்படி என்னால் செய்யவும் முடியாது. எனக்கு நாடகம் ஒரு பித்து சேர்; ஒருவித வெறி சேர்."

உணர்ச்சி வசப்பட்ட ஆசிரியர் இளங்கோ மீண்டும் தொடர்ந்து பேசுகிறார். "பள்ளிக்கூடம் முன்னேற வேண்டும்; பிள்ளைகளின் கலை உணர்வு வளர்க்கப்படவேண்டும்; மாணவரின் நடிக்கும் ஆற்றல் மேலோங்க வேண்டும் என்ற நல்ல உணர்வுகளின் உந்துதலினால்தான் நான் தீவிரமாக நாடகத்தில் பங்கு பற்றினேன்.

பாட்டற விழுந்த பழம்பெரும் பாடசாலையை மீள எழச் செய்ய நான் என்னை எருவாக்கி உள்ளேன் சேர்.

ஒருநாள் சேர். சோனாவாரி மழை. கும்மிருட்டு. காத்தும் இரைச்சலோடு பேய் மழையும். அன்று என் சயிக்கிளுக்கு லயிற் இல்லை. நான் போய் வரும் வயல்வெளிப்பாதை உங்களுக்கு தெரியும்தானே சேர்!. நாடகம் முடிந்து, முன் இருட்டில் வயல் வெளிப்பாதையால் போகையில் காத்து பலமாக அடித்ததால் மழைக்குப் பிடித்துக்கொண்டு போன எனது குடை முறிந்து போச்சு சேர். மழை கொட்டு கொட்டு என்று கொட்டியது. குன்றெது குழியெது என்று எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு பள்ளத்துக்குள்ளை பாட்டற விழுந்து போனன். சேர்ட் கிழிந்து உடம்பெல்லாம் ஊத்தைத் தண்ணீர்; உரசல் காயங்கள். இந்த நிலையில்தான் அன்று நான் வீட்டை போய்ச் சேர்ந்தேன் சேர்.

நான் இதுகளை இப்ப அடுக்கிக்கொண்டு இருப்பது சுய விளம்பரத்துக்கு ஆசைப்பட்டல்ல சேர். பொய்மைக்கு முடி சூட்டிப் போட்டியள். மெய்மையைக் குழிதோண்டிப் புதைத்தும் போட்டியள் என்பதுதான் என் ஆதங்கம்"

ஆசிரியர் இளங்கோ மீண்டும் தொடர்ந்து பேசுகின்றார்.

"உங்களுக்கு தெரியுமா சேர்? அன்று மழையுக்குள் நான் நனைந்ததைத் தொடர்ந்து ஒரு சில நாட்கள் எனது குரல் கட்டி நான் பேச மாட்டாமல் இருந்ததை. காய்ச்சல் தலையிடியுடனும் கஷ்டப்பட்டதை அறிந்திருப்பியளா சேர்?

அப்பிடி இருந்தும் மருந்து எடுத்தும் எடுக்காததுமாக பாடசாலைக்கு ஒழுங்காக வந்தன். நான் பாடசாலை லீவுக்குள்ளும் நாடகம் பழக்குவதற்காகப் பாடசாலைக்கு வந்தன்தானே சேர்?

போன தைப்பொங்கலன்று. நான் வீட்டில் இல்லை. மாணவருக்கு நாடகம் பழக்கிக் கொண்டு பாடசாலையில் இருந்தன். என்ரை வீட்டாரை கோவிலுக்குக் கூட கூட்டிக்கொண்டு போகவில்லை. நல்ல நாள் பெருநாளில் மாணவர்களைப் பாடசாலைக்கு வரச் செய்த பாவம் என்னைத்தான் சேரும் சார். நான் பாடசாலைக்கு வாறதும் காலை 7 மணி.; வீட்டுக்குத் திரும்பிப் போவதும் இரவு 7 மணி. ஒரு கடும் உழைப்பாளிக்கு பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் பப்ளிக்காக பெறுமதி வாய்ந்த பரிசு தந்திட்டியள் சேர்.”

“இளங்கோ நீங்கள் இவ்வளவு நேரமாக ஆவேசமாக பேசியதால் நீங்கள் பேசி முடியட்டும் என அமைதியாக இருந்தன். உங்கள் பேச்சு முடிந்ததா, இனி நான் பேசலாமா?”

“நான் ஆவேசமாகப் பேசவில்லை சேர். அது சத்திய வேகம். சரியாக இலக்கிய வார்த்தைகளில் சொன்னால், சத்திய வேட்கை சேர்.”

“இளங்கோ உங்களுக்கு தமிழ் நன்றாகத் தெரியும். நாடகமும் வரும். ஆனால், பாடசாலை நிலைவரம் - நடைமுறை தெரியாது. பாடசாலை பழக்கவழக்கம் என்று ஒன்று இருக்கு. பாடசாலைகளில் எழுதாத சட்ட திட்டங்கள்

இவை. பாடசாலையைப் பொறுத்தவரை எந்தவொரு தனி மனிதரையும் பிரஸ்தாபிப்பது இல்லை; இனி பாடசாலை மரபின்படி சீனியோர்ஸ் இருக்க, ஜூனியோர்ஸைக் குறிப்பிடுவதும் இல்லை. எந்நிலையிலும் பாடசாலையின் அமைதிச் சூழலை காத்தல் எமது தலையாய கடமையாகும்.

உங்களுக்கு இன்னும் காலம் இருக்கு. நீங்கள் இப்பதான் பாடசாலை ஆசிரியர் சேவையில் சேர்ந்த இளசு. நாங்கள் அதாவது அதிபர்மார் பாடசாலை மரபுகளை மதித்துத் தான் ஆக வேண்டும்!.."

"மரபு என்ற பெயரில் கலைஞர்களின் உணர்வுகளை அவமதிக்கக் கூடாது; உண்மைகளை மறைக்கக் கூடாது சேர். அறிவு, ஆற்றல், செயல்திறன் வளர கலைஞர்களைத் தட்டிக் கொடுக்க வேண்டும் சேர். நான் பச்சையாக ஒன்றைச் சொல்லுகிறன். கலைஞர்களுக்குப் பாராட்டு அவசியம். இன்னும் கதையை வளர்க்க நான் விரும்பவில்லை சேர். இன்றைக்கு நல்ல நாள் பெருநாள். தீபாவளி. நான் உங்களுக்கு வழங்க நினைக்கும் தீபாவளி நற்சிந்தனை இதுதான் சேர். வாழும் கலைஞரை, வாழும் காலத்தில் வாழ வையுங்கள் என்பதே அது."

சத்தியவாதி இளங்கோ விதைத்த நற்சிந்தனை விதைகள் முளைவிடுமா?..

தினத்தந்தி 22-10-1995

# திருவிளையாடல்

அன்று புதன்கிழமை. நேரம் பிறபகல் ஐந்து மணி. பகல் நேர வேலை முடிந்து அலுவலகங்கள் மூடிய வேளை. காலி வீதி பம்பலப்பிட்டி பிள்ளையார் கோயிலடியில் பஸ்ஸால் இறங்கி விறுக்கு விறுக்கென விரைந்து வந்த 'கணா' நிலப் பக்கமாகப் பிரிந்து போகும் அந்தப் பிரபல்ய ஒழுங்கையுள் இறங்கி நடக்க கடந்த பத்து நிமிட நேரமாக படாதபாடு பட்டுக்கொண்டு இருக்கின்றார்.

மடை உடைத்த ஆற்றுப் பெருக்குப் போன்று அங்கே ஒன்றன் பின் ஒன்றாக படை எடுக்கும் மோட்டார் கார்கள். அதனிடை நுழைந்து அவற்றை முந்தி ஓட முயற்சிக்கும் ஓட்டோக்கள். இவ்விரண்டையும் வெட்டி ஓடும் மோட்டார் சைக்கிள்கள். இப்படி மோட்டார் வாகனப் பெரு வெள்ள நெரிசல்களுக்கு இடையில் வீதியின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்குத் துணிந்து செல்ல முயற்சிக்கும் ஜனக்கூட்டம்.

வீதியில் வாகனங்களும் பலவகை; பல வர்ணம்; பல வடிவம். அவற்றின் அழகே தனியழகு. இந்த அழகினைக் காணும் எந்த ஒரு இரசிகனும் மெய்மறந்து மகிழ்வான்.

இப்படி, இன்னும் எத்தனையோ அழகிய கண்கவர் காட்சிகள்! அப்பப்பா!..

ஆனால், பாவம் கணா! எந்த அழகையும் இரசித்து மகிழும் மனநிலையில் இல்லை. அவரின் மனத்தை சதா குடைந்து கொண்டிருக்கும் அவரின் குடும்பப் பிரச்சினை அவரின் மன உணர்வுகளை மரக்கச் செய்து விட்டன!.

இந்த நேரம் கணாவைக் கடந்து சென்ற கார் ஒன்று கணாவின் மனநிலையினை மேலும் குழப்பிவிட்டது!.. நவநாகரிகமான கார் ஒன்றுள் நிறைவான குடும்பம் ஒன்று. காரைச் செலுத்திச் செல்பவன் வடிவழகனான இளைஞன். அவனின் பக்க ஆசனத்தில் ஒரு கட்டழகி. அவள் அவனின் மனைவி. பின்னாசனத்தில் வயதான அப்பா அம்மா. அந்த அப்பாவின் மடியில் ஒரு பாலகன்; அவன் அவரின் பேரன்.

கணாவிற்கும் அன்பு மனைவி உண்டு. அவள் யாழ்ப்பாணத்தில். கணாவிற்கு ஒரு அழகிய மகள் மட்டுமல்ல மூவர் உண்டு. அவர்கள் புற அழகும், அக அழகும் அறிவும் மிக்கவர்கள். மூவரும் பட்டதாரிகள். இருவர் அரச ஆசிரியர்கள்; ஒருவர் தனியார் கல்வி நிறுவன பிரபல்ய ரியூசன் ஆசிரியர்.

ஆனால், கணாவின் மூன்று மக்களுக்கும் இன்னமும் திருமணம் ஆகவில்லையே! மூத்தவளுக்கு வயது முப்பத்திரண்டு. அடுத்தவளுக்கு வயது முப்பது. கடைக்குட்டிக்கு வயது இருபத்தேழு.

வயது வந்த மக்களை கரைசேர்ப்பது எப்படி?.. - கணாவைக் குடைந்து கொண்டிருக்கும் கேள்வி இது. பெண்களுக்கு வரன் தேட அவர் சந்திக்காதவர்கள் இல்லை. கல்யாணத்தை எப்படியாவது பொருத்த

எத்தனையோ கல்யாணத் தரகர்மாரை நாடி உள்ளார்; பொருத்துநர் அலுவலகங்களுக்கும் போயுமுள்ளார்; கடவுளின் அநுக்கிரகம் வேண்டி நேர்த்தி வைக்காத கோவில்களும் இல்லை; என்ன செய்தும், கல்யாணம் கைகூடுதில்லையே!

அனைத்துக்கும் பெருந்தடை, கேட்கும் சீதனத்தை கணாவால் முழுமையாகக் கொடுக்கும் வல்லமையின்மையே! மூத்தவளை என்றாலும் கரை சேர்ப்பதானால், சொந்த வீடுவாசல் - நகை நட்டு - குறைந்தது பத்து இலட்சம் பணத்தொகை வேண்டுமே!.. இவ்வளவு பெருந்தொகைக்கு எங்கே போவது?.. எப்படிப் பெறுவது?..

இந்த மனச் சுமைகளோடு கணாவால் அழகிய காட்சிகளை இரசித்து மகிழ முடியுமா? அவர் இப்போது தரிசித்த காட்சி போன்ற கண்ணிறைந்த காட்சி ஒன்று கணாவின் வாழ்நாளில் நிசமாகுமா?.. விடை காண முடியாத வினாக்கள்! தீர்வு தெரியாத பிரச்சினைகள்! திக்குத் திசை தெரியாத வழிப்பயணம்!

கணா திக்குமுக்காடுகிறார். பொறுப்புணர்ச்சி மிக்க தந்தை என்றபடியால், மனத்தாக்கத்தைத் தாங்கமுடியாது கணா சில வேளைகளில் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றார்.

மக்களின் எதிர்கால நலனுக்காகக் கணா படாதபாடு பட்டுள்ளார். தாம்பத்திய இன்பத்தை காலத்துக்கு முன்பே துறந்த உண்மைத் துறவி அவர். தாம்பத்திய உணர்வு முதுமை காரணமாக இயல்பாக அற்றுப் போவது ஒன்று. மனஅடக்கம் வழியாக புலன்களை அடக்கி, ஒடுக்கி, வென்று, அவற்றைச் செயலிழக்கச் செய்வது இன்னொன்று. பாவம்! கணா இரண்டாம் வழியில் - புலன்களுக்குத் தீனி போடாது - அவற்றை வாட்டி - வதைத்து ஒரு அகப் போராட்டத்தில் வெற்றிவாகை பூண்டவர்!

இப்பொழுது நேரம் ஐந்து இருபது. அதிர்ஷ்டவசமாக கார் நீள் வரிசைக்கு இடைப்பட்ட ஈவு ஒன்று கணாவின் பின்நோக்கிய நனவோட்டத்திற்கு வேட்டு வைத்து, காலி வீதியைக் குறுக்குப் பக்கமாக ஓடிக் கடக்க உதவியது.

குறிப்பிட்ட வீடொன்றை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருக்கின்றார்.

தேவையே இல்லை. இருந்தும், தேசக் கட்டிட நிர்மாண பாணி மாறி விட்டதே என்ற ஒரே ஒரு காரணத்திற்காகக் காசைக் கரைத்து வீட்டு அமைப்பை அடிக்கடி மாற்றி, வீட்டு முகத்தை மினுக்கு மினுக்கென மினுக்கும் நவநாகரிக ஒழுங்கை அது. ஒழுங்கையின் இரு மருங்கும் உயரிய அழகிய கட்டிடங்கள். வெண்ணிறத் துகிலால் அழகுபடுத்தப்பட்ட ஆரணங்கு பொருத்தமான வெண்தாமரையைத் தலையில் சூடி, கவர்ச்சிகரமாக தலைநிமிர்ந்து முடுக்காக நிற்பது போல சர்வதேச தொலைக்காட்சிச் சாதனம் முகட்டில் பூட்டப்பட்ட அந்த அழகிய ஒற்றை மாடி வீட்டு கேற்றுக்கு கணா வந்தடைந்தார்.

வீட்டு கேற் தூணில் பொருத்தப்பட்டிருந்த கோலிங் பெல்லை மென்மையாக அமுக்குகின்றார். கதவு திறக்கப்படுகிறது. கணா மரியாதையாக வரவேற்கப்பட்டு குளிரூட்டப்பட்ட வரவேற்பு அறையினுள் அதிசொகுசு ஆசனமொன்றில் அமர்த்தப்படுகின்றார்.

கணாவிற்கு நன்கு அறிமுகமான வீடு அது. அவருக்கு இன்சுவை சிற்றூண்டியும், நறுமணம் ஊட்டப்பட்ட தேநீரும் வழங்கப்படுகின்றன. வீட்டுக்காரார் 'கணா' என்றும், 'கணா அங்கிள்' என்றும் ஆசையாக விளித்துப் பேசுகின்றனர்.

கணாவின் சரியான பெயர் கணா அல்ல; அவரின் செல்லப் பெயரே அது. அவரின் முழுப்பெயர் கணபதிப்பிள்ளை. கணபதிப்பிள்ளை

மேல் நண்பர்களுக்கு ஏற்பட்ட அபாரப் பற்று, அவரின் பெயரைச் சுருக்கிச் செல்லமாக 'கணா' என அழைக்கச் செய்துள்ளது.

'கணா', 'கணா' என்றே அவர் தொழில் புரியும் கந்தோரிலும் நண்பர்களால் பிரியத்துடன் அழைக்கப்படுகின்றார். கணா அரசாங்க அலுவலகர். அவர் தொழில் புரிவது பரீட்சைத் திணைக்களத்தில். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இடமாற்றம் என்ற பெயருக்கே இடமின்றி மிக நடப்பாக தொழிலாற்றும் அவர், திணைக்களப் பரீட்சைகள் சிலவற்றில் சித்தி எய்தி இன்று உயர் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்.

கணாவுக்கான மதிப்பு, மரியாதைக்கான முக்கிய காரணம் அவரிடம் மண்டிக் கிடக்கும் பண்பொழுக்கம் - கனிந்த சொற்கள் - மென்பேச்சு - பணிவு - அத்தோடு மது, மாது போன்ற தீயபழக்க வழக்கப் புறக்கணிப்பும் ஆகும். கணாவின் புறத்தோற்றம் கவர்ச்சிகரமானது. என்றும் வெளுத்த மடிப்புக் குலையாத ரவுசர், சேர்ட் - அரையில் இறுகக் கட்டிய அழகிய கறுப்பு நிற தோற்பட்டி - ஹெயார் டை தடவி வாரி இழுத்து பளிச்சிடும் கேசம் - பொலிஷ் பூசி புத்தம் புதியது போல் பளபளக்கும் சப்பாத்துச் சோடி - இவை கணாவின் அழகிய புறத்தோற்றத்திற்கு மெருகு ஏற்றுகின்றவை.

இப்போது விருந்தாளியைச் சுற்றி வீட்டின் முக்கியஸ்தர்கள். குடும்பத் தலைவி புஷ்பம் யோகநாதன், மூத்தமகன் சிவநாதன், மகள் சிவாஜினி ஆகியோர். குடும்பத் தலைவன் யோகநாதன் அவசர அலுவலாக வெளியே சென்றுள்ளதாகவும் இன்னும் சொற்ப வேளையில் வந்து சேர்ந்து விடுவார் எனவும் சொல்லப்பட்டது. அவர் வரும் வரைக்கும் பொழுதுபோக்கு உரையாடல் சுவாரஸ்யமாக நடைபெறுகிறது.

"கணா அங்கிள் நீங்கள் ஒரு வித்தியாசமான மனிதன்"

“ஏன் சிவாஜினி?”

“அங்கிள் சொல்லுவார்; சொன்னால், சொன்னபடி செய்வார்.”

“கொம்பிளிமன்ற்ஸ்க்கு நன்றி சிவாஜினி. அப்படி என்ன செய்திட்டன்?”

“இன்டைக்கு எத்தனை மணிக்கு வருவதென ரெலிபோன் பண்ணினீர்கள்?.. ஐந்து மணிக்கு என்றியள். அங்கிள் சொன்னது சொன்னபடி செய்து போட்டியள்.”

“சிவாஜினி, நீங்கள் கெட்டிக்காரி!.. இன்னொரு விடயம். எப்பிடி படிப்புப் போகுது.?”

“எல்லாம் ரியூசன் தான் அங்கிள். எல்லாப் பாடத்திற்கும் ரியூசன் எடுக்கிறன் அங்கிள்.”

“இன்னமும் A/L வகுப்பு ஸ்கூலில் தொடங்கி இருக்காயினம்.”

“இல்லை அங்கிள். றிசல்ற்றைப் பாராமல் கெட்டிக்கார மாணவர்களை A/L வகுப்புக்களில் விட்டிருக்கினம். நான் மேலும் பிரஷ் அப் பண்ணும் எண்ணத்தால் சயன்ஸ், கணிதம் போன்ற பாடங்களுக்கு இன்னும் ரியூசனுக்கு போய்வாறன்.”

“வெரிகுட் சிவாஜினி! கீப் இட் அப்... எப்படித் தம்பி சிவா?”

“ஏதோ படிக்கிறன் அங்கிள்” “நானும் எல்லாப் பாடங்களுக்கும் ரியூசன் எடுக்கிறன்”

"எந்த ரியூட்டறி?"

"நான் பிறைவேற் ரியூட்டறிகளுக்கும் போய்வாறன், வீட்டிலும் பிறைவேற் ரியூசன் எடுக்கிறன். பிறைவேற் ரியூசன் கொஞ்சம் செலவு அதிகம் தான் அங்கிள். ஆனால், ரியூட்டேர்ஸ் கூடிய இன்டியுவல் கெயார் எடுப்பினம்; நாங்களும் தெளிவாகக் கேட்டுப் படிக்கலாம்."

"எனக்கொரு நல்ல நம்பிக்கை சிவாஜினி."

"அப்படி என்ன அங்கிள்?"

"பின்னடியில் எனக்கு நோய்நொடி வந்தால் பயமே இல்லை."

"ஏன் அங்கிள்?"

"யோகநாதன் வீட்டில் இரண்டு டொக்ரேர்ஸ் இருப்பினம். எனக்குப் பிரச்சனை என்றால், பீஸ் வாங்காமல் ட்ரீட்மென்ற் செய்வினம்."

கணாவின் ரசனை தளம்பும் பேச்சு அனைவரையும் மகிழச் செய்கிறது. இந்நேரம் யோகநாதன் புன்சிரிப்புடன் வீட்டினுள் நுழைகின்றார்.

"கணா ஹாவ் ஐ ஹெப்ற் யூ வெயிற்றிங்?"

"நோ. நொட் அற் ஆல் சேர்."

"கணா கான் யூ கம் அப்ரியோர்ஸ் போர் எ மொமன்ற்?"

"ஓ.கே. ஐ ஆம் கம்மிங்"

கணாவும் யோகாவும் மேல் மாடியில் உள்ள யோகாவின் பிரத்தியேக அலுவலக அறையினுள் பிரவேசிக்கின்றனர். பல்வேறு வகையான புத்தகங்களால் அழகுபடுத்தப்பட்ட அதிவசதியான அறை அது.

"சொன்னபடி செய்து போட்டியள் கணா. உங்களை எப்படி தாங் பண்ணுவது என்று தெரியவில்லை. சிவாஜினி ஒரே தடவையில் நல்ல றிசல்ற்றோடு O/L பாஸ் பண்ணினாள்; யோகாவின் மகள் வலு கெட்டிக்காரி என்ற நற்பெயர் என்றதுக்குத்தான் நீங்களாக முன்வந்து சஜெஸ்ட் பண்ணிய போது சந்தோஷமாக ஓம் என்றன். எல்லாம் வெற்றி கணா!.. அதுசரி உங்கடை பீஸ் [Fees] என்ன? இன்னும் சொல்லவில்லையே!"

"வெரி அன்போர்ச்சினற் சேர். சின்னச் சிரமம் ஏற்பட்டுப் போச்சு."

"சொல்லுங்கோ அப்படியென்ன?"

"ஒரு ஹை ஒப்பீஸரையும் விலை கொடுத்து வாங்க வேண்டி வந்துவிட்டது!"

"அப்படியெண்டா?"

"நாங்கள் மூன்று பேர் இன்வோல்வட்"

"அப்ப சொல்லுங்கோ?..."

"ஒரு ருவன்ரிபை தவுசன்ட் ஓன்லி"

"இருபத்தைந்தாயிரம் தானே தாறன், தாறன்!"

"இப்படியான நல்ல வேலைக்கு சந்தோஷமாகத் தாறன்."

"தங் யூ வெறி மச்"

இருபத்தையாயிரம் ரூபா கைமாறுகிறது. கணாவின் முகம் பிரகாசிக்கிறது.

கணா அனைவருக்கும் நன்றி தெரிவித்து அனைவரிடமிருந்தும் விடை பெற்றுக்கொண்டு வெற்றிப் பூரிப்போடு வீறு நடை போடுகின்றார்.

கணா அடுத்த முதல் முக்கிய வேலையாக பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்திற்கு வந்து சேருகின்றார். விநாயகப் பெருமானை மிக விசுவாசமாகத் தொழுகிறார்; நெக்கி நெக்கி நெஞ்சுருகி அழுகின்றார்.

நீண்ட நேரம் மெய் மறந்து தொழும் கணாவின் உள் மனம் கசிந்து பாவமன்னிப்பு கோருகின்றது.

"பிள்ளையாரே! நானும் உம்மைப் போலை தான். நீர் ஞானப்பழத்தைப் பெற குறுக்குவழியைப் பாவித்து திருவிளையாடல் ஆடியது போல் நானும் திருவிளையாடல் ஒன்று ஆடினன். எனக்கு மூன்று குமர்ப்பிள்ளைகள் சுவாமி. அதுகள் கரை சேரட்டும்

என்பதற்காக எனது புத்தியைப் பாவித்து இத்திருவிளையாடலை ஆடியிருக்கிறன்.

நிச்சயம் சித்தி எய்தக் கூடிய பிள்ளையை இனம் கண்டு திறமைச் சித்தி நான் பெற்றுத் தாறன் என்று பொய் சொல்லி வாக்களித்த பெறுபேறு இயல்பாகவே கிடைத்தமையைக் காரியாலயத்தில் முற்கூட்டியே அறிந்து, அது என்ரை தலையீட்டால் நடந்த காரியம் எனக் கற்பனைக் கதையைக் கட்டவிழ்த்து விட்டு, காசைப் பெற்றன்.

சுவாமி இம்முறையும் வழக்கம் போல் நான் உமக்கு நேர்த்தி வைத்தன். நீரும் உம் வேலையை நேர்த்தியாகச் செய்தீர். இந்த கணா சொன்னதைச் சொன்னபடி செய்பவன்: இதோ உம்முடைய பங்குப் பணத்தைத் தருகிறன்.

என் திருவிளையாடல் ஒரு பெரிய தொடர்கதை சுவாமி. இன்னும் கட்டாயம் வருவன். மீண்டும் எனக்கு அருள் புரிய வேணும் சுவாமி."

கணா இரண்டு பெரிய பச்சை நோட்டுக்களை சேர்ட் பொக்கற்றுக்குள் இருந்து இழுத்து எடுத்து கோவில் உண்டியலுள் திணிக்கிறார். கண்கள் பனித்து ஒரு சில கண்ணீர் துளிகள் வடிந்து விழுந்து உண்டியல் பெட்டியை ஈரமாக்குகின்றன.

வீரகேசரி 17-12-1995

# ஓர்மம்

வாழ்க்கைச் சாகரத்தில் வெற்றிகரமாக எதிர் நீச்சல் அடித்துக் கரை சேரும் சிவப்பிரகாசம் வர்த்தகருக்குக் கிளாலிக் கடல் ஏரிப் பயணம் எம்மாத்திரம்?..

மூத்த மகள் கௌரியைச் சுவிசலாந்திற்கு வழி அனுப்ப தன் ஆசை மகளோடு கிளாலி ஊடாக இப்போது பயணம் செய்து கொண்டு இருக்கின்றார்.

மாலை நேரம். மங்கல் பொழுது.

ஆரணங்கு வானம் வழமைக்கு மாறுதலாக இன்று சற்று அதிகப்படியாக மஞ்சள் பூசி - முகம் மினுக்கி - அலங்கார ஆடை அணிகளில் அற்புதமாகக் காட்சி தருகிறாள். அவள் முகம் கதிரொளி பட்ட தங்கம் போல் ஒளிருகிறது.

இத்துணை நேரம் அவளுடன் இருந்த அவளின் ஆருயிர்க் காதலன் ஆதவன் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு, கண்ணுக்கெட்டாத் தூரம் சென்று மறைந்து விடுகிறான்.

வான் முகம் வாடுகிறது. முகத்தில் படரும் இருள் நேரம் போகப் போக மெல்ல மெல்ல அவளின் அங்கம் எங்கும் பரவுகிறது.

நிலையாமைத் தத்துவத்தை எமக்கு உணர்த்துவது போன்று இவ்வெழிற் காட்சி மெல்ல மெல்லக் கலைகிறது. இருள் படருகிறது.

இப்போது எங்கும் இருள்.

வானம் கறுக்கிறது. மழையும் வந்துவிடுமோ என அச்சம் தருகிறது. பேய்க்காற்றோடு பேய்மழையும் சேர்ந்து கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றும் இல்லை!

'கௌரி பயப்படுகின்றாளா?..' எனச் சிவப்பிரகாசம் ஆராய்கின்றார்.

> 'கௌரி சட்டப் பட்டப் படிப்புப் படித்து முடித்த பிள்ளை. என்னோடு கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் எமது வர்த்தக நிலையங்களில் நிருவாகியாகப் பணிபுரிந்து புடம் போடப்பட்டவள். அவள் வாழ்க்கையின் ஏற்றத்தாழ்விற்கு பழக்கப்பட்டு விட்டாள்...' - என்ற முடிவுக்கு வந்து அவர் திருப்திப்படுகின்றார்.

கௌரியின் நினைவுகள் சிவப்பிரகாசம் வர்த்தகரின் மனத்திரையினில் மேலும் தொடர்ந்து நிரம்புகின்றன.

.....முதன் முதல் மருமகன் ஈஸ்வரனைச் சந்தித்தமை - சந்திப்பைத் தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைகள் - ஈஸ்வரனுக்கும் கெளரிக்கும் விமரிசையாக நடந்தேறிய கல்யாணம் முதலிய நினைவலைகள் சிவப்பிரகாசத்தின் மனத்தில் அடுக்கடுக்காக அலைமோதுகின்றன. இந்த நினைவலைகளில் திளைத்து அக மகிழ்கின்றார் சிவப்பிரகாசம் வர்த்தகர்.

□ □ □

நினைவலை ஒன்று.....

வெள்ளிக்கிழமை. சைவத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குப் புனித நாள். மாலை வேளை. இணுவையூர்ப் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் உள்ளும் புறமும் நிரம்ப ஜனத்திரள்.

ஜனத்தோடு ஜனமாக சிவப்பிரகாசம் வர்த்தகர், அவரின் மூத்த மகள் கெளரி, சுவிஸ் தமிழ்ப் பிரஜை ஈஸ்வரன், ஈஸ்வரனின் நண்பன் சண்முகம், பிரபல கல்யாணத் தரகர் கந்தையா முதலியோர்.

இவர்கள் பூசை காணவா வந்தவர்கள்?

பூசையோடு பூசையாக பெண் பார்க்கவும் வந்துள்ளார்கள்.

பெண் பார்த்துத் திருமணத்தை நிச்சயிப்பது தமிழ்க் கல்யாணச் சடங்குப் பாரம்பரிய ஒழுங்கு முறையில் ஒரு புதினமான அலுவல் அல்லவே!

முதன் முதலில் அமைதியைக் குலைத்துக் கதை கொடுத்தவர் தரகர் கந்தையா. அவர் கெளரிக்கும் கேட்கக்கூடிய அளவு உரத்த குரலில் ஆசையாகக் கதை அளக்கிறார்.

"பெடியனைப் பார்த்தீர்களா முதலாளி?.. இப்பிடிப் பெடியளை இந்தக் காலத்தில் காண ஏலாது."

இச்சிபாரிசினால் மேலும் ஒரு தடவை சிவப்பிரகாசம் வர்த்தகர் ஈஸ்வரனைப் பார்த்து மதிப்பிடத் தூண்டப்படுகின்றார்.

ஈஸ்வரன் சந்தனக் கலர் - தங்க விக்கிரகம் மாதிரி! கட்டுமஸ்தான உடற்கட்டு - நல்ல உயரம்; சிவப்பிரகாசத்திற்கே அவனைப் பார்க்க ஆசையாக இருக்கிறது!

கௌரி நிறம் குறைவு. ஆனால் அவளின் முகத்தில் ஒருவித பிரகாசம். தெளிந்த ஞானத்தாலும், தன்னம்பிக்கையாலும் ஏற்பட்ட ஒளி அது. கௌரி திறமைசாலி என்பதைச் சொல்லித் தான் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

இவ்வகை ஒப்பீடுகளில் அமிழ்ந்து விடும் சிவப்பிரகாசம் வர்த்தகரைத் தரகரின் மேலும் ஒரு குறுக்கீடு திசை திருப்புகின்றது.

"இப்படி அடக்க ஒடுக்கமான நல்ல பெடியனை இப்ப காண ஏலாது முதலாளி. பெடியன் குடிவெறி, கெட்ட பழக்க வழக்கங்கள், எதுவும் இல்லை. சோக்கான பெடியன்! பெடியனுக்குச் சுவிஸ் பாஸ்போட் இருக்கு. சுவிஸ் பாஷை நன்றாகத் தெரியும். அவன் டொச் பேசினால் கேட்க ஆசையாக இருக்கும். சுவிசில் வீடு, நல்ல பாங் பலன்ஸ், கார் - இப்பிடி எல்லாம் இருக்கு... யோசிப்பதற்கு இனி ஒன்றும் இல்லை.

என்ன முதலாளி, பெடியனைப் பிடிச்சுதா?..." - மீண்டும் தரகர் முதலாளியைக் கேள்வியால் துளைக்கின்றார்.

சிவப்பிரகாசத்தின் மௌனம் இன்னும் கலையவில்லை. இந்த நேரம் அவருக்கு தான் வீட்டுக்குப் பாரமாக ஐந்து குமருகளை வைத்திருக்கின்றேனே என்ற கவலை ஏற்படுகின்றது. இன்றைய காலநிலையும் இக்கட்டாக இருக்கின்றதே எனவும் கவலைப்படுகிறார்.

'ஊரோடு உத்தியோகம் பார்க்கும் பெடியள் இருக்கா?.. அவங்கள் குடும்ப செலவுக்கு உழைப்பாங்களா?.. அவன்களுக்குச் சீதனம் கொடுத்து எடுக்கும் வல்லமை எனக்கு இருக்கா..? எல்லாத்துக்கும் மேலாக எங்கடை நாட்டில் பெடியன்களுக்குப் போதிய பாதுகாப்பு இருக்கா...?' - இந்த வகையில் ஆழ்ந்து யோசித்துக் கொண்டு இருந்த வர்த்தகரைத் தரகரின் இன்னொரு கேள்வி திரும்பவும் குழப்புகின்றது.

"முதலாளி, உங்களுக்குப் பெடியனைப் பிடித்திருக்கா?..." - தரகர் மீண்டும் வினாவுகின்றார்.

"கௌரிக்குப் பிடித்தால், எனக்கு ஆட்சேபனை இல்லை!"

"கௌரி! என்ன அம்மா நீங்க சொல்லுறியள்?..."

சில நிமிட நேரம் தமது குடும்ப நிலவரம் ஐந்து குமருகளைக் கரை சேர்க்கும் நிலையில் உள்ளது; தான் தனது படிப்பின் பலனை முதன்மைப்படுத்தி சுயநல அடிப்படையில் செயற்பட்டால், அடுத்து இருக்கும் நாலு சகோதரிகளின் நல்வாழ்விற்கு இடைஞ்சலாகி விடுவேனோ எனச் சிந்தித்த கௌரி சொல்லுகின்றாள்:

"அப்பாவுக்குப் பிடித்து, அதே வேளை அவருக்கும் என்னைப் பிடித்தால், நான் மறுக்கிறதிற்கு ஒண்டுமில்லை"

"முதலாளி, அப்ப நல்ல சம்மதம் எண்டு சொல்லுறியள், அப்படித்தானே!"

"கந்தையா! நீ வலு கெட்டிகாரன் தானப்பா!... சரி, இனி அடுத்த அலுவல்களை மேற்கொண்டு கவனிப்பம்."

- என பச்சை விளக்குக் காட்டப்பட்டு விட்டதால், தரகர் கந்தையாவின் முகம் பிரகாசிக்கின்றது.

□ □ □

நினைவலை இரண்டு.....

தரகர் கந்தையா வலு கிரமமாக வந்து போகின்றார். வந்துபோகும் நாள்களில் 'நாட்செலவுக்கு... முதலாளி!' என்று வலியக் கேட்டு இருநூறோ, இருநூற்று ஐம்பதோ காசு வாங்கிக் கொள்ளுகின்றார்.

இந்நாட்களுள் ஒருநாள்...

கௌரியினதும் ஈஸ்வரனதும் சாதகங்களை மேலும் சில சோதிடர்களிடம் காட்டிப் பலன் கேட்டறிந்த வர்த்தகர், மகிழ்ச்சிப் பிரவாகத்தோடு தரகர் கந்தையாவுடன் இப்படி உரையாடுகின்றார்.

"எங்கடை கொக்குவில் சோதிடரிட்டையும் சாதகங்களைக் காட்டினனான்.. உத்தம பொருத்தமாம்"

"முதலாளி! சாட் மட்டுமல்ல, பிறந்த எண்ணையும் பாருங்கோ. வலு பொருத்தம்!... ஈஸ்வரன் பிறந்தது பத்தாம் திகதி. கூட்டெண் ஒண்டு. கௌரி பிறந்தது நாலாம் திகதி. பொருத்தம் வலு ஜோர்"

'ஒண்டுக்கு நாலு சோக்கான பொருத்தம்... பேர் பொருத்தமும் இருக்கு!.. பெடியன்ரை பேர் என்ன?.. ஈஸ்வரன்! மகளின்ரை பேர் என்ன? கௌரி! கௌரி எண்டா என்ன?.. பார்வதி! அதாவது ஈஸ்வரனுக்கு பார்வதியை விட வேற ஆர் பொருத்தம்?..

நிறப் பொருத்தமும் இருக்கு - செம்மையும், கருமையும்' - சிவப்பிரகாசம் தனக்குள் யோசித்து திருப்திப்படுகிறார்.

வர்த்தகர் மீண்டும் சொல்லுகிறார்.-

"சீதனத்தைப் பேசி முடித்தால், கலியாணம் முடிந்த மாதிரி கந்தையா. சொல்லும்... சீதனம் என்ன கேட்கினம்?"

"முதலாளி, நீங்களே சொல்லுங்கோ. உங்கடை மகள்தானே! மகளுக்கு என்ன குடுப்பியள்? பெடியன் சுவிஸ் பிரஜை. அவனுக்கு சுவிசில் வீடு, கார் எண்டு எல்லாம் இருக்கு." - என நினைவுபடுத்திய தரகர் மீண்டும் தொடருகின்றார். "நீங்க இங்க கௌரிக்கு வீடு, வளவு, தோட்டம் எதுவும் குடுக்கத் தேவை இல்லையாம். தாற எல்லாவற்றையும் ரொக்கமாகத் தந்தால் சரியாம்"

"அவை என்ன கேட்கினம்"

"அவை நீங்கள் கொடுக்க இருப்பதை உங்களிட்டை என்னைக் கேட்டறியச் சொன்னவை"

"எதையும் வெட்டு ஒண்டு துண்டு இரண்டாக நறுக்காகப் பேசினால் பிரச்சினை இல்லை. நான் எல்லாமாகப் பத்துத் தர யோசித்து இருக்கிறன்."

"காணாது முதலாளி. பெடியனுக்கு வேற ஒரு பகுதி கூடக் கேட்டவை. அவை பதினைந்து எதிர்பார்க்கினம். நீங்க பன்னிரண்டுக்கு ஓம்படுங்கோ. நான் எல்லாம் சந்தோஷமாகப் பிக்ஸ்ட் பண்ணித் தாறன்."

"சரி! நீயும் சொல்லிப்போட்டாய் கந்தையா. இனி வேறை கதை ஒண்டும் இருக்கப்படாது. கலியாண எழுத்தில் அண்டு அவைக்குப் பன்னிரண்டு லட்சம் குடுக்கிறன். தரகுக்கு உனக்கு முப்பத்தி ஆறாயிரம் ரூபா தாறேன். எல்லாம் சரி தானே!"

தரகர் கந்தையா சம்மதத்தின் அறிகுறியாகத் தலை அசைக்கின்றார்.

□ □ □

நினைவலை மூன்று.....

ஈஸ்வரன் - கௌரி திருமணம் மிக விமரிசையாக இனிது நடந்தேறி முடிந்தது. ஈஸ்வரன் சுவிற்சலாந்துக்குப் போய்ச் சேர்ந்து ஒருவார காலமும் ஓடி மறைந்து விட்டது. அடிக்கடி கடிதம் வந்து போகிறது. இன்று காலை கௌரியின் பெயருக்கு ஒரு அஞ்சல் வந்தது. அதனுள் சிவப்பிரகாசம் வர்த்தகருக்கும் ஒரு இணைப்பு வைக்கப்பட்டிருந்தது.

"அப்பா உங்களுக்கும் அவர் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்" - கௌரி கணீரென்ற குரலில் ஆசையாகச் சொல்லுகின்றாள்.

"என்ன பிள்ளை, மருமகன் என்ன எழுதி இருக்கிறார்?...

கடிதத்தை வாசி."

கடிதம் ஆசையோடு வாசிக்கப்படுகின்றது. கடிதத்திற் குறிப்பிடப்பட்ட கொழும்பு முகவரி ஒன்றுக்கு ஸ்பொன்சர் பேப்பேர்ஸ் அனுப்பப்பட்டுள்ளது என்றும், உடனடியாக பயண ஒழுங்கை மேற்கொண்டு கொழும்பு வந்து, கௌரியைச் சுவிற்சலாந்திற்கு வந்து சேருவதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி கேட்கப்பட்டும் இருந்தது.

"பிள்ளை அப்ப ஏன் சுணக்கம்? இப்பவே பாஸ் எடுக்கப் புறப்படுகிறன். உடனே புறப்படுவதற்கான பயண ஒழுங்குகளைச் செய்யுங்கோ. கடவுளே எண்டு எல்லாம் சரிவந்தால், தைப்பொங்கலைப் போன கையோடு சுவிசில் சந்தோஷமாகக் கொண்டாடுவியள் கௌரி."

"எல்லாம் திட்டமிட்டபடி நிறைவேறப் பரராஜசேகரப் பிள்ளையாருக்கு ஒரு நேர்த்தியும் வைக்கப்போறன் பிள்ளை" - என மீண்டும் சிவப்பிரகாசம் வர்த்தகர் தெரிவித்தார்.

"சரி அப்பா! நேர்த்தியை வையுங்கோ. பரராஜசேகர விநாயகன் கைவிடவேமாட்டான்"

அதிதுரிதமாகப் பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

......இந்நேரம் சிவப்பிரகாச வர்த்தகரும் கௌரியும் பிரயாணம் செய்யும் அப்படகு ஒரு பேரலை மீது ஏறி தொம் என விழுகிறது. பயணிகள் பயந்துவிடுகிறார்கள். வர்த்தகர் சிவப்பிரகாசமோ கௌரியோ நிலைமைக்கு முகம்கொடுக்கத் தயாராகின்றனர்; ஆனால், கடவுளே என்று விபத்து ஒன்றும் நடந்துவிடவில்லை!..

இதுவரை நினைவலையில் மிதந்த சிவப்பிரகாசம், நீரலையில் ஏறி படகு விழுந்ததால், நனவோட்டம் படக்கென துண்டிக்கப்பட்டு, நிச உலகுக்கு தள்ளப்படுகின்றார்.

□ □ □

ஜனவரி பதினைந்தாம் திகதி. திங்கட்கிழமை.

தைப்பொங்கல் திருநாள்.

சிவப்பிரகாசம் வர்த்தகர் கொழும்பு வந்து மூன்றாம் நாள் இது, சந்தோஷமான நற்செய்தி ஒன்று கிடைத்திருந்தது. கௌரி சுகமாகச் சுவிஸ்போய்ச் சேர்ந்தாள் என்ற ரெலிபோன் செய்தியே அது. சிவப்பிரகாசம் வர்த்தகருக்கு அளவு கடந்த ஆனந்தம். மனத்தில் சந்தோசம் பொங்கி வழிய அவர் தான் தங்கி இருக்கும் வெள்ளவத்தை பஸ்ஸல்ஸ் ஒழுங்கை உறவினரோடு ஒன்றிணைந்து பொங்கல் வைபவ ஒழுங்குகளை உற்சாகமாகக் கவனிக்கின்றார்.

வீட்டு முற்றம் சுத்தப்படுத்தப்பட்டு சாணி மெழுகப்பட்டு, அழகாக அரிசிமாக் கோலம் போடப்பட்டு இருக்கிறது.

பிள்ளையார் பிடித்து தலைப்பு வாழை இலை மூலையில் வைக்கப்பட்டுப் பொங்கல் தொடக்க வேலைகள் வேகமாக நடைபெறுகின்றன...

இந்நேரம் காலை ஏழுமணி. தொலைபேசி மணி நாதம் பேசுகிறது. கௌரியின் தொலைபேசி அழைப்பே அது!

தொலைபேசியைத் தூக்கிய சிவப்பிரகாசமே தூக்கிவாரிப் போடப் பட்டார்! அதிர்ச்சிச் செய்திதான் அது. அவர் அதனை மிக அவதானமாகச் செவிமடுத்தார்.

"அப்பா!.. நாங்க கடைகெட்ட கயவனால் ஏமாற்றுப்பட்டு விட்டம். இந்த நடத்தை கெட்டவன் எங்கடை காசைப் பறிக்க நல்ல நாடகம் ஆடி இருக்கிறான்!

இந்த ஏமாத்துக்காரன் ஒரு பயங்கரக் குடிகாரன். பத்தாக்குறைக்கு ஒரு ஆட்டக்கார சுவிஸ்காரியையும் கலியாணம் முடிச்சு இருக்கிறான். இவனும் இவளும் ஒரு ஸ்டார் ஹோட்டலில் சனிட்டறி லேபரர்ஸ். வேடிக்கை என்னவென்றால் சுவிஸ்காரிக்கு வேற புருஷன்மார்களால் இரண்டு பிள்ளைகளும் இருக்கு.

பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலில் பக்தன் வேஷம் போட்ட பகல் வேஷதாரியைப் பார்த்தியளா அப்பா?.. இவன் முஸ்பாத்தியான ஒரு கதையையும் செல்லுகிறான்...

முருகப்பெருமானுக்குத் தனக்குப்போல வெள்ளையும் கறுப்புமாக இரண்டுபெண்டாட்டிகளாம். முருகப்பெருமானும் வேஷம் போட்டுக்கொண்டு பெண் எடுக்க வந்தவராம். என்னை வள்ளியம்மை போலை இரண்டாம் தாரம் ஆகட்டாம்... முழு மடையன்! எங்கடை பெருமை வாய்ந்த இந்து சமய தத்துவத்தை விளங்கிக் கொள்ளாததால் அதனை இழிவுபடுத்துகின்றான்! இந்தக் கோவேறு கழுதைக்குக் கற்பூரவாசம் தெரியுமோ அப்பா!..

இன்னொரு கதையும் விடுகிறான். சுவிஸ்காரி கனகாலம் ஒருவனோடு சேர்ந்து வாழ மாட்டாளாம். அவள் முந்தியும் இரண்டு முறை விவாகரத்து எடுத்தவளாம். சேர்ட் மாத்துகிற மாதிரி தன்னையும் மாத்திப் போடுவளாம். அது வரைக்கும் என்ரை மனதைக் கல்லாக்கிக் கொண்டு பொறுமையாகத் தன்னோடு இருக்கட்டாம். பிறகு பிரச்சனை இல்லையாம்.

இதுமட்டுமில்லை. என்னை அந்த சுவிஸ்காரிக்கு சிறிலங்கா ஹவுஸ் மெய்ட் என்றும் சொல்லி இருக்கிறான். அப்பா வாழ்க்கையில் எத்தனையோ வகையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து அனுபவப்பட்ட எங்களுக்கு இவன்ரை றிக்ஸ்க்கு வழி தெரியாமலா போகும். தை பிறந்தால் வழி பிறக்காமலா போகும்? நான் படித்தது சட்டம். என்ரை சட்டப் பட்டப் படிப்பு எனக்கு கைகொடுக்கிறது. சட்டப்படி மணம் முடித்தவள் உயிரோடு இருக்க இன்னொருத்தியை ஒருவன் மணம் முடிப்பது இலங்கைச் சட்டப்படி போலை சுவிஸ் நாட்டு சட்டப்படியும் சட்ட விரோதம். இந்த சட்டத்தை மீறுவோர் சட்டப்படி தண்டனைக்குரியவர் ஆகிறார்.

நான் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னைப்போல இன்னும் இரண்டு யாழ்ப்பாண தமிழ்ப் பெண்கள் சூரிச்சில் ஏமாற்றப்பட்டு கஷ்டப்படுகிறார்களாம். நான் எனது பிரச்சனைக்கு எடுக்கப்போகும் நடவடிக்கை சூரிச்சில் இருக்கும் அந்த அபலைகளுக்கும் நல்ல முடிவினைக் கொண்டு வரும் என நம்புறன்.

இப்ப அப்பா வெளிநாட்டில் கல்யாணம் முடித்த மாப்பிளைமார் ஊருக்கு இரகசியமாக வந்து, தாங்கள் இன்னும் கல்யாணம் முடிக்காதவர் போல பாசாங்கு செய்து அப்பாவிப் பெண்களை ஏமாற்றிக் கல்யாணம் செய்வதும், அவர்களிடம் இருந்து நிறையக் காசு புடுங்குவதுமான சேட்டை அதிகரிக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். இந்தக் குரங்குச் சேட்டைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேணும் அப்பா. அதற்குத் தேவையான வழிமுறைகளை நான் கண்டறியப் போகிறன். இதற்காக எங்களுக்கு நல்ல அறிமுகமான, பிரபல ட்றான்சிலேற்றர் நமசிவாயம் மாமாவோடை உடன் தொடர்பு கொண்டன். அவர் நான் தனது அட்வகேற்றோடு கலந்தாலோசித்து நடவடிக்கையில் இறங்க உடனடியாகச் சூரிச்சுக்கு வந்து தங்களோடு இருக்கக் கேட்டும்மிருந்தார். இப்ப நான் நமசிவாயம் மாமா சொன்னமாதிரி அவர் வீட்டிற்கு வந்து அங்கிருந்துதான் உங்களோடு பேசுறன்.

இப்ப மாமா தீவிர நடவடிக்கையில் இறங்கிவிட்டார். எங்கள் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குப் போய் பொலிஸ் ஓ. ஐ. சீ யோடை கதைத்தும் உள்ளார்.

அப்பா அலுவல் அதிகப்படியாக சரிவரும்; தீர்ப்பும் எனக்கு சார்பாகத்தான் வழங்கப்படும். என்னை நினைத்து நீங்கள் பயப்படாதையுங்கோ. என்னைக் காப்பாற்ற எனக்குத் தெரியும்.

சரி அப்பா கனநேரம் கதைத்திட்டன். மாமா வந்த கையோடு உங்களோட பேசச் சொல்லுறன். அப்பா! வணக்கம்."

"கௌரி, உன்னை எனக்கு நல்லாகத் தெரியும். நீ வலு கெட்டிக்காரி. உன்னை நினைக்க எனக்குப் பயமில்லை. எங்களை எப்போதும் பரராஜசேகரன் விடமாட்டான். எதுக்கும் மாமா வந்ததும் என்னோடு கதைக்கச்சொல்லு... காத்திருப்பன்! வைக்கிறன். வணக்கம்!"

ஈஸ்வரனின் நயவஞ்சகச் செயலை நினைக்க சிவப்பிரகாசம் வர்த்தகருக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்று கறுப்பு ஜூலையிற் புறத் தீய சக்திகள் ஏற்படுத்திய தீ வர்த்தகர் சிவப்பிரகாசத்தின் வர்த்தக நிலையத்தைத் தீண்டிச் சாம்பராக்கியமை மனத்தை மட்டும் வேகச் செய்தது. ஆனால், தன்னினத்தவன் தன்னைப் போன்ற ஒரு அகதி இன்னொரு அகதியை கருவறுத்தமை வெந்த புண்ணுள் வேல்கொண்டு தாக்கியது போன்று அவரைக் கடுமையாக நெருடியது.

இருந்தும், சில நிமிடங்களில் ஆத்திரத்தைவிட அறிவு பூர்வமான நடவடிக்கைகளே மேல் எனத் தெளிவு எய்திய சிவப்பிரகாசம் வர்த்தகர், கோபம் ஆறி, பெட்டிப் பாம்பாக அடங்கி விடுகின்றார்.

அறிவுபூர்வமான நடவடிக்கைக்கு றான்சிலேட்டர் நமசிவாயத்தின் நல்லாலோசனையை வர்த்தகர் சிவப்பிரகாசம் மிக ஆவலோடு எதிர்பார்க்கின்றார்!

**வீரகேசரி 14-01-1996**

# கலை உள்ளம்

**இ**ன்றைய தினம் நண்பகலுக்கு மேல் எங்கள் கல்லூரியில் பலத்த ஆரவாரம். ஆரவாரத்தின் இரகசியத்தை அறிய நீங்கள் ஆவலாக இருப்பீர்கள், இல்லையா?..

அப்படி ஒன்றும் பெரிய விசேடம் இல்லை. இம்மாத சம்பள நாள் இன்று! அவ்வளவுதான்.

சம்பள ஆரவாரம் என்னைக் கிஞ்சித்தும் பாதிப்பது இல்லை. எனது நித்திய சிந்தனை கலை உலகைப் பற்றித்தான். குறிப்பாக இந்த நாட்களில் கல்லூரியில் நான் பயிற்றுவிக்கும் 'பிரளயம்' நாடகம் பற்றித்தான். நாடகம் தடங்கலாகிவிடுமோ என அஞ்சுகின்றேன். கலைஞர் சிவக்கொழுந்தைக் கண்டால் இச்சிக்கலைத் தீர்க்கலாம் என்பது எனது நம்பிக்கை.

எனவேதான், கல்லூரி விட்டதும் விடாததுமாகக் கலைஞர் சிவக்கொழுந்தைக் காணும் அலுவலாகச் சைக்கிளில் விரைகின்றேன்.

பிரதான வீதியால் அரசடிச் சந்திக்கு வந்துவிட்ட நான் வழியில் சந்தித்த வயதானவரிடம் கலைஞர் சிவக்கொழுந்தின் வீட்டிற்குப் போகும் பாதையை விசாரிக்கின்றேன்.

“கலைஞர் சிவக்கொழுந்து வீடு எங்கே ஐயா?”

“இடம் பெயர்ந்து வந்த வயதான நாடக மாஸ்டர்தானே!”

“ஓமோம்! நாடகக் கலைஞர் அவரேதான்”

“விளங்குது... அவற்றை வீட்டைக் கண்டு பிடிப்பது கொஞ்சம் கஷ்டம் தம்பி”

“பறவாயில்லை சொல்லுங்கோ”

குறிப்புக்களை வைத்துக் குறிப்பிடப்பட்ட இடங்களைக் கண்டு பிடிப்பதில் நான் வலு கில்லாடி. அது எனக்கொரு கொடை. தரப்பட்ட விபரங்கள் பிரகாரம் நம்பிக்கையோடு பயணிக்கின்றேன்.

ஒரு குச்சு ஒழுங்கை. அந்த ஒழுங்கையில் இறங்கி மேற்கு நோக்கிச் செல்கின்றேன்.

பனைவடலிக் கூடல்கள். அவற்றையும் தாண்டிப் பாதை மேலும் மேற்குப் பக்கமாகச் செல்கிறது. எனது புத்தம் புதிய ஏசியா கறுப்பு நிற சைக்கிள் குழிகளுள் தொம்தரிகிணதொம் தாளம் போட்டுச் செல்கிறது.

வாழ்க்கையின் மிக அடிமட்டத்தில் வாழும் மக்கள் நெருக்கமாக உள்ள குடிமனைப் பகுதிகளை ஊடறுத்து மேலும் மேற்கு நோக்கி வளைந்து, நெளிந்து நீண்ட தூரம் குச்சொழுங்கை செல்கிறது.

இடைக்கிடை தோட்டப்பகுதிகள். பயிரிடை நர்த்தனமாடி துள்ளிக் குதித்து வரும் இளம் தென்றலால் பயணக் களைப்பு எனக்குத் தெரியவில்லை.

இதோ ஒரு பழைய பெரிய நாற்சார் வீடு!

நாற்சார் வீட்டைச் சுற்றி சுற்று மதில். இச்சுற்று மதில் கடைசியாக சுண்ணாம்பைக் கண்டது, ஆகக் கடைசி கால் நூற்றாண்டுக்கு மேல் என்பது சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றல்ல. மதில் வெடிப்புக்களும், பொருக்குக்களும் அதற்கு சான்று பகர்கின்றன.

> 'பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவே! கோயிலைச் சுறண்டாதே! கோயில் பொதுச் சொத்து!'
>
> 'சனசமூக நிலையத் தலைமைப்பீடமே! சனசமுக நிலையம் உங்கடை பரம்பரைச் சொத்தல்ல! இளம் தலைமுறையினருக்கும் இடம்விடு!'
>
> 'பெல்மூடி வாத்தி, ஜாக்கிரதை! மாணவிகளோடை சேஷ்டை இன்னம் தொடர்ந்தால், உன் உயிருக்கு உலை வைப்போம்! - சீர்திருத்தவாதிகள்.'
>
> 'சங்கக்கடை அலிபாபாவினதும் நாற்பது திருடர்களினதும் அற்புதக் குகை ஆவதை அனுமதிக்கலாமா? பொதுமக்களே! சிந்தியுங்கள்! விழித்தெழுங்கள்!'

ஆமாம் மேற்குறிப்பிட்டவை அம்மதிலிற் காணப்பட்ட கிறுக்கல்கள். அவை இச்சமுதாயம் சிந்திக்கத் தொடங்கி விட்டது; விழித்துவிட்டது! என எண்ணச் செய்கிறது.

எந்த நேரமும் ஒரு பூகம்பம் வெடிக்கலாம் என நினைக்கின்றேன். அதிகார வர்க்கம் எல்லா மனிதரையும், எல்லா நேரமும் ஏமாற்றலாம் என நினைப்பது பகற் கனவே எனக் கருத்துப்பட சமூகவியல் அறிஞன் ஒருவன் என்றோ சொன்னது சரியாகத்தான் இருக்கிறது எனத் தோன்றுகின்றது.

அக்கிறுக்கல் - சுலோகங்களை அடுத்து பென்னம்பெரிய சுவரொட்டி ஒன்று. அதில் கலைஞர் சிவக்கொழுந்துவின் பெயர் அழகாக வர்ண மைகளால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

'வெகுவிரைவில் கலைஞர் சிவக்கொழுந்துவின்
'பச்சோந்திகள்' - சமூக நாடகம்'

இந்த விளம்பரத்தை பல முறை இரசித்து வாசிக்கின்றேன்; மகிழ்கின்றேன். மானசீகமாக பச்சோந்திகள் பெரு வெற்றியீட்டப் பிரார்த்திக்கின்றேன்.

வயோதிப கிராமவாசி தெரிவித்த குறிப்புக்களை நினைவுபடுத்திப் பார்க்கின்றேன்...

பழைய நாற்சார் வீடு...
பொருக்கெடுத்த சுற்று மதில்...
கிறுக்கல்கள்...
சுவரொட்டிகள்...

கலைஞர் சிவக்கொழுந்துவின் வீடு இதுவே என இலேசாக முடிவுக்கு வர முடிகின்றது.

சிவக்கொழுந்து மாஸ்டர் வீட்டில் நிற்கிறாரா, நின்றால் பிரச்சனையை எப்படி அணுகுவது?.. எனது காரியம் கனியுமா?.. - எனது மனம் அங்கலாய்க்கின்றது.

வல்ல நடராசனே! பெரும்பொருளே எனக்கு வழிகாட்டு!..

எமது கல்லூரி மாணவி சாரதாவின் மனத்தை மாற்றிவிடு!..

சிவனே!.. 'பிரளயம்' நாடகம் வெற்றியீட்டக் கைகொடு - என என் மனம் அம்பலத்தாடியை வேண்டுகிறது.

இன்று சம்பள நாள். இந்நேரம் நான் எம் வீட்டில் அல்லவா நிற்க வேண்டும்?.. என் மனைவி என் வரவை ஆவலாக எதிர்பார்த்தல்லவா நிற்பாள்!.. வீட்டை போனதும் போகாததுமாக மாதச் செலவுப் பட்டோலை பெரும் போரைக் கிளப்புவது வழக்கம் அல்லவா? ஆசிரிய சம்பளத்துள் வாழ்க்கை நடத்துவது என்பது மிகச் சிரமம் - என்பன போன்ற நினைவலைகள் அலைமோதுகின்றன.

இத்தனையும் இப்படியே இருந்த போதும், நாடக வெறி என்னை இந்நேரம் சிவக்கொழுந்துவின் வீட்டிற்கே மீண்டும் கொண்டு வருகிறது. ஆமாம்! என்னைப் பொறுத்தவரை நாடகம் எனக்கொரு வெறியேதான்!

□ □ □

செல்வம் சகடைக்கால் போல் வரும் என்றுதானே படித்திருக்கிறோம்? ஆனால், செல்லம்மாவைப் பொறுத்தவரை இப் பொன் மொழி வெறும் பொய் மொழி. அவளின் வாழ்வில் சகடைக்கால் என்றும் உருண்டது இல்லையே! செல்லம்மா பிறந்தது வறுமையில்; வளர்ந்தது வறுமையில்; இன்று வாழ்ந்துகொண்டு இருப்பதும் கொடூர வறுமையில்!

கமக்காரக் குடும்பத்தில் பிறந்து ஒரு கடும் உழைப்பாளியான கமக்காரன் ஒருவனைக் கரம்பிடித்து, கால் நூற்றாண்டு காலம் காதல் வாழ்க்கை வாழ்ந்தும்

ஏனோ தெரியாது செல்லம்மா குடும்பத்திற்கு லஷ்மியின் கடைக்கண் பார்வை கிட்டவில்லை..

பற்றாக்குறைக்கு இரண்டாண்டு காலத்திற்கு முன்பு மோசமான உள்நாட்டு யுத்தம் அவளை விதவை ஆக்கியும் விட்டது!

அவளுக்கு நாலு மக்கள். கடைக்குட்டி மட்டும்தான் மகன். அவனுக்கு வயது பதினாறு மாத்திரமே. பெயர் செல்வராசா. ஐந்து ஜீவன்களை ஒரு விதவை எப்படி ஆதரிப்பாள்? ஒரு பெண் எப்படி ஒரு தோட்டத்தைச் செய்விப்பாள்?..

செல்லம்மாவினதும், மூன்று பிள்ளைகளினதும் நகை நட்டு கரைந்து விட்டது. தரித்திர எல்லைக்குள் படிப்படியாக வீழ்ந்துவிட்ட செல்லம்மா தற்காப்பு நடவடிக்கையாக ஆசை மகன் செல்வராசாவை அகதி என்ற தோரணையில் முகவர் மூலம் ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கிறாள். செல்வராசாவின் பயணச் செலவு செல்லம்மாவின் பெயரில் இருந்த ஒரே ஒரு தோட்டத்தையும் அவளிடமிருந்து பறித்து விட்டது.

செல்வராசா நேர்ந்தபடி எதுவித சோலியும் இன்றி ஜேர்மனி போய்ச் சேர்ந்தான். இராப்பகல் என வித்தியாசம் பாராது கடுமையாக உருக்குலைந்து உழைத்தான்.

செல்வராசாவின் சிந்தனை 'கடும் உழைப்பால், குடும்பத்தைச் சகதியில் இருந்து இழுத்தெடுப்பதும்', 'வாழ்க்கைப்படாத அக்காமாரை வாழ வைப்பதும்' ஆகும்.

ஆனால், சகடைக்கால் உருளும் அறிகுறி தெரிந்த நிலையில், அவன் ஜேர்மனி போய் ஆறே ஆறு மாதங்களில், 'வாகன விபத்து' என்ற பெயரில் வந்த எமன் செல்வராசாவின் இன்னுயிருக்கு உலை வைத்தான். இனி செல்லம்மாவின் கதி?.. பெண்பிள்ளைகளின் எதிர்காலம்?..

பிரளயத்தின் தாக்கம் செல்லம்மாவை சித்தப்பிரமை ஆக்கிவிட்டது!

செல்லம்மாவுக்கு இனிப் பஞ்சம் பிணி தெரியா; நோய் நொடி தெரியா; கஷ்ட நஷ்டம் தெரியா; அவளுக்கு இனி பந்த பாசம் இல்லை; பொறுப்புக்கள் இல்லை; கடமைகளில்லை; அவள் சதா சிரித்தபடி; நித்தம் அலட்டியபடி!

இனி அந்தக் குடும்பத்தின் கதி?..

- இந்த விடை காணாக் கேள்வியோடு முடிவதுதான் பிரளயம் நாடகக் கதை.

பிரளயம் நாடகத்தில் முக்கிய பாத்திரம் செல்லம்மா. செல்லம்மா பாத்திரமாகவே மாறி தத்ருபமாக நடிக்கக்கூடிய குணச்சித்திர நடிகை சாரதா மாத்திரமே!

சாரதாவை விட்டால் நாடகம் 'சப்' என்று ஆகிவிடும். எதிர்பாராத விதமாக எதிர்பார்க்காதது நடந்து விட்டது! இதுவரை உற்சாகமாக ஒத்திகைக்கு வந்துபோன சாரதா 'வீட்டுப்பிரச்சினை, இனி நாடகத்துக்கு வரமுடியாது' என அறிவித்துவிட்டாள்!; சாரதா பாடசாலைக்கு சரியாக வருவதும் இல்லை.

இந்நாடகம் 'தமிழ்த்தினப் போட்டிக்குத்' தயாரிக்கப்படுவதால் போட்டித் தினமும் அண்மித்து விட்டதால், எங்கள் கல்லூரி அதிபர் அவசரமும், ஆத்திரமும் அடைகின்றார். 'சாரதா நாடகத்துக்கு வந்தே ஆகவேண்டும்; பொறுப்பேற்றவள் பின்வாங்க முடியாது' எனச் சீற்றம் அடைகின்றார். எனக்குக் கலைஞர் சிவக்கொழுந்துவை நன்றாகத் தெரியும். நான் கலைஞரின் மானசீக மாணவன். அவரின் சொந்த ஊரில் அவர் இருந்த வேளை பலதடவை அவரின் இல்லத்துக்குப் போய் அவரைச் சந்தித்தவன். கலைஞர் நாடகக் கலைக்கென வாழ்பவர். அவர் என்னை அங்கீகரித்து ஆசீர்வதித்தவர். இன்று கட்டாயம் ஆதரிப்பார் என்ற நம்பிக்கையில், 'நாடகப் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை நான் எடுக்கின்றேன். இதனாலே தான் 'இரண்டு நாள் அவகாசம் தாங்க சேர்' என அதிபரிடமும் வேண்டி சம்மதம் பெற்றுள்ளேன்.

நான் அதிபருக்கு வழங்கிய வாக்கைக் காப்பாற்ற முடியுமா? சாரதா மசிவாளா? கலைஞர் கைகொடுப்பாரா? பிரளயம் மேடை ஏறுமா? நாடகம் தமிழ்த்தினப் போட்டியில் வெற்றி ஈட்டுமா? துன்பியல் நாடகம் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்துமா? என்ற ஏக்கங்களுடன் கலைஞர் சிவக்கொழுந்துவின் வளவுக்குள் வலது காலை முன்னெடுத்து வைக்கின்றேன்.

□ □ □

வளவின் முன்பக்க கிழக்கு மூலையில் கிளை அகலப் பரப்பி, ஓங்கி வளர்ந்த பென்னம் பெரிய வேப்பமரம் ஒன்று நிற்கிறது. அவ் வேப்பமர நிழலில் என் சைக்கிளை ஸ்ராண்டில் விட்டுப் பூட்டிய நான், மெதுவாக வீடு நோக்கி நடக்கின்றேன்.

எந்தநேரமும் பொறிந்து, கொட்டுண்டு, இடிந்து, வீழ்ந்து, நொருங்கும் மோசமான நிலையிலான மிகப் பழைய நாற்சார் வீடு அது. ஆனால்,

அதிசயம்! மிகமோசமான நிலையில் வீடு இருந்தபோதும், மிகத்துப்புரவாகவும், ஓரளவு அழகாகவும் வீடு காட்சி அளிக்கிறது.

வீட்டைப் பார்த்த எவரும் சிவக்கொழுந்து மாஸ்ரர் நல்லதொரு கலைஞன், அதே நேரம் அவரின் இன்றைய பொருண்மிய நிலை மிக மோசமானது என்பனவற்றை இலேசாக மட்டிட்டுக் கொள்ளுவார்கள்.

‘ஓர் ஏழை எப்படி கலையினை வளர்க்க முடியும்? சிவக்கொழுந்து எப்படி நாடகம் தயாரிக்க முடியும்? ‘பச்சோந்திகளை’ இவரால் எப்படி மேடை ஏற்ற முடியும்?’ - என் மனத்துள் எழுந்த கேள்விகள் இவை.

‘ஏனோ தெரியாது அதிகப்படியாக ஏழைகள்தான் கலைகளில் ஈடுபடுகின்றார்கள். ஏழ்மைக்கும் கலைகளுக்கும் ஏன் இந்தச் சம்பந்தம்? கலைஞர்களின் ஏழ்மையைப் போக்க முடியாதா? கலைஞர்களுக்கு ஆதரவு அளிக்கும் நேசக்கரம் நீட்டும் ஸ்தாபனம் ஒன்று உருவாகாதா?’ - என் நெஞ்சகத்தே எழுந்த ஆவல் அலைகள் இவை.

இப்படியான கேள்விகள் மனத்துள் அலை மோதிய நேரம், யாரோ இருவர் விறாந்தையில் இருந்து ஆர்வமுடன் உரையாடும் சத்தம் கேட்கிறது.

யார் இவர்கள்? இவர்கள் என்ன உரையாடுகிறார்கள்?.. - உற்றுக் கேட்கின்றேன்.

பழக்கமான அவர்களின் குரல்கள் அவர்களை இலகுவாக இனங்காட்டி விட்டன. ஒருவர் கலைஞர் சிவக்கொழுந்து; மற்றவர் அவரின் அருமை மகளும், எங்கள் கல்லூரி மாணவியுமான சாரதா.

ஆள் அடையாள ஊகம் நிரூபணமானதைத் தொடர்ந்து, அவர்கள் பஞ்சத்தில் உழலுகின்றார்கள் என்ற எனது ஊகமும் உறுதியாகின்றது.

"பிள்ளை நீ நம்பிக்கை அளித்தபடியால் பிரளயம் நாடகத்தில் நடிக்கவே வேண்டும்"

"அம்மாவின் நிலைமை இவ்வளவு மோசமாகுமென முன்கூட்டிச் சரியாக மட்டிட முடியவில்லை. அம்மாவின் இன்றைய நிலையில் நான் நடிக்க மாத்திரம் அல்ல, படிக்க கல்லூரிக்குப் போகவும் இல்லை."

"என்ன இருந்தாலும் நாடகத்தைப் பாதியில் நிறுத்தலாமா?"

"அம்மாவின் உயிர் பாதியில் போகலாமா?!... அப்பா நீங்கள் நல்லாக யோசிச்சுக் கதைக்க வேணும்... இப்ப அம்மாவுக்கு கடும் ஈளை; ஈளையோடு இரத்தத்தில் நீரழிவு; பத்தாக்குறைக்கு இரத்த அழுத்தமும்... அம்மாவை உயிர் ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதா? நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதா?.. உயிரா? கலையா? எதப்பா முக்கியம் சொல்லுங்கோ?"

"ரெண்டும் தான்"

"மிகக் கெட்டித்தனமாகச் சொல்லிப்போட்டியள். இரண்டு வேலைகளையும் ஒரே நேரத்தில் எப்படியப்பா செய்வது? அம்மாவுக்குப் பணிவிடை செய்ய உங்களால் வீட்டில் இருக்க முடியவில்லை. சதா பச்சோந்திகள் நாடக ஒத்திகை என்று ஓடித்திரியிறியள். இன்னொன்று வீட்டிலை

ஒரு சதக் காசும் இல்லை. காசு இல்லாமல் எப்படி மருந்து வேண்டுவது? வைத்தியரிட்டைக் காட்டுவது எப்படி? கார் பிடித்து வைத்தியசாலைக்கு அம்மாவைக் கொண்டு போவதுதான் எப்படி?.."

"நாடகத்தைத் தொடங்கிப் போட்டன். தொடங்கிய நானே போகாது விட்டால்!."

"நீங்கள் நாடகத்தைப் பாருங்கோ. நான் இப்போதைக்கு அம்மாவைப் பார்க்கிறன்."

"சா.. ர.. தா.."

"தயவு செய்து என்னை நடிக்கப் போகும்படி இப்போதைக்கு நெருக்காதையுங்கோ. எனக்கு நாடகத்தைவிட - நான் ஏற்படுத்திய நம்பிக்கையைவிட - அரும்பாடு பட்டு என்னைப் பெற்று வளர்த்த அம்மா பெரிசு. தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. அம்மா சாகக் கிடக்க நான் நாடகம் நடிக்க ஏலுமா? அம்மாவைப் பார்க்க இங்கை ஆர் இருக்கினம்?.."

இதற்கு மேல் அவர்களின் உரையாடலைச் செவி மடுக்க முடியாத நான் மேலும் பதுங்கி ஒதுங்காது ஒன்றுமே கேட்காதது - தெரியாதது போல் "மாஸ்ரர்... மாஸ்ரர்" என உரத்த குரலில் கூவி அழைக்கின்றேன். கலைஞர் வெளியே வந்து வணக்கம் தெரிவித்து, என்னைப் பண்பாக வரவேற்கிறார்.

நான் வரவேற்புச் சாலையின் சுவரில் மாட்டப்பட்டிருந்த பென்னம் பெரிய தில்லைக்கூத்தன் திருவுருவப் படத்திற்கு நேர்கீழே போடப்பட்டிருந்த பழைய நாற்காலியில் அமருகின்றேன்.

கலைஞர் நிலை குழம்பியதாக எனக்குத் தெரியவில்லை; வேதனையான விடயம் ஒன்றினை அக்கறையாக அலசி ஆராய்ந்த அறிகுறி எதுவும் அவரின் முகத்தில் தெரியவில்லை. முகபாவம் முற்றாக இயல்பு நிலைக்கு மாற்றப்பட்டு விட்டது. அவரின் உதட்டில் புன்முறுவல்; முகத்தில் மலர்ச்சி; பேச்சில் நிதானம்.

அது அன்றோ நடிப்பு!.. அவர் அன்றோ நடிகன்!.. அவர் அன்றோ உண்மைக் கலைஞன்!.. - என நான் உறுதி செய்து கொள்ளுகிறேன்.

“நான் ஒரு அலுவலாக இந்தப் பக்கம் வந்தனான். இஞ்ச வந்தாப்போலை அம்மாவுக்கும் சுகமில்லை என்றும் அறிஞ்சாப் போலை அம்மாவையும் பார்த்திட்டு, உங்களோடையும் கதைச்சிட்டுப் போகலாம் என யோசித்து வந்தனான்” என நான் பொய் அளக்கின்றேன்.

உபசரிப்பின் அடையாளங்களாக விருப்புடன் அன்பாக தேநீரும் பனங்கட்டியும் வழங்கப்படுகின்றன. ஒரு வெள்ளித் தட்டில் புளுக்கொடியல் கீற்றுக்களும் பரிமாறப்படுகின்றன. தேநீரையும் புளுக்கொடியலையும் சுவைத்ததோடு கலைஞரின் நவீன நாடகம் பற்றிய கருத்துக்களையும் கேட்டுச் சுவைத்து ஜீரணித்த நான், ஒரு மணித்தியால நேரகால உரைவிருந்துக்குப் பின் கலைஞர் குடும்பத்திடம் விடைபெறும்போது, சேர்ட் பொக்கற்றுள் ஒரு மேலுறையுள் இருந்த நாலு பெரிய பச்சை நோட்டுக்களுள் ஒன்றினை இழுத்தெடுத்து அம்மாவின் கையுள் பலவந்தமாகத் திணித்து, சற்று ஆறுதல் பெருமூச்சுடன் வெளிக்கிளம்புகின்றேன்.

**தினகரன் 31-03-1996**

# பிறந்தநாள் பரிசு

கடலை அண்மித்த அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் இன்று வாடிக்கையாளர்களால் நிரம்பி வழிகின்றது.

ஞாயிற்றுக்கிழமையும் அல்லவா? ஞாயிறு விடுமுறை நாள். விடுமுறையைச் சந்தோஷமாகக் கழிக்க விழையும் தனவந்தர்களுக்கு ஹோட்டல் வேட்டை நிலந்தானே!

நாகலிங்கம் வர்த்தகரைப் பொறுத்தவரை இது முக்கிய நாள். இவரின் நாற்பதாவது பிறந்தநாள் கொண்டாட்டம் இன்று. முப்பத்தொன்பது வயதுள் புறக்கோட்டையின் முக்கிய புள்ளிகளுள் ஒருவரானது சர்வசாதாரண விடயமா? இவரின் அயராத உழைப்புக்குக் கிடைத்த பெரு வெற்றி அல்லவா அது? ஓய்வின்றி உழைக்கும் ஒருவருக்கு ஆறுதல் வேண்டாமா? இவரின் பிறந்தநாளும் அல்லவா? கொண்டாடாமல் எப்படி விடுவது? கொண்டாடாது விட்டாலும் நண்பர்கள் விட்டு விடுவார்களா?..

நாகலிங்கம் தனது ஒவ்வொரு பிறந்தநாளையும், அத்தோடு தேசிய பண்டிகைகளையும் பெரும் கொண்டாட்டங்கள் ஆக்கி, தனது வியாபாரத்துக்கு அந்நேரம் தேவைப்படும் வர்த்தகரை அழைத்து, இறால் போட்டுச் சுறாப் பிடிப்பது வழக்கம். இரத்தத்தில் ஊறிய வர்த்தக ஞானத்தோடு, வர்த்தக பட்டப்படிப்பும் கூட்டுச் சேர்ந்தால் எப்படி இருக்கும?.. அதுதான் நாகலிங்கத்தின் முழு வெற்றியின் இரகசியம்!

இன்றும், அதாவது இவரின் பிறந்தநாள். மாலை வேளை. கொண்டாட்டத்திற்குப் பரிசுகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்ற பணிவான அறிவித்தலோடு, தனது இன்றைய வியாபாரத்துக்கு ஏற்ற ஐந்து முக்கிய நண்பர்களை வரவழைத்திருந்தார். அவர்களின் கீழ்த்தர உணர்வுகளுக்கு இரைபோட்டு வியாபாரம் பிடிக்கும் நோக்கமாக அவர்களோடு தனது ஆடம்பரக் காரில் 'கப்சிப்' என வந்து இந்த நட்சத்திர ஹோட்டலில் குதித்துள்ளார் நாகலிங்கம்.

வழமையாக ஞாயிறு விடுமுறை நாட்களை இவர் சந்தோஷிப்பது ஹோட்டல்களில். இன்று பிறந்தநாள் கொண்டாட்டமும் அத்தோடு பெரிய வியாபாரத்துக்கு அங்குரார்ப்பணமும். எனவே இவரது தெரிவு நவநாகரிக நட்சத்திர ஹோட்டலாக அமைந்துள்ளது. இதனால் இவருக்கு இன்று நட்டம் ஏற்பட மாட்டாது என்பது இவரின் கணிப்பு. ஐசுவரியம் நிறைந்த இந்த ஹோட்டலுக்குத் தன்னுடன் வந்தவர்களுள் இருவர் இன்றுதான் முதல் தடவையாக இங்கே வருகை தந்துள்ளமையால் நாகலிங்கம் முதல் வேலையாக அவர்களுக்குக் கவர்ச்சிகரமான முக்கிய இடங்களைச் சுற்றிக் காண்பிக்கிறார்.

நுழை வாசலில் ஒரு அழகிய மினிப் பூங்கா. பூங்காவின் மத்தியில் அம்மணமான ஒரு அழகிய மாதின் சிலை. உயிருள்ள நங்கை ஒருத்தியே அது என மயங்கச் செய்யும் அளவு தத்ரூபமாக சிற்பியால் செதுக்கப்பட்ட கலைச் சிருஷ்டி அது. அந்தப் பாவை சரிவாக ஒரு

குடத்தை ஏந்தி வைத்திருக்கிறாள். அக்குடத்திலிருந்து தெளிந்த நீர் சதா சொரிந்து பாய்ந்தோடி, பார்வைக்கு அது மிகப் பரவசத்தை ஏற்படுத்துகின்றது.

அச்சிலையின் பிறந்தமேனி அழகில் மனதைப் பறிகொடுத்த நாகலிங்கம் குழுவினருக்குப் பால் உணர்வு கொப்பளிக்கிறது.

"எப்படி மச்சான் வேலைப்பாடு?"

"சுப்பர் கிறியேசன் மச்சான்"

"உயிரோடை உப்படி ஒன்று கிடைச்சா"
- அங்கலாய்க்கின்றனர் அவர்கள்.

ஒரு மாதையா மட்டும் கேட்கின்றீர்கள்? ஒரு நூறு இதோ!.. என்பதுபோல் அவர்களின் கண்ணெதிரே ஏராளமான கனவுக் கன்னிகள் அரை நிர்வாண நிலையில்!

ஆம்! அது ஹோட்டலின் ஒரு ஒதுக்குப்புறத்தில் அமைந்த நவநாகரிக நீச்சல் தடாகம். மெல்லிய நீலநிற வர்ணத்தில் பிரகாசிக்கும் மின்னொளியில் ஜொலிக்கிறது அது. அதனுள் பல்வகை துவளும் மீன்கள்?.. அல்ல, அல்ல! 'மீனோ' என எவரையும் வியக்க வைக்கும் அழகு படைத்த நீச்சலாடும் உள்ளூர், வெளிநாட்டு கட்டிளம் காளைகளும் கட்டழகிகளும்! பலவர்ண கவர்ச்சிகரமான நீச்சல் உடையில் உயரிய பீடங்களில் இருந்து பாய்ந்து, - குதித்து - சுழியோடி - விளையாடி மகிழ்கின்றனர்; மற்றவர்களையும் மகிழ்விக்கின்றார்கள்.

ஒரு சிலர் தடாகக் கரைக் கற்கட்டுக்களிலும் ஓரங்களிலும் மல்லாந்து கிடக்கின்றனர்; வேறு சிலர் சல்லாபிக்கின்றனர்; இன்னும் சிலர் காதல் லீலைகளில் களிக்கின்றார்கள்.

"என்ன உலகமடா?.." - என மன வக்கரிப்புக்கு ஆளாகும் நாகலிங்கம் குழுவினர் பெருமூச்சு விடுகின்றனர்.

"எப்படியான வாழ்க்கை! பாத்தியே மச்சான்"

"வாழ்க்கையையே என்ஜோய் பண்ணுறாங்கள்"

"வாழப்பிறந்ததுகள்"

"நாங்களும் இருக்கிறம்... உழைப்பு ஒன்று மட்டும் தான் மிச்சம்"

"எங்கடை மொனோட்டோனியஸ் லைவ்க்கு ஒரு சேன்ஞ்ச் வேணும்"

"ஒரு றிலீவ் அவசியம்"

"ஆசைகளுக்கு ஒரு வடிகால் வேணும்"

"எக்ஸாக்லி சோ"

நண்பர்கள் இப்படி, தமாசாகக் கதைத்தபடி, படிக்கட்டுக்களில் ஏறி, முக்கிய கட்டிடத்தின் இரண்டாம் மாடிக்கு வருகிறார்கள்.

சாளர வழியாக வெளியே உற்றுப் பார்க்கிறார்கள். கறுத்த வானில் வெள்ளி நிலாப் பூத்திருக்கிறது. நிலாவைச் சூழ்ந்து நட்சத்திர மின்மினி விளக்குகள் பிரகாசிக்கின்றன. கடலும் கருமை நிறமாகி விட்டது. ஆழியிலும் சில விளக்குகள்! அவை கொழும்பு துறைமுகத்துள் உள்நுழைய வெளியே வரிசையாக நங்கூரமிட்ட கப்பல்களில் எரியும் மின் விளக்குகள்.

இந்த இயற்கை எழிற் கோலத்தைக் கண்டு மகிழும் ஆவலாகச் சாளரத்தின் அருகே போடப்பட்ட மேசையைச் சூழ்ந்த ஆசனங்களில் நண்பர்கள் அமர்கின்றார்கள்.

அவர்கள் இந்நேரம் அமர்ந்திருக்கும் மண்டபமே ஹோட்டலின் நவ நாகரிக போசனசாலை.

ஜன்னல் வழியாக உட்புகும் குளிர் காற்று உடம்பை ஆறுதற் படுத்துகின்றது. ஒலிபரப்பி வழியாக பிறக்கும் மெல்லிசையும், அலங்கார மின்விளக்குகளிற்கு ஊடாக ஒளிரும் தண்ணொளியும் உள்ளத்துக்கு இதமாக இருக்கின்றன. மேனியும், மனமும் அமைதி அநுபவிக்கும் இடம் இது.

போசனசாலையில் மது நெடிவேறு. பால் வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாரும் குடிக்கின்றார்கள்; தின் பண்டங்களைச் சுவைக்கின்றார்கள்; சிகரட்டைப் புகைத்து இன்புறுகிறார்கள்.

"என்ன மச்சான் எடுப்பம்" - நாகலிங்கம் விசாரிக்கின்றார்.

"அறாக்"

"அறாக் குடிக்க இஞ்ச வரவேணுமே மச்சான்"

"அப்ப பியர்"

"பொம்பிளையளின்ரை றிங்"

"பிறண்டி"

"நோயாளிகளின் றிங்"

"நான் ஓடர் பண்ணுகிறன் மச்சான்... விஸ்கி"

-நாகலிங்கம் அங்கே பணிவிடைக்கு பொறுமையாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வெயிற்றரிடம் ஆணை இடுகிறார்.

"என்ன சன்டி (Shandy) பண்ணப் போறியள்" - நாகலிங்கம் தொடர்ந்து நண்பர்களை விசாரிக்கின்றார்.

"கொக்கா கோலா"

"எனக்கு நீற்ராக (Neat) வேணும்"

"ஓகே... ஓகே... என்ன பைற்"

"டெவில் பீவ்"

"ஓகே!.. இந்தாப்பா. உன்னைத்தான்... எங்களுக்கு விஸ்கி, ஐஸ்கியூப், கொக்காகோலா, டெவில் பீவ்"

"ஒகே சேர்."

அனைத்தும் மேசைமேல் பரப்பப்படுகின்றன. விஸ்கிக் கிளாசுகளை நண்பர்கள் ஒன்றோடு ஒன்றை முட்டி 'ஹாற்டி சியேஸ்' என வாழ்த்தி நாகலிங்கத்தின் நல்லாரோக்கியத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றனர்.

நாகலிங்கம் நண்பர்களுக்குத் தலை தாழ்த்திப் பதிலுக்கு வாழ்த்தும், நன்றியும் தெரிவிக்கின்றார்.

"என்ன சாப்பிடுவம்?.." - மேசையின் மேல் பரப்பப்பட்ட மெனுவில் பார்வை செலுத்தியபடி நாகலிங்கம் தனது சகாக்களைத் தொடர்ந்து மீண்டும் விசாரிக்கின்றார்.

"ஜெலோ றைஸ் வித் சிக்கின் கறி"

"பிறைட் றைஸ் நல்லாக இருக்கும்"

"ஓகே. பிறைட் றைஸ் வித் சிக்கின் கறி"
- நாகலிங்கம் ஆமோதிக்கின்றார்.

நாகலிங்கம் மெனு அட்டையிற் தங்களுக்கு தேவைப்படும் சாப்பாட்டு வகை இலக்கங்களைக் குறிப்பிட்டுத் தெளிவாக ஆடர் பண்ணுகிறார்.

"சேர் டெசேட்?" - வெயிற்றரின் குறுக்கீடு இது.

"சொல்லுங்கோ" - நாகலிங்கம் நண்பர்களைத் தூண்டுகிறார்.

"மிக்ஸ்ட் புறுட் சலட்"

"கேட்டுதா?"

"ஓகே சேர்" - வெயிற்றர் தலையசைக்கிறார்.

அனைத்தும் அழகான பீங்கான் கோப்பைகளில் பரப்பப்பட நண்பர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிச் சுவைத்து மகிழ்கின்றார்கள்.

"ஹலோ நாகலிங்கம் மெனி ஹாப்பி றிற்ரேர்ன்ஸ் ஒவ் த டே" - பிறந்தநாள் வாழ்த்தொலி வந்த பக்கம் நண்பர்கள் திரும்பிப் பார்க்கிறார்கள்.

அங்கே நாகலிங்கத்தின் ஆத்ம நண்பன் நடா நிற்கிறார்.

"நாக! என்ன இன்டைக்கு என்னை மறந்துவிட்டாய்" - பகிடிபோல் நடா என அழைக்கப்படும் வியாபார நண்பன் நடராஜா விசாரிக்கிறார்.

நாகலிங்கம் தவறுக்கு மன்னிப்புக்கோரி தங்களுடன் சேர்ந்து சாப்பிடுமாறு நடாவை அன்பாக அழைக்கின்றார்.

நடா, தான் சாப்பாடு முடித்து, புறப்படுவதற்குத் தயாராகும் போதுதான், தற்செயலாக நாகலிங்கத்தைக் கண்டதாகச் சொல்லி அன்றைய விடியற்புறம் நடந்த சம்பவம் ஒன்றினை ஞாபகப்படுத்துகின்றார்.

"நாக, நீ காலமை கோயிலுக்கு போனது மாதிரிக் கிடந்துது"

"ஓம் நடா. எங்கட சிவன் கோவிலுக்கு"

"வெள்ளை வேட்டி, ஓம் முருகா சால்வை, கழுத்துத் தங்கச் சங்கிலியோடை பாக்கச் சோக்காக் கிடந்தது"

"சும்மா நக்கல் அடியாதை நடா"

"சும்மா சொல்லயில்லை, வேட்டி, வெறும்மேல், வீபூதி, சந்தனப்பொட்டு பூச்சுக்கு வலு எடுப்பாகத்தான் இருந்தது"

"மச்சான் அம்மாவும் அப்பாவும் பழம் பஞ்சாங்கங்கள்! அதுகளின்ரை ஆச்சாரத்தையும் திருப்திப்படுத்த வேணும்தானே"

"என்ன எப்படியென்டாலும் மன்மதக் குஞ்சுதான்டா நீ. உனக்கு ரதி ஒருத்தி இல்லாதது தான் ஒரே ஒரு குறை"

ஹோட்டலில் எத்தனையோ வகைவகையான ரதிகளுடன் எத்தனையோ இரவுகள் படுக்கைச் சுகம் அனுபவித்த நாகலிங்கம் அந்த இதமான நினைவுகள் மனத்திரையில் நிழலாட மெல்ல உதட்டுள் சிரித்தார்.

"நடா உதுகளை விட்டு, வந்த விடயத்தைச் சொல்லு. என்ன விடயம்? என்ன செய்ய வேணும்" - நாகலிங்கம் பேச்சைத் திசை திருப்புகிறார்.

"மச்சான் ஜப்பானில் இருந்து ஜெனறேற்றேர்ஸ் இம்போற் பண்ணி இருக்கிறாயாம். எனக்கு ஒரு ஐம்பது றிசேவ் பண்ணி வைத்திரு"

"ஓகே. இற்ஸ் லைக் ஓல்றெடி றிசேவ்ட்" - எனச் சொல்லி நம்பிக்கை ஊட்டுகிறார் நாகலிங்கம்.

வியாபாரப் பேச்சை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு நடா விடை பெற்று வெளியேற, நடா போட்ட பீடிகையை முற்று முழுதாக தன் வாய்ப்பாக்கிக் கொண்டு, தனது இன்றைய இம்போட்டற் ஐயிற்றங்களைக் கவர்ச்சிகரமாக அறிமுகம் செய்கின்றார் நாகலிங்கம். நண்பர்கள் தங்களின் தேவைகளைத் தெரிவித்து, விற்பனை முன் ஒழுங்குகளையும் பேசித் தீர்த்துக் கொள்கின்றார்கள். நாகலிங்கத்தின் இன்றைய முக்கிய அலுவல் வெற்றிகரமாக மேடையேறிவிட்டது! அவருக்குக் கொள்ளை இலாபம்.

நாகலிங்கத்தின் இன்னொரு நண்பனான பெர்ணாந்தோவும் நாகலிங்கத்தை அங்கே கண்டு கொண்டதால் குசலம் விசாரிக்கிறார்கள். கதையோடு கதையாக பெர்ணாந்தோ நடந்தேறிய இன்னொரு நிகழ்வை நினைவுபடுத்துகின்றார்.

"மச்சான் போன வாரம் எங்கடை கொலிஜ் பங்சன் ஒன்றுக்குச் சிறப்பு விருந்தினராக வந்தாய்"

"ஓம் மச்சான் உனக்கு எப்படித் தெரியும்? நீயும் விழாவுக்கு வந்தியா?"

"ஓம் மச்சான் நீ வந்த மாதிரிக்கு எனக்கு மேடைக்கு வந்து கதைக்க ஒரு மாதிரி இருந்துது. பெரிய பெரிய எடியுக்கேஸனலிஸ்ற்றோடை மேடையிலிருந்த உன்னட்டை நான் எப்படி வாறது... புல் சூட் உடுப்புக்கு

நல்ல எடுப்பாகவும் இருந்துது. பிறகு ஆங்கில, தமிழ்ப் பேப்பர்களிலும் படம் வந்து இருந்துது.. கலாசாலைக்குப் பெருந்தொகை வழங்கிய 'வள்ளல் நாகலிங்கம்' எனப் பேப்பர் வர்ணித்திருந்துது"

கல்லூரியின் குடிநீர் விநியோகப் பொறுப்பை ஒப்பந்தம் எடுத்து பெருந்தொகைப் பணம் வியாபாரத்தில் இலாபம் பெற்றமையை மறைத்து, வெளிப்பூச்சு வேலையாக, டொனேஸன் வழங்கியமைக்கு மாத்திரம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் நாகலிங்கம்.

"ஒரு இருபத்தையாயிரம் மட்டும் தான் டொனேற் பண்ணினேன்... தான தருமமும் செய்ய வேணும்தானே. எல்லாம் கல்வி வளர்ச்சிக்கு மச்சான்"

"வெரி குட். வெரி குட். கீப் இற் அப்"

தனது நவீன வியாபார யுக்தி முறை நல்லாக வெற்றியீட்டுவதை நன்குணர்ந்து உள்ளூர மகிழும் நாகலிங்கம், நண்பன் பெர்ணாந்தோவுடன் மேலும் சந்தோஷமாகக் கதைத்து அவரை வழியனுப்புகிறார்.

நேரம் இரவு. மணி பதினொன்று. நண்பர்கள் 'பிளேயின்' கோப்பி அருந்திக் கலைய ஆயத்தமாகின்றார்கள். இராப் போசனக் கட்டணச் சிட்டை நாகலிங்கத்தின் முன்பாக ஒரு மடிப்புக்குள் வைக்கப்படுகின்றது. முழுச் செலவு மூவாயிரத்து இருநூறு ரூபாய். நாகலிங்கம் ரூபா மூவாயிரத்து ஐந்நூறுக்கு நோட்டுக்களை மடிப்புக்குள் மறைத்து வைக்கின்றார்.

வெயிற்றர் சிட்டையின் அளவு தொகையைச் செலுத்தி, மீதி ரூபாய் முன்னூறையும் மடிப்புக்குள் வைத்துத் திருப்பி நாகலிங்கத்திடம் கொடுக்கின்றார்.

"இது உனக்கு 'ரிப்ஸ்' அப்பா. நீ இதை எடு"
- வெயிற்றருக்கு நாகலிங்கம் ஞாபகப்படுத்துகின்றார்.

"வேண்டாம் சேர்! பத்து வீத சேவிஸ் சார்ஜ் அதாவது, எங்கள் எல்லாருக்குமான ரிப்ஸ் சிட்டையிலை முற்கூட்டியே சேர்த்திருக்கு"

தனது பெருந்தன்மையை பறைசாற்றும் நோக்கமாக, திரும்பவும் உரத்த அதிகாரத் தோரணையில் ரிப்ஸ்சை எடுக்கும்படி பணிக்கிறார்.

"உங்கடை சந்தோஷம் எனக்கு வேண்டாம் சேர்"
- வெயிற்றர் மீளவும் மறுப்புத் தெரிவிக்கின்றார்.

"எ..ன்..ன..!"

"ஏன் அப்பா, ஒரு பெரிய மனிஷன் சந்தோஷமாகத் தர வேண்டாம் எண்ணுகிறாய்"

- நாகலிங்கத்தின் நண்பர் ஒருவர் வெயிற்றரிடம் கேள்வி எழுப்புகின்றார்.

"உவரை எனக்கு நல்லாகத் தெரியும் சேர்... உவருக்குக் கீழை சிற்றூழியனாக வேலை செய்தவன் நான்... மாதாமாதம் இரண்டாயிரம் மட்டும் தான் சம்பளம் தந்தவர்.

ஐம்பது ரூபா சம்பள உயர்ச்சி கேட்க மாட்டன் எண்டு போட்டார். என்ரை அம்மாவின்ரை செத்தவீட்டு இழவுச் செலவுக்கு ஒரு இரண்டாயிரம் ரூபாய் லோனாகக் கேட்கவே மறுத்துப் போட்டார்!. உவற்றை கஞ்சத்தனத்தால் தான் நான், உவற்ரை கம்பனி வேலையை இராஜினாமாச் செய்துபோட்டு இந்தக் ஹோட்டல் வேலையில் சேர்ந்தனான் சேர்"

- நாகலிங்கத்தின் நண்பர்கள் அயர்ந்து விடுகிறார்கள்!

நாகலிங்கத்திற்கு உலகமே உருண்டு கீழே அதள பாதாளத்தில் 'தொம்' என விழுந்து நொருங்கியது போல் இருந்தது!

'ஆர் நீ?!...'

- நாகலிங்கம் பேரதிர்ச்சியோடு வினாவுகின்றார்.

"என்னைத் தெரியவில்லையா? நான் தான் சேர் உங்கடை பழைய தொழிலாளி முத்தையா!'

'மு..த்..தை..யா..வா..?!"

இவ்வளவு நேரமாகக் கனவானாக - வர்த்தகச் சக்கரவர்த்தியாக - ஆசாரப் பெட்டகமாக - தருமவானாக இனம் காட்டி, சமுதாயத்தை ஏமாற்றிய ஆசாடபூதி நாகலிங்கத்தின் முகத்திரை பரிதாபமாகக்

கிழிந்து விழ, கேவலப்படுத்தப்பட்ட துர்ப்பாக்கிய நிலையில் கூனிக் குறுகி, இவர் நிலை இழந்து போனார். தலை கவிழ்ந்தது; முகம் கறுத்தது; உடல் மணிமணியாக வேர்த்தது; வாய் அடைத்தது; வார்த்தைகள் வெளிவரவே இல்லை!

கிரீடம் இழந்த வர்த்தக சக்கரவர்த்தி திரும்பவும் முத்தையாவை உற்று நோக்குகின்றார்.

அவன் முத்தையாவேதான்! இதுவரை நேரமாக அவனை இவர் கவனிக்கத் தவறி விட்டாரே!

முத்தையாவின் இன்றைய எடுப்பான சீருடை- தடித்த, கறுத்த மீசை- அழகான குறுந்தாடி முதலியவை அவனின் ஆள் அடையாளத்தை முற்றாக மறைத்து விட்டனதான்!

**வீரகேசரி 21-04-1996**

# ஒட்டுண்ணி

'முதலியார்', 'முகாந்தரம்', 'மணியகாரன்', 'உடையார்', 'விதானையார்' முதலிய பட்டம், பதவிகளைக் கேட்ட உடன் எதுவித ஆய்வுமின்றி அவர்கள் அனைவரும் உயர்ந்தவர்கள் என்ற முற்கூட்டிய அவசர முடிவுக்கு வரும் ஒரு சாரார் இன்னமும் எம்முள் இருக்கத்தான் செய்கிறார்கள்!..

இப்படிப்பட்ட ஒருவரே பிரபல வங்கி முகாமையாளர் அருளம்பலம் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா?..

அது, அவரின் பலவீனம்!

'முதலியார் அரசகேசரி'யைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்!..

அவர் ஊரறிந்த பிரமுகர். ராஜசேகரன் முதலியார் அரசகேசரியின் கொள்ளுப்பேரன் என்ற ஒரே காரணத்துக்காக அவனைச் சரிவர விசாரணை செய்து அறிந்திராத போதும் வங்கியின் சிற்றூழியனாக நியமித்துள்ளார் வங்கி முகாமையாளர் அருளம்பலம்.

அன்பு செலுத்தி வளர்த்தல் ஆரோக்கியமானது; செல்லங் கொடுத்து வளர்த்தல் கெடுதல் தருவது. ராஜசேகரன் அதிகப்படியாக செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டவன். செல்லமே வளர்ச்சியைப் பாதிக்கும் போது, அதிகப்படியான செல்லம் எத்துணை தீங்கினை ஏற்படுத்தும்?..

செல்லத்தின் விளைவாக ராஜசேகரனின் அகத்தில் ஆடம்பரம் - வீண் படாடோபம் - துராசை - ஆணவம் - அகந்தை முதலிய துர்க்குணங்கள் குடிகொண்டு விட்டன.

அவன் எப்பொழுதும் மடிப்புக் குலையாத உடுப்பு - தொடர்ச்சி அறாத சிகரெட் புகைப்பு - அதிகப்படியான மது போதை வார்ப்பு - விலை மாதுக்களின் அணைப்பு முதலிய தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிவிட்டான்.

ராஜசேகரனுக்குப் பள்ளிப் படிப்புச் செல்லவில்லை. செல்லத்தின் இன்னொரு பாதிப்பு அது. முக்கித்தக்கி O/L வரை ஒருவாறு ஏறினான்; ஆனால், O/L வகுப்பைத் தாண்டினான் இல்லை!

அவனுக்கு இப்பொழுது வயசு முப்பது. இன்னமும் வேலை வெட்டி இல்லாமல் - வீட்டுக்குப் பாரமாக ஆடம்பர செலவுக்குத் தன்னும் வழி தேடாமல் இருக்க முடியுமா?..

எனவேதான், செல்வாக்கைப் பாவித்து வங்கியில் சிற்றூழியனாகச் சேர்ந்துகொண்டான்.

ராஜசேகரன் பெரிய இடத்துப் பிள்ளை அல்லவா?..

எனவே, அவன் வங்கியிலும் பெரிதாகக் கட்டுப்படுத்தப்படுவது இல்லை! நீட்டுக் கயிற்றில் கட்டப்பட்டுள்ளான்.

அவன் வங்கியுள் சுழன்றடித்து ஓடியாடித் திரிவான். அலுவலர்களுடன் அளவுக்கதிகமாக அளவளாவுவான்; சிரித்து மகிழுவான். செல்வாக்குள்ள ஒரு பெரியாள் போன்று காட்டிக் கொள்ளுவான். ஆனால், அலுவலகர் யாரும் அவனை அதிகப்படியாகக் கவனிப்பதில்லை; கண்டிப்பதும் இல்லை!

வேறொன்று. ராஜசேகரனுக்கு தான் பெரிய 'அடிகொடியை'ச் சேர்ந்தவன் என்ற உணர்வும், சாதித் தடிப்பும் ஜாஸ்தி. தான் முதலியார் பரம்பரை என அலட்டுவான்; பெரிய சாதிமான் எனப் பீற்றித் தள்ளுவான்.

முகாமையாளர் அருளம்பலமோ எளிமையான, கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவர் - நல்லவர் - கல்விமான் - கனவான் - குணக் குன்று - ஒழுக்கசீலர் - நம்பிக்கைக்குரியவர்.

அயராத உழைப்பால் வங்கியில் எழுது வினைஞன் என்ற நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து முகாமையாளர் என்ற உயர் ஸ்தானத்திற்கு உயர்ந்திட்ட முயற்சியாளர்; மிக மதிப்புக்குரியவர்.

சுருங்கச் சொன்னால், அவர் ஒரு மாமனிதனாக மதிக்கப்படுகின்றார்!

ஆனால் பரிதாபம்! கோணல் அளவு கோலின் பிரகாரம் ராஜசேகரம் அவரைக் குறைந்த சாதிக்காரன் என மதிக்கின்றான்.

கடைநிலை ஊழியனான ராஜசேகரன் வங்கி முதல்வரை வெளிப்படையாக அவமதிக்க முடியுமா?..

ராஜசேகரனும் அதே வங்கியில் தொழில் புரியும் ஒரே ஒரு காரணத்தினால் சம்பிரதாயத்துக்கு வங்கி முகாமையாளரை மதிக்கின்றான். கீழ்ப்படிவு, மட்டுமரியாதை போன்று பாசாங்கு செய்கின்றான் - எல்லாம் வெறும் நடிப்பு!

ராஜசேகரனுக்கு ஆங்கிலத்தில் மோகம் - பரம்பரை வழி மனநிலை அது. ஆங்கிலத்தில் பேசுவோர் 'படித்தவர்', 'பெரிய மனிதர்' என்ற தப்பெண்ணம் அவனுக்கு.

தமிழர் பிரதேசம், வாடிக்கையாளர் தமிழர் என்ற நல்லெண்ணத்தில் முகாமையாளர் பேச்சுத் தமிழில் பணிவாகப் பேச, ஆங்கில அறிவு பூஜ்ஜியமான ராஜசேகரன் புறோக்கின் இன்கிலீசில் விளாசித் தள்ளுகிறான்.

ஒரு தடவை... ஒரு நல்ல முஸ்பாத்தி!

'நான் யாழ்ப்பாணப் பட்டணத்தில் வளர்ந்தவன்' எனச் சொல்ல வந்து 'ஐ ஆம் மேட் இன் ஜப்னா ரவுண்', [I am made in Jaffna town] என வெளுத்து வாங்கினான். - ஒரே சிரிப்புத்தான்!

இன்னொரு தடவை... நான் நன்றாகத் தட்டச்சு செய்யக் கூடியவன் எனச் சொல்ல வந்து 'ஐ ஆம் ஏ குட் ரைப்பிறைற்றர்' [I am a good typewriter] என்று விளாசித் தள்ளினான். - சிரிப்புத்தான்!

மற்றொரு தடவை... பெரும் நகைச்சுவை நாடகமே வங்கியினுள் அரங்கேறியது.

வங்கி அலுவலாக வங்கி முதல்வரைச் சந்திக்க இரு வங்கி பெண் வாடிக்கையாளர்கள் வந்திருந்தனர். ராஜசேகரன் அவர்களுள் ஒருவரிடம் வந்த காரணத்தை ஆங்கிலத்தில் விசாரிக்கின்றான்.

"குட் மோனிங் மடம்"

"வணக்கம்"

"வை கேம்?" [Why came?]

"முகாமையாளரைச் சந்திக்க"

"அவுட்சைட் வெயிற் பிளீஸ்" [Outside wait please]

வங்கி முகாமையாளரின் அறையில் நுழைந்த ராஜசேகரன் வங்கி முகாமையாளரிடம்,

"சேர், காஸ் கம் ரூ லேடீஸ். ஐ கீப் வன், யூ கீப் வன்."
[Sir, has come two ladies. I keep one. you keep one]

முகாமைளாருக்குத் தலை சுற்றியது. 'ஒரு பெண்ணை நான் வைத்திருக்கிறேன் என்று சொல்கிறான். இன்னொருத்தியை என்னை வைத்திருக்கச் சொல்லுகிறான்...' இவன் என்னைத் தப்பாகப் புரிந்துவிட்டானா?.. கீழ்மைப் படுத்துகிறானா?.. கேவலப்

படுத்துகின்றானா எனப் பல்வேறு விதமாக யோசித்து - ஒன்றுமே விளங்காது தடுமாறுகின்றார் முகாமையாளர்.

'விமலா இங்க வா அம்மா!' - வங்கி முகாமையாளர் தனது செக்றட்டரியை அழைக்கிறார்.

"இவன் ராஜசேகரன் ஏதோ அலம்புகிறான். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. விசாரியுங்கோ அம்மா"

விமலா விபரமாக விசாரித்தாள். நடந்தேறிய விடயம் தெளிவானது.

வங்கி முகாமையாளரை இரு வேறு பெண் வாடிக்கையாளர் சந்திக்க வர, அவர்களில் ஒருவரை வெளியே நிறுத்தி, மற்றவரை முகாமையாளரைச் சந்திக்க அனுமதிப்பதாக தான் அறிந்த ஆங்கிலத்தில் ராஜசேகரன் சொல்ல விழைந்து, வந்தது விபரீதம் என்பது வெளிச்சமானது!

அதனை விமலா முகாமையாளருக்கு விளக்க, அவர் விழுந்து, விழுந்து சிரிக்க, விமலா சிரிக்க, அலுவலகம் முழுவதும் வெடிச் சிரிப்பு வேகமாகப் பரவியது. அலுவல்களைக் கவனிக்க வங்கிக்கு வந்த மற்றைய வாடிக்கையாளர்களும், வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்து மகிழ்ந்தனர்.

□ □ □

இன்று வியாழக்கிழமை.

வங்கி முகாமையாளர் அருளம்பலம் அரை நாள் லீவில் ஒரு வெளி வேலையை அதாவது கலியாணம் ஒன்றினை நடத்தி வைக்கச் சென்றுவிட்டார். வங்கி மிகச் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

கலியாணம் ஒரு சாயிபாபா சமித்தியில்.

கடந்த சில மாதங்களாகக் கூட்டு பஜனையினைத் தலைமை தாங்கிப் பாடும் மதுரக் குரல் பாடகன் ஒருவனுக்கும், அப்பஜனைக் குழுப் பாடகி ஒருத்திக்கும் மெல்ல மெல்ல அரும்பிய பரிவு உணர்வு கால கதியில் காதலாக முகிழ்ந்தது. இன்று காதல் முழுமை பெற்று மலர்ந்து, சமித்தியின் நல்லாசியோடு கலியாணமாய் நிறைவேறியுள்ளது.

கலியாணம் சமித்தியின் முழு அனுசரணையோடு சமித்திக் கல்யாணமாக, சமித்தி மண்டபத்தில் சாய் சமித்தி மார்க்க விதி முறைகளுக்கும், சாதாரண நடைமுறை ஒழுங்குகளுக்கும் இணங்க மிக எளிமையாக, அதேவேளை இனிமையாக ஆராதனை, திருமாங்கல்யம் சூடல், நல்லோர் ஆசீர்வாதம், விருந்துண்ணல் போன்ற கோட்பாட்டு எல்லைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு நடைபெறுகிறது.

கலியாணப் புரோகிதர் வங்கி முகாமையாளர் அருளம்பலமே!

ஆச்சரியமாக இருக்கிறதா?..

ஆச்சரியப்படுவதற்கு அப்படியொன்றுமே இல்லை!

அடக்க ஒடுக்க பண்புகளுக்கு அவருக்குக் கிடைத்த வெகுமதி அது!

அருளம்பலம் உண்மை சாயி விசுவாசி; உயர்ந்த சாயி பக்தன்! மன ஈடுபாடோடும் சாயீசப் பக்தியோடும் அவர் ஆற்றிய புரோகிதம் பத்து மணிக்கு நிறைவெய்திட மற்றைய கடமைகளை நிறைவு செய்து, கலியாணத்தில் பங்குபற்றிய அதே மங்கலக் கோலத்தில் வேட்டி - சேட் - வீபூதிப் பூச்சு - சந்தன - குங்குமப் பொட்டுக்களுடன் புத்துணர்வும், புதுப்பொலிவுமாக வங்கிப் பணிமனைக்குப் பதினொன்றரை மணிக்கு வந்து சேர்ந்துவிட்டார்.

கொஞ்சம் வாடிக்கையாளர்கள் முகாமையாளரை சந்திக்க இன்னம் காத்திருந்தனர்.

முகாமையாளரைச் சந்திக்க வேண்டியோர் வந்து சேர்ந்த ஒழுங்குக் கிரமத்தில் வரிசையாக நின்று, ஒவ்வொருவராக அவரின் புறம்போக்கான சற்சதுர கண்ணாடித் தனியறையுள் நுழைந்து தம் கருமங்களை ஆற்றுவிக்கின்றனர்.

அரைக்கை நாசனல் சேட், வேட்டி அணிந்த ஒருவர் பயபக்தியோடு மெல்ல மெல்ல அருளம்பலத்தின் அறையுள் நுழைகின்றார். அவரின் பார்வை அச்சத்தைப் பிரதிபலிக்கின்றது. எண்ணெய் கசியும் கருநிற முகம் சற்று அதிகப்படியாக எண்ணெயை முகத்தில் ஊறச் செய்கின்றது.

அவர் தன்னை இரும்புக் கடை நிர்வாக உரிமையாளர் இம்மானுவேற்பிள்ளை என அறிமுகப்படுத்துகிறார்.

"வாங்கோ இம்மானுவேற்பிள்ளை! இருங்கோ. என்ன விடயம்?.. சொல்லுங்கோ! என்ன செய்ய வேணும்?"

முகாமையாளர் உற்சாகமாகவும் அதே நேரம் பணிவாகவும் விசாரிக்கின்றார்.

"சேர் ஒரு OD ஒழுங்கு செய்து தரவேண்டும்"

"அதுக்கென்ன! செய்வம்... உங்கடை தானே 'இம்மானுவேற்பிள்ளை காட்வெயார் ஸ்ரோர்ஸ்'? அது மெய்ன் வீதியில் தானே?"

"ஓம் சேர்"

"உங்களுக்கு எங்கடை வங்கியில் கறன்ட் எக்கவுண்டும் இருக்கு. இல்லையா?"

"என்னட்டை பிக்ஸ்ட் டிபொசிற் சேட்டிபிக்கற்றும் இருக்குது சேர்... இது ஒரு அவசர தேவை சேர்..."

"சொல்லுங்கோ"

"ஒரு OD ஒழுங்கு செய்து தந்தால், உங்களை முந்திப் போலை கவனிப்பன் சேர்?!.."

"மு..ந்..தி..ப்.. போ..லை?!.."

வங்கியின் முகடு தகர்ந்து, நொருங்கி, சுக்கு நூறாகி முகாமையாளரின் தலைமேலே தொம் என விழுந்தது போல் இருந்தது அவருக்கு. அவர் மனப் பாதிப்பிலிருந்து மீள ஒரு கணப் பொழுது கழிந்தது.

உணர்ச்சிக்குப் பலி போகாது, அறிவு ரீதியாகச் செயற்பட வேண்டிய முக்கிய நேரம் இது என்ற எண்ணங்கள் மேலோங்க அமைதியும் நிதானமும் ஆனார். 'முந்திப்போலை!' என்ற சொல் ஒரு மர்மத்தின் மூடுமந்திரம் என எண்ணிக்கொண்டார். மர்மத்தைத் துலக்க என்ன செய்யலாம் என எண்ணினார்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக, நேற்றும் வங்கிக்கு வந்தீர்கள் தானே எனக் கதை தொடுத்தார். முன்னைய தினம் இம்மானுவேற்பிள்ளையை முகாமையாளர் வங்கியினுள் கண்ட ஞாபகமும் பளிச்சிட்டது"

"நேற்று ஒரு சின்ன அவசர வேலை சேர்"

"சொல்லுங்கோ"

"செக் ஒன்று மாற்றுவித்தனான்... ராஜசேகரனுக்கு ஒரு சின்னச் சந்தோஷம்..."

"குடுத்தீங்களா?"

"ஓம் சேர்"

மேலும் விசாரணை தொடரப்பட்டபோது ராஜசேகரன் வங்கி உயர் அதிகாரிகள், முக்கிய சிரேஷ்ட அலுவலர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களிடம் தான் உதவி பெற்றதாகப் பொய் சொல்லி, கைலஞ்சம் வாங்கும் கபட நாடகம் அம்பலமானது!

"இம்மானுவேற்பிள்ளை!"

"ஓம் சேர்"

"எனக்கு நீங்க ஒரு சின்ன உதவி செய்ய வேணும்? உங்களைக் காப்பாற்றுவது என்ரை பொறுப்பு. உங்களுக்கு இந்த வங்கியில என்ன அலுவல் எண்டாலும், எப்ப கேட்டாலும் செய்வித்துத் தாறன். இவன் ராஜசேகரம் பற்றி ஏராளம் புகார்கள் வங்கிக்கு வந்திருக்கு. இவன் எப்பிடி சந்தோஷம் வாங்கிறான்? என்ன செய்கிறான்? என்டதை விபரமாகச் சொல்ல வேணும். நேற்று என்ன செய்தான்?.. விளக்கமாகச் சொல்லுங்கோ."

முகாமையாளரின் நட்பு சிற்றூழியனான ராஜசேகரனின் நட்பைவிட பெறுமதி வாய்ந்தது அல்லவா? வாழ்க்கையில் இலாப நட்டத்தைக் கணக்கிட்டு இலாபத்தை மாத்திரமே முக்கியப்படுத்தும் அசல் வர்த்தகர் இம்மானுவேற்பிள்ளை. வங்கி முகாமையாளரே உதவுவதாக வாக்களித்த வாய்ப்பு வசதியை அவர் நழுவ விடுவாரா?..

நழுவ விடவில்லை!..

இம்மானுவேற்பிள்ளை ராஜசேகரனின் நடவடிக்கைகள் அனைத்தையும், அவனைப் பற்றி அவர் அறிந்திருந்த சகல விடயங்களையும் விபரித்தார். முன்னைய தினம் செக் மாற்ற எப்படி உதவினான் என்ற விபரமும் தெரிவிக்கப்பட்டது.

மிக இலேசாக செக் மாற்றக்கூடிய நடைமுறை ஒழுங்கு வங்கியில் இருந்த போதும், அதற்கு விலை ஏற்றி முகாமையாளரின் அனுமதி தேவையானது எனச் சோடித்து, முகாமையாளரை அணுகி ராஜசேகரன் செக் பற்றிக் கதைப்பது போல் பாசாங்கு செய்திருந்தான். முகாமையாளரின் புகார்க் கண்ணாடி அறையமைப்பு - உள் நடப்பனவற்றை மங்கலாகக் காட்டும்; ஆனால், உரையாடலை வெளியே நிற்போர் கேட்க முடியாது.

உண்மையில் ராஜசேகரன் இன்றைய தினம் முக்கிய உறவினர் ஒருவரின் செத்தவீடு ஒன்று என்றும் அதிற்தான் பங்குபற்ற அரை நாள் லீவு தரும்படியும்தான் நேற்று வேண்டியிருந்தான். முகாமையாளர் லீவுக்குச் சம்மதிப்பதாகத் தலை அசைத்ததைக் கண்ணாடி அறைக்கு வெளியே தொலைவில் நின்று கூர்ந்து கவனித்த இம்மானுவேற்பிள்ளை தன் செக்கினை மாற்ற அனுமதி வழங்கியதாக எடுத்துக் கொண்டார். மாற்றப்பட்ட செக் தொகையில் ஒரு நூறு ரூபாவைக் கைக்கூலியாக ராஜசேகரனுக்குக் கொடுத்தும் இருந்தார்.

இந்த வகையில் பலரை வெற்றிகரமாக ஏமாற்றி - கைக்கூலி வேண்டி, இரத்தத்தை உறிஞ்சி தன் சொந்த வாழ்க்கையைச் சுவை ஆக்குபவன் ராஜசேகரன்.

இம்மானுவேற்பிள்ளையின் OD சுணக்கமின்றி செய்விக்கப்பட்டு, அவர் மரியாதையாக வழியனுப்பப்பட்டார்.

பிற்பகல் ஒரு மணி.

'குட் ஆவ்ற்ற நூண் சேர்' என்ற வாழ்த்தொலியோடு ராஜசேகரன் முகாமையாளரின் அறையினுள் நுழைகின்றான். அவனைக் கண்டதுமே வங்கி முகாமையாளருக்கு கோபம் கொப்பளிக்கிறது.

அவனை வேலையிலிருந்து இரண்டு கிழமைக்கு இடைநிறுத்தம் செய்வதாக ஆங்கிலத்தில் சத்தமிட்டார். விமலாவை அழைத்தார். அவளிடம் இராஜசேகரனின் இடைநிறுத்தத்திற்கான முழு விபரங்களையும் சொல்லி, இடைநிறுத்தற் கடிதம் ஒன்று உடன் ரைப் பண்ணும்படி பணித்தார்.

"சேர்!.. ஏன் சேர்?..." - ராஜசேகரனுக்கு வார்த்தைகள் வரவில்லை.

"நீ வங்கியின் நற்பெயரை நாசமாக்கி விட்டாய்!"

"சேர்... சேர்..."

"நீ லஞ்ச ஊழற் பேர்வழி. எங்கடை பெயரைச் சொல்லி இலஞ்சம் வாங்கி உள்ளாய். உன்ரை ஊத்தை வேலைக்குப் போதிய ஆதாரம் கைவசம் இருக்கு. உன்னிலை கடும் நடவடிக்கை எடுக்காமல் விட முடியாது. முதல் உடன் நடவடிக்கையாக உன்னை இண்டையில் இருந்து இரண்டு கிழமைக்கு வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்கிறன். அதுக்குள் அலுவலக விசாரணைகள் நடைபெறும்"

ராஜசேகரன் இன்று செத்தவீடு தனக்குத்தான் என்று எண்ணிக் கொண்டான்!.. அவனது உடல் நடுங்கியது; வியர்த்தது; வியர்வை மணி மணியாகக் கொட்டியது; செய்வதறியாது மரமானான்!

அவனால் இன்னும் நிலையாக நிற்க முடியவில்லை. புயலுள் சிக்கிய விருட்சம் பாட்டற விழுவதுபோல் பாட்டற விழுந்து முகாமையாளரின் கால்களை இறுகப் பற்றினான்; பாதங்களைத் தடவினான்; தன்னை இம்முறை - ஒரே ஒரு முறை - கடைசி முறையாக மனமார மன்னிக்கும்படி கெஞ்சினான்; இனிமேல் இப்படியான வேலைகள் செய்ய மாட்டேன் எனச் சத்தியம் செய்தான்; கண்ணீரால் பாத பூசையும் செய்தான்.

அருளம்பலம் உத்தமர்; உயர்ந்தவர்; காலைப்பிடித்தவனை உதறுபவரோ அல்லது உதைப்பவரோ அல்ல.

என்னவோ தெரியாது, அவருக்கு அவனில் அனுதாபம் பிறந்தது! அவரின் மன்னிக்கும் - மறக்கும் சுபாவம் அவனை மனமார மன்னித்து அருளியது.

பாவமன்னிப்பு ஒரு நல்ல ஆயுதம்தான்! ஆனால், அப்பண்புக்கு ராஜசேகரன் என்ற சமூக ஒட்டுண்ணியை வெட்டி வீழ்த்தும் பாரிய ஆற்றல் உண்டா?...

**வீரகேசரி 28-07-1996**

## எமது முன்னைய வெளியீடுகள்

**வேல் அமுதன் எழுதி**
**வேல் வெளியீடாக மலர்ந்தவை**

- ☐ அறுவடை - நாடகம்
- ☐ வைகறை - சிறுகதைத் தொகுப்பு
- ☐ மாரீசம் - சிறுகதைத் தொகுப்பு
  [சாகித்திய மண்டல தேசிய விருது பெற்ற நூல்]
- ☐ வாழும் வழி - நாடகத் தொகுப்பு

**வேல் அமுதன் பற்றியவை**

- ☐ அமுதனின் எழுத்துக்கள்
  ஓர் கண்ணோட்டம்
  ~கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர்

- ☐ தனி மனித நிறுவனம்
  ~ கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன்

**ஏனையவை**

- ☐ ஈழத்தில் ஒப்பனைக் கலை
  ~ கலாநிதி இ. பாலசுந்தரம்

வேல் அமுதனின் அடுத்த வெளியீடு

**வழித்துணை - சிறுகதைத் தொகுப்பு**

நிச வாழ்க்கைச் சிக்கல்களின் அழகிய சித்தரிப்பு இது!



இவர் மாயெழு, குரும்பசிட்டியூர் **வேல் அமுதன்**.

ஒரு எழுத்தாளன் எப்படி இருக்க வேண்டும்?... ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும்?... போன்ற கேள்விகளுக்குச் சிறந்த நிதர்சனம் இவர்.

இலங்கையின் வரலாற்றில் 1958க்குப் பின் தமிழ் மக்களைப் பாதித்த ஒவ்வொரு அரசியல் நிகழ்விலும் இழப்புக்களைச் சந்தித்தவர் இவர். ஆனாலும் , இவர் என்றும் மனம் தளர்ந்து விடவில்லை!; மீண்டும் தொடரும் மிடுக்குடன் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்பவர்.

மனிதம் இவர் உயிர் மூச்சு; கலை, இலக்கியம் இவர் தொழில்; வள்ளுவம் இவர் வாழ்க்கை வழி.

எப்பொழுதும் எதையும் புதிதாகவும், புதுமையாகவும், அழகாகவும், சிறப்பாகவும் செய்ய வேண்டும் எனச் சதா சிந்தித்துக் கொண்டிருப்பவர்; செயலிலும் சாதிப்பவர்.

இலங்கை அறிவு இயக்கம், தகவம், மதி அக்கடமி, மகவம் எனும் கலை, இலக்கிய, கலாசார, கல்வி அமைப்புக்கள் இவரின் சாதனைகள்.

ஒரு அலுவலகராக, ஆசிரியராக, எழுத்தாளராக, பேச்சாளராக, நிர்வாகியாக, நாடக ஆசிரியராக, நெறியாளராக, திருமண ஆலோசகராக, குடும்பத் தலைவனாக அமையும் இவரது ஒவ்வொரு பரிமாணமும் தனித்துவமானவை; அவை இவர் **ஒரு தனிமனித நிறுவனம்** என்பதை உறுதி செய்வன.

**ஓர்மம்** இவரின் ஐந்தாவது நூல்; இவரின் இலட்சிய வேட்கைக்குக் கிடைத்த வெற்றி இது!

**கவிஞர் மாவை வரோதயன்**

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195.